# தமிழரசு

1-5-1983. 75 காசு

திருவள்ளுவர் ஆண்டு 2014

ருத்ரோத்காரி — சித்திரை 18











# மேலான மேநாள்

பேரறிஞர் அண்ணா

அகில உலகமெங்கும் அகமகிழ்ந்து கொண்டாடப்படும் இம்மேதின விழாவை-கட்சி-கருத்து வேற்றுமை இன்றி அனைவரும் கொண்டாடுவதைப்பற்றிப் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

ஆண்டுக்கொரு முறை நடத்தப்படும் இதுபோன்ற மக்கள் திருநாளில் நமது சொந்த நாட்டுக் காரியங்களைச் சற்றுப் பின்னால் வைத்து, முதலாவதாக உலக நிகழ்ச்சிகளை உங்கள் மனக்கண் முன் கொண்டுவந்து சிந்திக்க வைக்கவேண்டும் என்பதே எனது எண்ணமாகும்.

இதே சமயத்தில், மேல்நாடுகளிலே இன்று இவ்விழாவைப் பாட்டாளி மக்கள் கொண்டாடும் குதூகலத்தை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

குறிப்பாக, மாஸ்கோவில் மேதின விழாவாகிய இன்று நாட்டு மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து மகிழ்ச்சி கொண்டாடுவர். வீதிகளிலெல்லாம் தொழிலாளர்கள் ஊர்வலம் வருவார்கள். முதலாளித்துவம் தங்களைப் படுத்திய கொடுமைகளையும் அதை அறவே ஒழித்துப் பொதுவுடைமையை நிலைபெறச் செய்த போராட்ட விடுதலை கீதங்களை அந்நாட்டு மக்கள் வீதிகள் தோறும் முழக்கி, வெற்றிச் சங்கு ஊதுவர். ஒவ்வொரு தெருவிலும் தோரணங்கள் அலங்கரிக்கப் பட்டிருக்கும். அந்நாட்டு மக்கள் உள்ளத்திலே பெரும் மகிழ்ச்சி மட்டுமல்ல, தலைநிமிர்ந்து வாழும் தன்மானமும் குடிகொண்டிருக்கும்.

ஜார் மன்னன் ஆட்சியிலே அவனால் இழைக்கப்பட்ட கொடுமைகளை ஒழிக்க எப்படி அந்நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து ஒருமித்துப் போராடினார்களோ, பிரான்சிலே பணப் பட்டாளத்தின் கொடுமைகளை எதிர்த்துப் பல பட்டினிப் பட்டாளங்கள் ஒன்று சேர்ந்து. தங்கள் புரட்சிச் சக்தியின் மூலம் லூயி மன்னருக்கு அறிவுறுத்தினார்களோ, அதேபோன்று நம் நாட்டுத் தொழிலாளர்கள் அனைவரும் ஒன்று சேர வேண்டும். மக்களின் சக்தி அதன் மூலம் ஒன்று திரண்டு மக்களை வாட்டி வதைக்கும் முதலாளித்துவத்திற்குப் புத்தி புகட்ட வேண்டும்.

தொழிலாளர்கள் தங்கள் சிறு வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட்டால், இந்நாட்டு முதலாளித்துவம் இருக்கும் இடம் தெரியாமலே போய்விடும் என்பது திண்ணம்.

பல்வேறு பேதங்களின் காரணமாக ஏற்பட்ட வர்க்கப் போராட்டம் இன்றும் தீர்ந்தபாடில்லை. பணப் பட்டாளத்திற்கும், பட்டினிப் பட்டாளத்திற்கும் முண்ட மோதுதல் இன்னும் நிற்கவில்லை.

போராட்டங்கள் பல கட்டங்களைத் தாண்டிக்கொண்டு வந்திருக்கின்றன- இன்னும் தாண்டவேண்டிய கட்டங்கள் ஏராளமாக இருக்கின்றன.

பாட்டாளிகள் போராட்ட முயற்சியின் இடையிலே ஓர் நாள் ஓய்வு பெற்று நின்று, சென்ற கால-வருங்காலக் கணக்கைப் பார்க்கும் திருநாளே இம் மேநாள். சென்ற காலங்களில் மகத்தான வெற்றிகளைக் காண முடியாவிட்டாலும், கண்ட சிறு சிறு வெற்றிகளை நினைந்து, மகிழ்ந்து, உள்ளத்தை ஊக்குவித்துக் கொள்ளவும், வருங்காலத்தில் ஆற்றவேண்டிய செயல்களை எண்ணிச் செயலாற்றும் நெறியிலே உறுதி கொள்ளவும் இம் மே நாள் பயன்படுகின்றது.

*[திரு.வி.க. தலைமையில் 1949 மே தின விழாவில் ஆற்றிய உரையிலிருந்து...]*

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2014
ருத்ரோத்காரி — சித்திரை 18
இதழ்: 21
மலர்: 13
1-5-1983



# சென்னைக்குக் கிருஷ்ணா நதி நீர்

சென்னை மாநகருக்கு கிருஷ்ணாநதி நீரைக் கொண்டு வருவதற்குத் தமிழ்நாடு அரசும், ஆந்திர மாநில அரசும் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டன.

இந்த ஒப்பந்தத்தில் தமிழ்நாடு அரசு சார்பில் மாண்புமிகு முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். அவர்களும் ஆந்திர மாநில சார்பில் அம்மாநில மாண்புமிகு முதல்வர் திரு என். டி. ஆர். அவர்களும் கையெழுத்திட்டனர். 25 ஆண்டு காலமாக நிலவிய முட்டுக் கட்டைகள் இதன் மூலம் தீர்ந்தது.

கடந்த 19.4.83 அன்று ஐதராபாத்தில் கையெழுத்திடப் பட்ட இந்த உடன்பாட்டினால் ஆந்திரத்தில் வறட்சி நிலவும் ராயலசீமா, நெல்லூர் பகுதிகளில் 2.6 இலட்சம் ஹெக்டேர் நிலம் பாசன வசதி பெற வகை செய்யப்பட்டுள்ளது. ரூ. 720 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ள இத்திட்டம் நிறைவேற 3 முதல் 6 ஆண்டுகள் வரை ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முன்பே, கிருஷ்ணா நதி நீர்ப் பாசனம் பெறும் ஆந்திரம், கருநாடகம், மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்கள் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டன. அதன்படி சென்னைக்குக் குடிநீர் வழங்க ஒவ்வொரு மாநிலமும் 500 கோடி கனஅடி நீரை அளிப்பதென ஒப்புக்கொண்டன.

இவ்வாறு மொத்தம் 1500 கோடி கன அடிநீர் கிடைக்க வகை செய்யப்பட்டது. ஆனால் உண்மையில் நீரில் ஆவியானது போக, 1200 கோடி கனஅடி நீர் சென்னைக்கு வந்து சேரும்.

கிருஷ்ணா நதி நீரைத் தேக்கி வைத்துள்ள ஸ்ரீசைலம் நீர்த்தேக்கத்திலிருந்து பணகசேர்லா என்ற இடம் வரை 21 கி.மீ. நீளமுள்ள ஒரு கால்வாய் மூலம் நீரைக் கொண்டுவந்து, அங்கு ஒரு சிறிய அணை அமைக்கப்படும். அங்கிருந்து இடது கால்வாய் மூலம் திறந்து விடப்படும் நீர் 1.1 இலட்சம் எக்டேர் நிலத்திற்குப் பாசனவசதி அளிப்பதுடன் சென்னைக்குக் குடிநீர் வழங்கவும் உதவும்.

இந்த இடது கால்வாய் மூலம் சென்னைக்குத் தேவைப்படும் நீர் பெண்ணையாற்றில் திருப்பி விடப்படும். இந்த நீர் சோமசிலா அணையிலிருந்து வெள்ள நீர் பாயும் ஒரு கால்வாய் மூலம் கொண்டு செல்லப்பட்டு, கண்டலேரு நீர்த்தேக்கத்தில் சேர்க்கப்படும். அங்கிருந்து ஒரு பொதுக் கால்வாய் மூலம் ஆந்திர-தமிழக எல்லைக்குக் கிருஷ்ணா நீர் கொண்டு செல்லப்படும். வழியில் இக்கால்வாயில் பாயும் நீர் நெல்லூர், சித்தூர் மாவட்டங்களில் 1.2 இலட்சம் எக்டேர் நிலத்திற்குப் பாசன வசதி அளிக்கும்.

ஆந்திர எல்லைக்குள் இத்திட்டத்திற்கான கால்வாய்களை ஆந்திர அரசு அமைக்கும்.

தமிழ்நாட்டின் வழியாக கிருஷ்ணா நீர் செல்லும் கால்வாய்கள் முதலிய கட்டுமானங்களைத் தமிழ்நாடு அரசு தனது செலவில் அமைக்கும்.

ஆந்திர அரசுக்கு ரூ.500 கோடியும், தமிழக அரசுக்கு ரூ.220 கோடியும் இத்திட்டத்தை நிறைவேற்ற செலவாகும் என்று மாண்புமிகு ஆந்திர நிதியமைச்சர் திரு என்.பாஸ்கரராவ் அவர்கள் கூறினார். விரைவில் இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக உடனடியாக ரூ. 30 கோடி அனுமதிக்க தமிழக அரசு இசைந்துள்ளதாகவும் அவர் கூறினார். பின்னர் 6 மாதத்திற்கு ஒருமுறை ரூ 30 கோடி வீதம், தமிழக அரசு அனுமதிக்கும்.



# தமிழ்நாட்டில் தொழிலாளர் நலன்

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்

## திரு எஸ். இராகவானந்தம்

தொழிலாளர் நல்வாழ்வுக்காக தமிழ்நாடு அரசு பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகிறது.

1982-ஆம் ஆண்டு தொடக்கத்தில், 1948-ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் 10'444 தொழிற்சாலைகள் இருந்தன. இந்த ஆண்டில் 537 தொழிற்சாலைகள் நீக்கம் செய்யப்பட்டன. 1558 தொழிற்சாலைகள் புதிதாகப் பதிவு செய்யப்பட்டன. எனவே, ஆண்டின் இறுதியில் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 11,465 ஆக உயர்ந்தது. 1982ஆம் ஆண்டின் இறுதியில், இச்சட்டத்தின் கீழ் பணிபுரிவோரின் எண்ணிக்கை 7,01,450 ஆகும்.

**குறைந்த அளவு ஊதியச் சட்டம் :**

பின்வரும் வேலைகளுக்கு குறைந்தளவு ஊதிய வீதங்களை அரசு 1982-83-ஆம் ஆண்டில் முதல் முறையாக நிர்ணயித்துள்ளது.

1) திரைப்படத் தொழிலில் வேலை.

2) முந்திரித் தொழிலில் வேலை.

ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு ஊதிய வீதங்கள் பின்வரும் வேலைகளுக்குத் திருத்தியமைக்கப்பட்டன:—

1. கம்பளி விரிப்புகள் தயாரித்தல் மற்றும் சால்வை நெய்யும் நிறுவனங்களில் வேலை.

2. பொன் ஆபரணம் செய்யும் தொழிற்சாலையில் வேலை.

3. பருத்தியிலிருந்து விதையை நீக்குதல், அழுத்துதல் மற்றும் கழிவுப்பருத்தித் தொழில்களில் வேலை.

4. வாசனைப் புகையிலை தயாரிக்கும் தொழிலில் வேலை.

5. திரையரங்குகளில் வேலை.

6. உணவகங்களில் வேலை.

7. புகையிலை தொழிற்சாலையில் (பீடி தயாரிப்பு உட்பட) வேலை.

8. வெட்டுமரத் தொழிலில் வேலை.

1982-83ஆம் ஆண்டில் குறைந்த அளவு ஊதிய வீதங்கள் நிர்ணயிக்கப்பட்ட அல்லது திருத்தியமைக்கப்பட்ட வேலைகளைப் பொறுத்தமட்டில் ,அடிப்படை ஊதியங்களுடன், மாறக்கூடிய அகவிலைப்படிகளுக்கு வகை 'செய்யும் விதித்துறைகள் இயற்றப்பட்டுள்ளன. தனியாக அகவிலைப்படி நிர்ணயிக்கப்படாத சில இனங்களைப் பொறுத்தமட்டில், குறைந்தளவு ஊதியங்களில் அகவிலைப்படியும் சேர்த்துநிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஆய்வு ஆண்டில், மலைத் தோட்டங்களில் வேலைக்கு குறைந்தளவு ஊதியவீதங்களைத் திருத்தியமைப்பது குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்க ஆலோசனைக் குழு ஒன்றினை அரசு அமைத்துள்ளது.

பின் வரும் வேலைகளுக்கான குறைந்தளவு ஊதிய வீதங்களை நிர்ணயிக்க திருத்தியமைக்கக் குறைந்தளவு ஊதிய வீதங்களைக் குறித்த ஆலோசனைக் குழுக்களை அமைப்பது பற்றிய செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

1. தோல் பதனிடுதல் மற்றும தோல் பொருள் தயாரிப்புத் தொழிற்சாலைகளில் வேலை.

2. செங்கற்கள் தயாரிக்கும் தொழிலில் வேலை.

3. சவ்வரிசி தயாரிக்கும் தொழிலில் வேலை.

4. மோட்டார் வண்டி பணிக் களரியில் வேலை.

5. அச்சகங்களில் வேலை.

6. பொருள்களை ஏற்றி இறக்கும் தொழிலில் வேலை.

7. வாடகை மோட்டார்வண்டிகள் மற்றும் ஆட்டோ ரிக்ஷாக்களில் வேலை.

8. பொதுவான பொறியியல் மற்றும் ஏந்திரக் கட்டுமானத் தொழிலில் வேலை.

9. மீன்பிடித் தொழிலில் வேலை.

10. மூக்குப்பொடி தயாரிக்கும் தொழிலில் வேலை.

11. உப்பளங்களில் வேலை.

**தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டங்கள்**

தொழிலாளர் நல சட்டுறுதி திட்டங்களைப் பின்வரும் பகுதிகளுக்கு நீட்டிக்க 1982-83ல் அரசு அனுமதித்தது. இதற்கு ரூபாய் 16.65 இலட்சம் மதிப்பீட்டுச் செலவாகும்.

1. இராமநாதபுரம் மாவட்டத்தில் மானாமதுரை.

2. வட ஆர்க்காடு மாவட்டத்தில் அரியூர்.

3. தருமபுரி மாவட்டத்தில் ஒசூர்.

4. திருநெல்வேலி மாவட்டத்தில் வீரவநல்லூர்.

5. செங்கல்பட்டு மாவட்டத்தில் பாடியநல்லூர் அலமாதி, பகுதிகள்.

6. நீலகிரி மாவட்டத்தில் உதக மண்டலம்.

7. செங்கல்பட்டு மாவட்டத்தில் திருவள்ளூர், திருநின்றவூர்.

8. வட ஆர்க்காடு மாவட்டத்தில் வாலாஜா.

இப்பகுதிகளுக்குத் தொழிலாளர் நல சட்டுறுதித் திட்டம் நீட்டிக்கப்படுவதன்காரணமாகசட்டுறுதி செய்து கொண்டவர்கள் உட்பட மொத்தம் 47,204 பேர் பயன் பெறுவர்.

**சட்ட உதவி**

உயர்நீதிமன்ற வழக்குகள் தொடர்பாக, தொழிற்சங்கங்களுக்கு ஆகும் சட்டச் செலவுகளுக்காக, சில நிபந்தனைகளுக்குட்பட்டு, ரிட் மனு ஒன்றுக்கு அல்லது ரிட் மேல் முறையீடு ஒன்றுக்கு ரூ. 150 என்ற வீதத்தில் நிதியுதவி அளிப்பதற்கான திட்டம் ஒன்றுக்கு அரசு அனுமதி அளித்துள்ளது. சட்ட உதவிக்கு அனுமதி வழங்க, தொழிலாளர் நல ஆணையாளருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்கள் இழப்பீட்டுத் தொகைச் சட்டத்தின் கீழ் இழப்பீடு கோரும்,ஏழ்மை நிலையிலுள்ள, தகுதி வாய்ந்த தொழிலாளர்களுக்கு அல்லது அவர்களைச் சார்ந்திருப்பவர்களுக்கு மாநில அரசுச் செலவில் சட்ட உதவி அளிப்பதற்காக அரசு ஆண்டொன்றுக்கு ரூபாய் 1,000 ஒதுக்குகிறது. காயமடைந்த தொழிலாளர்களுக்கு, இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட வேண்டுமென இழப்பீட்டுத் தொகை கூடுதல் ஆணையாளர்கள் பிறப்பித்த ஆணைகளை எதிர்த்து நிருவாகங்கள் உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்து கொள்ளும்போது சம்பந்தப்பட்டத் தொழிலாளர்கள் உயர்நீதிமன்றத்தில் தங்கள் தரப்பை எடுத்துரைத்து வழக்காட சட்ட உதவி பெறத்தகுதியுடையவராவர். இவ்வாறு உதவி பெற, இழப்பீட்டுத் தொகை கூடுதல் ஆணையாளர்களின் முன்னிலையில் நடைபெற்ற சட்ட நடவடிக்கைகளின்போது அவர்களுக்கு அத்தகைய சட்ட உதவி அளிக்கப்பட்டிருக்க வேண்டும். 1982ஆம் ஆண்டில், இத்தகைய சட்ட உதவி வேண்டி நான்கு மனுக்கள் வரப்பெற்று, அவற்றிற்காக ரூபாய் 7,300 வழங்கப்பட்டது.

**தொழிலாளர் நலச்சட்ட ஆலோசனைக் குழுக்கள்:**

சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய மூன்று இடங்களில் சட்ட ஆலோசனைக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றை ஓய்வுபெற்ற நீதிபதிகளும், ஓய்வு பெற்ற தொழிலாளர் நல அதிகாரிகளும் நிருவகித்து வருகின்றனர். இக்குழுக்கள் 1982ஆம் ஆண்டில் 336 முறையீடுகளுக்குத் தீர்வு கண்டுள்ளன.

**சத்துணவுத் திட்டம்:**

'கேர்' நிறுவனத்தின் உதவியுடன், தொழிற்சாலைகளிலும், மலைத் தோட்டங்களிலும், பணியாற்றும் தொழிலாளர்களின் நலனைக் கருதி செயல்படுத்தப்பட்டு வருகிறது தொழிலாளர்களின் குடும்பத்தைச் சேர்ந்த பள்ளி செல்லும் வயதடையாத குழந்தைகள் கருவுற்ற மகளிர்கள், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோர் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறுகின்றனர். 1982ஆம் ஆண்டில் இத்திட்டம், 98 மையங்களைச் சேர்ந்த 87,000 பேர்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது.

மேற்கூறிய திட்டம் தவிர, உடல்நலப் பணிகள் ஒருங்கிணைந்தத் தீவிரத் திட்டமும் செயல்படுத்தப்பட்டுவருகின்றன.

**தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம்**

தொழிற்சங்க நடவடிக்கைகளின் தரத்தை உயர்த்துவது, நிருவாக வாயில்களை மேம்படுத்துவது, திறமையான தொழிலாளர் நல நிருவாகப் பணியை உருவாக்குவது ஆகியவை இந்நிலையத்தின் நோக்கங்களாகும்.

1982-ஆம் ஆண்டில் இந்நிலையம் பின்வரும் திட்டங்களைச் செயற்படுத்தியது.

அரசுச் சார்புச் செயலாளர்களுக்கும், தலைமைச் செயலகப் பிரிவு அலுவலர்களுக்கும் தொழிலாளர் நலச் சட்டங்கள் பற்றி நினைவு கூர் பயிற்சி.

பல்வேறு பொதுத்துறை நிறுவனங்களைச் சேர்ந்த இளநிலை உதவியாளர்களுக்கு, அலுவலக நடைமுறையிலும் கணக்குகளிலும் அடிப்படைப் பயிற்சி.

வணிக நிறுவனங்களைச் சேர்ந்தவேலையளிப்பவர்களுக்கு கடைகள்-நிறுவனங்கள் சட்டம், ஏனைய தொழிலாளர் நலச் சட்டங்கள் ஆகியவை குறித்த வகுப்புகள்.

இந்நிலையம் இதுவரையில் நடத்திய வகுப்புகள் கருத்தரங்குகளின் எண்ணிக்கை 160 ஆகும்; இவற்றில் 4,216 பேர்கள் கலந்து கொண்டனர்.

அடுத்த இதழில்...

**கிருஷ்ணாநந்தர் உடன்பழக்கை முழுவிவரம் —**

**துவக்க விழா நிகழ்ச்சிகள்**

## மாக்னசைட்

எடுத்துப்பயன்படுத்தும் வகையில் உள்ள இந்தியாவின் மிகப்பெரிய மாக்னசைட் கனிமப் படிவங்கள், தமிழ்நாட்டில் சேலத்தின் அருகே உள்ளன. இவை உள்நாட்டிலும் கனிமங்களைக் கொண்டு தயாரிக்கப்படும் வெப்பந்தாங்கும் பொருட்கள் செய்யப் பயன்படுத்தப்படுகின்றன. இதன் மொத்த இருப்பளவு 4 கோடி டன்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் 1கோடியே 10 இலட்சம் டன்கள். கடும் வெப்பந்தாங்கும் தரமுடையவையாம். சேலம் சாக்ஹில்ஸ் பகுதியில் சில சிறிய சுரங்கங்களுடன் கூட, மூன்று பெரும் சுரங்கங்களில் மாக்னசைட் கனிமத்தை வெட்டியெடுக்கும் பணி நடைபெற்றுவருகிறது. இதன் தற்கால உற்பத்தியளவு ஆண்டிற்கு 3,00,000 டன்களாகும். இதில் ஒரு பகுதி சுட்ட மாக்னசைட் மற்றும் கடும் வெப்பந்தாங்கும் கற்கள் தயாரிக்கப் பயன்படுத்தப்படுகிறது. குறைந்த அளவில் காணப்படும் சிறு மாக்னசைட் படிவங்கள் பல அடுத்துள்ள கோயம்புத்தூர், தர்மபுரி, பெரியார் மாவட்டங்களில் உள்ளன.

# நேரில் காணும் தெய்வம் நீரே!



—கவியரசர் பாரதியார்

இரும்பைக் காய்ச்சி உருக்கிடு வீரே!
இயந்தி ரங்கள் வகுத்திடு வீரே!
கரும்பைச் சாறு பிழிந்திடு வீரே!
கடலில் மூழ்கிநன் முத்தெடுப் பீரே!
அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயி ரந்தொழில் செய்திடு வீரே!
பெரும்பு கழ்நுமக் கேயிசைக் கின்றேன்
பிரம தேவன் கலையிங்கு நீரே !

மண்ணெ டுத்துக் குடங்கள்செய் வீரே!
மரத்தை வெட்டி மனைசெய்கு வீரே!
உண்ணக் காய்கனி தந்திடு வீரே!
உழுது நன்செய்ப் பயிரிடு வீரே!
எண்ணெய், பால், நெய் கொணர்ந்திடு வீரே!
இழையை நூற்றுநல் லாடைசெய் வீரே!
விண்ணி னின்றெமை வானவர் காப்பார்!
மேவிப் பார்மிசைக் காப்பவர் நீரே!

பாட்டும் செய்யுளும் கோத்திடு வீரே!
பரத நாட்டியக் கூத்திடு வீரே!
காட்டும் வையப் பொருள்களின் உண்மை
கண்டு சாத்திரம் சேர்த்திடு வீரே!
நாட்டி லேயறம் கூட்டிவைப் பீரே!
நாடும் இன்பங்கள் ஊட்டிவைப் பீரே!
தேட்ட மின்றி விழியெதிர் காணும்
தெய்வ மாக விளங்குவீர் நீரே!

# நீங்களே சொல்லுங்கள்



—பாவேந்தர் பாரதிதாசன்

சித்திரச் சோலைகளே! உமை நன்கு
திருத்த இப் பாரினிலே—முன்னர்
எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தன
ரோ! உங்கள் வேரினிலே!

நித்தம் திருத்திய நேர்மையி னால்மிகு
நெல்விளை நன்னிலமே! உனக்
கெத்தனை மாந்தர்கள் நெற்றி வியர்வை
இறைத்தனர் காண்கிலமே!

ஆர்த்திடும் யந்திரக் கூட்டங்களே!—உங்கள்
ஆதி அந்தம் சொல்லவோ?—நீங்கள்
ஊர்த் தொழிலாளர் உழைத்த உழைப்பில்
உதித்தது மெய் அல்லவோ?

நீர்கனல் நல்ல நிலம் வெளிகாற்றென
நின்ற இயற்கைகளே! உம்மைச்
சாரும் புவிப்பொருள் தந்ததெவை? தொழி
லாளர் தடக்கைகளே!

தாரணியே! தொழிலாளர் உழைப்புக்குச்
சாட்சியும் நீயன்றோ?—பசி
தீரும் ஏன்றால் உயிர்போகும் எனச்சொல்லும்
செல்வர்கள் நீதி நன்றோ?

[1936ல் வெளிவந்த 'பாரதிதாசன் கவிதைகள்' என்னும் நூலிலிருந்து]



# புதிய சமுதாயம்

—நாமக்கல் கவிஞர்

பாட்டாளி மக்களின் பசிதீர வேண்டும்
பணமென்ற மோகத்தின் விசைதீரவேண்டும்
கூட்டாளி வர்க்கங்கள் குணம்மாற வேண்டும்
குற்றேவல் தொழிலென்ற மனம்மாற வேண்டும்
வீட்டோடு தான்மட்டும் சுகமாக உண்டு
வேறுளோர் துன்பங்கள் கண்ணாரக் கண்டும்
நாட்டோடு சேராத தனிபோக உரிமை
நடவாது இனியென்று நாமறிதல் பெருமை.

உடலத்தின் வடிவத்தில் பேதங்கள் உண்டு
உள்ளத்தின் எண்ணத்தில் வித்யாசம் உண்டு
சடலத்தை ஆள்கின்ற பசிதாகம் எல்லாம்
சகலர்க்கும் உலகத்தில் சமமான தன்றோ!
கடலொத்த தொழிலாளர் வெகுபாடு பட்டும்
கஞ்சிக்கு வழியின்றிக் கண்ணீரைக் கொட்டும்
மடமிக்க நிலைமைக்கு மாற்றில்லை யானால்
மனிதர்க்கு அறிவுள்ள ஏற்றங்கள் ஏனோ?

பசைமிக்க தொழில்செய்து பலன்முற்றும் யாரோ
பரிவற்ற முதலாளி பறிகொண்டு போக
பசியிக்கு மிகநொந்து தொழிலாளர் எல்லாம்
பகையென்று நமையெண்ணிப் பழிகொள்ளு முன்னால்
வசைமிக்க நிலைமாற வழியொன்று சூழ்வோம்
வறுமைக்கு இடமற்ற சமுதாய வாழ்வை
இசைமிக்க முறைகண்டு ஏற்பாடு செய்வோம்
எல்லாரும் குறைவற்ற நலமெய்தி உய்வோம்!

[1956–ல் வெளிவந்த 'கீதாஞ்சலி' என்னும்
நூலிலிருந்து]



# மேநாள்

--கவிஞர் வாணிதாசன்

பெயலெலாம் பொய்த்த போதும்,
பெருநிலை வறண்ட போதும்
வயலெலாம் உழவன் தோளால்
விளைத்தனன்; வளப்பம் சேர்த்தான்;
செயலெலாம் மறந்தார், அன்னோன்
செயலினில் வாழும் செல்வர்!
புயல்தோன்ற இதுபோ தாதா?
மேதினப் புரட்சி வாழ்க!

பலபொருள் விளைத்தான் கூலி
இரவெலாம் பகலைப் போல;
உலையினில், தொழிற்கூ டத்தில்
உழைத்தனன்; தீய்ந்தான்; அன்னோன்
இலக்கியத் தோளால் வாழ்ந்தோர்
கொழுத்தனர்; ஏய்த்தே வந்தார்;
மலையெனில் எண்ணாம்? தாங்கா
விடில்மலை பிளந்தே போகும்!

படைபலம் நிலைமைக் கேற்பப்
பக்கத்து மேளம் கொட்டும்
நடைபலம் உடைய வேதக்
குருக்களை நம்பி நம்பித்
தடைபல விதித்தான் வேந்தன்;
வறுமையா தடைக்க டங்கும்?
உடைமையைப் பொதுவாய்ச் செய்த
மேவிழா உயர்க! வாழ்க!!

[1956-ல் வெளிவந்த 'வாணிதாசன்
கவிதைகள்' என்னும் நூலிலிருந்து]



—கம்பதாசன்

பரிதியதன் சுடர்ஜொலிக்கும் விண்ணதிலே
பனிமலரின் எழில்சிரிக்கும் மண்ணதிலே

ஆனால்?...ஆனால்?....

கரிச்சுரங்கம், பொற்சுரங்கம், பஞ்சினாலை
கண்ணிருள தொழிலாளர் செய்தார் வேலை

ஆனால்?....ஆனால்?....

வெறிபிடித்த பணப்பேய்கள் நஞ்சினாட்சி
விடுதலையை அடிமையெனச் செய்த சூட்சி

ஆனால்?....ஆனால்?....

பொறி பறக்க தொழிலாளர் தினமே
புரட்சி செய்ய உரிமை தந்த மே தினமே!

[1952-ல் வெளிவந்த 'தொழிலாளி' என்னும் நூலிலிருந்து

# புவியியல்- சுரங்கத்துறைக்கு புதிய இயக்ககம்




மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் புதிய இயக்ககத்தைத் துவக்கி வைத்தார்.

"வெட்டுக்கனிகள் செய்து
தங்கம் முதலாம்
வேறு பல பொருளும்
குடைந்தெடுப்போம்''

—என்று பாடினார் கவியரசர் பாரதியார் அன்று அவர் கண்ட கனவுகளை நனவாக்கும் பணியில் தமிழ்நாடு அரசு இன்று ஈடுபட்டுள்ளது.

அப்பணிகளில் ஒன்றாகத்தான் புவியியல் மற்றும் சுரங்க இயக்ககம் புதியதாக அமைக்கப்பட்டுள்ளது.

இதுநாள் வரை தொழில் வணிகத்துறையின் ஒரு பிரிவாக இயங்கிவந்த மாநிலப் புவியியல் பிரிவின் வெள்ளிவிழா ஏப்ரல் 15ஆம் நாள் கொண்டாடப்பட்டது. சென்னை கிண்டி தொழிற்பேட்டையிலுள்ள மாநில புவியியல். பிரிவு தனி இயக்ககமாக அமைக்கப்பட்டு, துவக்கிவைக்கப்பட்டது.

இவ்விழாவுக்கு மாண்புமிகு தொழில் அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு தலைமை வகித்தார். விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் தொழில்துறைச் செயலாளர் திரு மு.அ.க.தய்யப் இ.ஆ.ப. வரவேற்றார், தொழில் வணிக இயக்குநர் திரு.எஸ். சிவசுப்பிரமணியம், தமிழ்நாடு கனிம நிறுவனத் தலைவர் டாக்டர் எஸ்.சரவணன், இந்திய புவியியல் ஆய்வுத்துறை இயக்குநர் திரு கே.ரங்கநாதன், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தலைவர் திரு ஜி.எல். தாண்டன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

தமிழ்நாடு தொழில் துறையில் அடைந்துவரும் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் புவியியல் பிரிவு முன்பே பல அரும்பணிகள் செய்துள்ளது என்றாலும் புதிய இயக்ககம் மேலும் தமிழ்நாட்டின் கனிம வளங்கள் கண்டுபிடிக்கப்படவும் தொழில்கள் பெருகவும் உறுதுணையாக அமையும் என்பதை அன்றைய விழா எடுத்துரைத்தது.

**மாநிலப் புவியியல் பிரிவின் பணி**

சிறு அளவில் 1957ஆம் ஆண்டில் தொழில் துறையின் ஓர் அங்க

## கிராபைட்

குறிப்பிடத்தக்க அளவுள்ள கிராபைட் படிவம் இராமநாதபுரம் மாவட்டத்தில் சிவகங்கைக்கு அருகே உள்ளதென மாநிலப் புவியியல் பிரிவால் கண்டறிந்து சொல்லப்பட்டது. இப்பகுதியில் 2.5 இலட்சம் டன்கள் அளவிற்குக் கிராபைட் உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இங்கு கிடைக்கும் கிராபைட் கனிமம் நல்ல தகட்டமைப்பிலுள்ள வகையாக உள்ளதுடன், மிதக்க வைத்துக் கனிம மேம்பாடு செய்யவும் ஏற்றதாயுள்ளது. இக்கனிமப் படிவங்கள் மேற்கண்ட கனிம மேம்பாடு செய்யவும் ஏற்றதாயுள்ளது. இக்கனிமப் படிவங்கள் மேற்கண்ட கனிம மேம்பாட்டிற்குப்பின் 80 சதவிகிதம் நிலைத்த கார்பன் கொண்டதும் கிராபைட் கோப்பைகள் தயாரிப்பிற்கு ஏதுவான கனிமச் சேகரிப்பை அளிக்க வல்லவையுமாகும். மாநில அரசின் ஓர் அரசின் நிறுவனமான தமிழ்நாடு கனிம நிறுவனம் இங்கு சுரங்கம் ஒன்றும் கிராபைட் கோப்பைகள் உற்பத்தி செய்யும் துணை நிறுவனங்களுடன் கூடிய கனிம மேம்பாட்டுத் தொழிற்கூடம் ஒன்றும் நிறுவத் திட்டமிட்டுள்ளது.

## விவசாயத் தொழிலாளர்களுக்கு இலவச வேட்டி — சேலை

தமிழ்ப் புத்தாண்டில் தமிழ்நாடு முழுவதும் ஏழை எளிய விவசாயத் தொழிலாளர்கள் 60 இலட்சம் பேருக்கு இலவசமாக வேட்டி-சேலை வழங்கும் திட்டத்தை தமிழ்நாடு அரசு நிறைவேற்றியது.

கோ-ஆப்டெக்ஸ் கைத்தறி விற்பனை நிலையங்களில் ரூ 10 கோடி மதிப்புள்ள ஜனதா ரக வேட்டிகளும், சேலைகளும் தேக்கம் அடைந்துள்ளன. இந்தத் தேக்கத்தை நீக்கும் பொருட்டு தமிழ்நாடு அரசு 'கோ–ஆப்டெக்ஸ்' நிறுவனத்திடமிருந்து விலைக்கு வாங்கியுள்ளது.

இந்த வேட்டி சேலைகள் தமிழ்ப்புத்தாண்டு அன்று தமிழ்நாட்டின் பல இடங்களில் வழங்கப்பட்டன.

நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதுடன் 40 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கும் 30வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கும் இலவசமாக வேட்டி-சேலை கொடுக்கப்படும். இந்தத் திட்டம் தமிழ்ப் புத்தாண்டில் தொடங்கினாலும், கடந்த ஏப்ரல் 24-ஆம் தேதியன்று சென்னையைத் தவிர ஏனைய மாவட்டங்கள் முழுவதிலும் மாண்புமிகு அமைச்சர்கள் இலவசமாக வேட்டி சேலைகளை வழங்கினார்கள்.

மாகத் துவங்கப்பட்ட மாநிலப் புவியியல் பிரிவானது இப்போது நல்ல ஆயத்த நிலையிலும், உலோகக் கனிமங்கள், உலோக மல்லாத கனிமங்கள், தொழில் சார்ந்த கனிமங்கள் இவையெல்லாவற்றையும் களப் புவி ஆய்வின் மூலம் கண்டுபிடிக்கும் வல்லமை மிக்க ஒரு நிறுவனமாகவும் திகழ்ந்து வருகிறது. நிலமேற் பரப்பில் விரிவான கனிம ஆய்வுகளைச் செய்து வருவதுடன் செயற்கைக் கோள்களிலிருந்து தொலை நுட்ப உணர்வுபுவியியல் ஆய்வுகள், படப்பிடிப்பு வாயிலான ஆய்வுகள், நிலபௌதிக ஆய்வுகள், நில இரசாயன ஆய்வுகள் ஆகிய பல்வேறு நவீன முறைகளையும் மேற்கொண்டு பூமியினுள்ளே மறைந்திருக்கும் கனிமப் படிவங்களைக் கண்டுபிடித்தலையும் இம்மாநிலப் புவியியல் பிரிவு செய்து வருகிறது.

ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் உதவியுடன் 1968 லிருந்து 1975ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் செயல்பட்டு வந்த தமிழ்நாடு கனிம மேம்பாட்டுத் திட்ட அமைப்பின் பணிகள் காரணமாகப் பல கனிமப் படிவங்கள் கண்டுபிடிக்கப்பட்டதுடன் மாநிலப் புவியியல் பிரிவுக்கு நவீன தொழில் நுட்பக் கருவிகளை இப்பிரிவின் அலுவலர்களுக்குக் கொடுத்தும் வெளி நாடுகளிலும் உள்நாட்டிலும் உயர்சிறப்புமிக்க பயிற்சியளித்தும் முழுத் திறமை மிக்க அமைப்பாக இப்பிரிவு திகழவும் அது உதவியது.

மாநிலப் புவியியல் பிரிவு தற்போது தருமபுரி மாவட்டத்தில் தங்கத்திற்காகவும், சேலம், திருச்சி, கன்னியாகுமரி மாவட்டங்களில் ஆபரணக் கற்களுக்காகவும் ஏனைய பல மாவட்டங்களிலும் சுண்ணாம்புக்கல், கண்ணாடி மணல், குவார்ட்ஸ் மற்றும் வெள்ளைக் களிமண் ஆகிய கனிமங்களுக்காகவும் விரிவான ஆய்வுகளை நடத்தி வருகிறது. மாநில அரசு பல்வேறு கனிம மேம்பாட்டுக் கழகங்களை ஏற்படுத்தி மாநிலப் புவியியல் பிரிவினால் கண்டு பிடிக்கப்பட்டக் கனிமங்களை வெட்டியெடுத்து பயன் படுத்த இக்கனிமப் படிவங்களை அவற்றிடம் தக்கவாறு பிரித்து ஒப்படைத்துள்ளது. இவ்வாறு தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் சுண்ணாம்புக்கல் கலவைப் பயன்படுத்தி இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஆலங்குளம், திருச்சி மாவட்டத்திலுள்ள அரியலூர் ஆகிய இடங்களில் தொழிற்சாலைகளை அமைத்து சிமெண்ட் உற்பத்தி செய்து வருகிறது.

மாநிலப் புவியியல் பிரிவினால் கண்டுபிடிக்கப்பட்ட கருப்பு கிரானைட், சாம்பல் நிற கிரானைட், சிலிகாமணல், வெர்மிகுலைட், சுண்ணாம்புக்கல், குவார்ட்ஸ் பெல்ஸ்பார், கிராபைட் கனிமங்களை தமிழ்நாடு கனிம நிறுவனம் வெட்டியெடுத்து உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் விற்பனை செய்து வருகின்றது. சேலத்திற்கருகேயுள்ள பெரும் மாக்னசைட் சுரங்கங்களை மேற்கொண்டு நடத்தி வரும் தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம், மாக்னசைட் மேம்பாட்டுத் தொழிற்கூடம் ஒன்றினையும் வெப்பந் தாங்கிக் கற்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றையும் அமைக்கும் திட்டங்களையும் வைத்துள்ளது. தமிழ்நாடு செராமிக்ஸ் நிறுவனம், தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள கனிமப் படிவங்களை வெட்டியெடுத்து நலவாழ்வு மேம்பாட்டிற்கான பீங்கான் பாண்டங்களையும், எரியூட்டப்பட்ட களிமண் குழாய்களையும் செங்கற்களையும் கலையெழில் மிக்க பீங்கான் பொருட்களையும் தயாரித்து வருகிறது.

தமிழ்நாட்டின் கனிம நிருவாகத்தில் மாநிலப் புவியியல் பிரிவானது சுரங்க உரிம மனுக்கள் மீதான தொழில் நுட்பக் கருத்துக்களை வழங்கி வருவதுடன், கனிமங்களை அடிப்படையாகக் கொண்டு தொழிற்சாலைகள் அமைக்க தொழிலதிபர்களுக்குத் தேவையான தொழில் நுட்ப விவரங்களையும் வழங்கி சீரிய பணியாற்றி வருகிறது. காஞ்சிபுரம், கடலூர், சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி ஆகிய ஏழு இடங்களில் மண்டலச் சுரங்கக் குழுமங்கள் அமைக்கப்பட்டு அவை மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு கனிம நிருவாகத்தில் தொழில் நுட்ப யோசனைகளை வழங்கியும், இணைந்து செயல்பட்டும் வருகின்றன.

தரக்குறைவான கனிமங்களை மேம்பாடு செய்யும் பணியில் தேவையான ஆய்வு மற்றும் மேம்பாட்டு வேலைகளைச் செய்ய சேலத்தில் கனிம மேம்பாட்டு ஆய்வுக்கூடம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

இவ்வாறு பல்வேறு வகைகளில் கனிம மேம்பாட்டிலும், கனிம நிருவாகத்திலும்சிறப்பாகப் பணியாற்றி வரும் இம்மாநிலப் புவியியல் பிரிவின் நிலையினை உயர்த்தி ஏனைய மாநிலங்களில் உள்ளது போல் புவியியல் மற்றும் சுரங்க இயக்ககம் ஒன்றினை ஏற்படுத்தும் முடிவினைத் தமிழ்நாடு அரசு அறிவித்தது. அதனையொட்டி 1983 ஏப்ரல் திங்கள் 14ஆம் தேதி இந்தப் புதிய இயக்ககம் அமைக்கப்பட்டது.

—மாமுலன்

# அருங்காட்சியகம்

**திரு. ஜெ. இராசாமுகம்மது**
காப்பாட்சியர்
*அரசு அருங்காட்சியகம்*
**புதுக்கோட்டை**

"சேத்த காலேஜ்'' என்று பாமர மக்களால் செல்லமாக அழைக்கப்படும் அருங்காட்சியகம் ஒன்று புதுக்கோட்டையில் உள்ளது. புதுக்கோட்டை தன்னரசாகத் திகழ்ந்தபோது 1910-ஆம் ஆண்டு தொண்டைமான் மன்னர் மார்த்தாண்ட பைரவத் தொண்டைமான் என்பவரால் இவ்வருங்காட்சியகம் துவக்கப்பட்டது. இவ்வருங்காட்சியகத்தில் மண்ணூல், விலங்கு உயிரியல், தாவரவியல், மானிடவியல், தொல்லியல், சித்திரக்கலைப் பகுதி, கல்வெட்டியல், நாணயங்கள் ஆகியவை பற்றிய பொருள்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

''பத்தாயிரம் முறை சொல்லிக் கேட்பதைவிட ஒருமுறை பார்த்துத் தெரிந்து கொள்வது மேல்'' என்ற சீன தேசத்துப் பழமொழிக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்வது அருங்காட்சியகம். அருங்காட்சியகம் பாமரமக்களுக்கும், கற்றோர்க்கும், மாணவர்களுக்கும் பல்லாற்றானும் கல்விப் பணியாற்றுகிறது. கல்வியறிவில்லாத மக்களுக்குக் காட்சிக் கல்விதான் (Visual Education) கல்வியறிவு புகட்டுகிறது. இக்காட்சிக் கல்விக் கூடம் அருங்காட்சியகம் ஆகும். குறைந்த நேரத்திலும், குறுகலான இடத்திலும் மாணவர்கள் பெறும் ஏட்டுக் கல்வி நிரந்தரமான-ஆழமான அறிவை ஏற்படுத்துவதில்லை. பள்ளியில் கற்றவற்றை நேரில் கண்டு அவற்றை என்றும் மறக்க முடியாத அளவிற்குத் தங்கள் மனதில் பதிய வைத்துக் கொள்ள அருங்காட்சியகம் பெரிதும் துணை புரிகின்றது.

மனிதனின் வாழ்வும் வளமும் கற்காலம் முதற்கொண்டு விண்வெளிப் பயணக்காலம் வரை நிலத்துடன் தொடர்பு கொண்டதுதான். அவனது வாழ்விற்குத் தேவையான மூலப்பொருட்கள், கனிப்பொருள்களும், பாறைகளும் ஆகும். தங்கம், அலுமினியம், ஈயம், இரும்பு, நிக்கல், குரோமியம் ஆகியவற்றின் தாதுப் பொருள்களும், பலவிதப் பாறைகளும் புதுக்கோட்டைப் பகுதியின் காலத்தால் முற்பட்ட வரலாற்றை விளக்கும் 'பாசில்களும்' இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

பண்டமாற்று முறையில் இருந்து வந்த சிக்கல்களை நீக்க, மனிதன் தன் அறிவின் ஒளியால் கண்டுபிடித்த சாதனம் நாணயம் ஆகும். விசயநகர, ஆந்திர, மற்ற தென்னிந்திய அரசர்களின் நாணயங்களும், பிற்கால முகலாயர்கள், பிரஞ்சுக்காரர்கள், டச்சுக்காரர்கள், ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனியர்கள் ஆகியோர் வெளியிட்ட நாணயங்களும், புதுக்கோட்டை அம்மன் காசும், புதுக்கோட்டைக்கும் யவன வணிகர்களுக்கும் வணிக, கலை, கலாச்சாரத் தொடர்பிருந்ததற்கு ஆதாரமாகப் புதுக்கோட்டையில் கண்டெடுக்கப்பட்ட கி. பி. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ரோமானிய பொன் நாணயங்களும் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

விலங்கு உயிரியல் —முதுகெலும்பில்லாப் பிராணிகளான, கடற்பஞ்சு ( Sponges ), கடற்கவளங்கள், சங்கு, முத்துச்சிப்பி, செஞ்சிலந்தி, தேள், கடல் நண்டு வகைகள், பூரான், பட்டுப்பூச்சி இனங்கள், வெட்டுக்கிளிகள், வண்டினங்கள், கண்ணைக் கவரும் பலவண்ணக் கலவையைத் தன்னகத்தே கொண்ட வண்ணத்துப் பூச்சிகளும் இடம் பெறுகின்றன.

''பறவைகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம்'' என்பதை விளக்க சுமார் 250 வகையான பறவைகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. 77 வகையான பறவைகளின் முட்டைகளும், தூக்கணாங்குருவி போன்ற பறவைகளின் கூடுகளும், பலவகையான மீன்களும், தவளைகளும் பாம்புகளும் இப்பகுதியில் இடம் பெறுகின்றன. தேரைக்குப் பற்கள் கிடையாதென்பதும் தவளைக்குக் கீழ்த்தாடையில் பற்கள் கிடையாதென்பதும், சாரைப் பாம்பு ஆணினம் என்பதும், நாகம் பெண்ணினம் என்பதும் தவறு - சாரை, நாகம் ஆகிய இவ்விரு பாம்புகளிடையே தனித்தனியே ஆண், பெண் உண்டு என்பதையும் இவ்வருங்காட்சியகத்தில் புரிந்து கொள்ளலாம். 62 அடி நீளமுள்ள திமிங்கலத்தின் எலும்புக்கூடு காணத்தக்கது. இப்படி உயிரற்ற பிராணிகளின் மூலம் உயிரியலை விளக்குகிறது இவ்வருங்காட்சியகம்.

நமது நாட்டின் விவசாய வளர்ச்சியையும், விவசாயப் பொருள்களையும் இங்கு காணலாம்.

அருங்காட்சியக ஓவியக் கூடத்தில் தஞ்சை, ஜெய்ப்பூர், தக்காணம், மற்றும் நவீன பாணி ஓவியங்களும், புதுக்கோட்டை தனியரசினை ஆண்ட தொண்டைமான் அரசர்களின் படங்களும், புதுக்கோட்டை ஆட்சியின் புகழுக்கும், திறமைக்கும் தூண்களாக விளங்கிய ஆட்சியாளர்களின் படங்களும் இடம்பெறுகின்றன.

கலை, கைத்தொழில் பகுதி

யில், 'உழவுக்கும் தொழிலுக்கும்' வந்தனை செய்வோம்' என்பதற்கேற்பப் புதுக்கோட்டைத் தன்னரசில் திகழ்ந்த கைத்தொழில் கைவினைப் பொருள்களான பட்டு, பருத்தி, சரிகை ஆடைகளும், மணிவெங்கல், பாத்திரங்களும், தந்தம், சந்தன மரம், மாட்டுக் கொம்பு, மாக்கல், தேங்காய் ஓடு ஆகிய பொருட்களினால் செய்யப்பட்ட நுண்ணிய வேலைப்பாடமைந்த பொம்மைகளும், பல வண்ணக் கண்ணாடிகளால் ஆன பொருட்களும் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. ஒரே மரக்கட்டையில் இணைப்பில்லாமல் செய்யப்பட்ட மரச்சங்கிலியும், நெல் மணிகளைக் கொண்டு செய்யப்பட்ட தேரும், 24-2-1913-ல், ராஜா மார்த்தாண்ட பைரவத் தொண்டைமான் புது அரண்மனைக்கு அடிக்கல் நாட்டப் பயன்படுத்திய தந்தப் பிடி கொண்ட வெள்ளிக் கரண்டியும் காணத்தக்கன.




புதுக்கோட்டை - மறவர்களும், கள்ளர்களும் நிறைந்த பூமி. அவர்கள் சமீப காலம் வரை உபயோகித்து வந்த ஈட்டி, வில், அம்பு, வளைத்தடி, வளரி ஆகியவையும், ஆஸ்திரேலிய வளரியும், பட்டாக்கத்தி, போர்க் கவசம், கேடயம், பீரங்கி, அவற்றில் உபயோகித்த இரும்புக் குண்டுகள் ஆகியவையும் மானிடவியல் பகுதியில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

தொன்று தொட்டுப் பல இனத்தவரும் தங்களை அலங்கரித்துக் கொள்வதில் விருப்பம் கொண்டவர்கள்தான் என்பதை விளக்க, நாட்டுக்கோட்டைச் செட்டியார், வளநாட்டுச் செட்டியார், முகமதியர், நரிக்குறவர்கள் ஆகியோர் உபயோகித்த ஆபரணங்களும் இந்துப்பெண்கள் திருமண மாங்கல்யச் சின்னமாகப் பயன்படுத்தும் பலவகைத் தாலிகளும் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

புதுக்கோட்டையைச் சுற்றியுள்ள பாறை இருக்கைகளும், குகைகளும், இங்கு மனிதர்கள் தொன்று தொட்டு வாழ்ந்து வந்துள்ளார்கள் என்பதனை எடுத்துக் காட்டுகின்றன. புதைபொருள் ஆராய்ச்சியில் கிடைத்த பழைய-புதிய- கற்கால இரும்புக் கருவிகள், புதுக்கோட்டைப் பகுதியானது, பழைய கற்காலம் முதற்கொண்டே மக்கள் வசித்து வந்த இடம்தான் என்பதை உறுதிப்படுத்தியுள்ளன. ஆராய்ச்சி மேற்கொண்டபோது, புதுக்கோட்டையைச் சுற்றிப் பல இடங்களில் முதுமக்கள் தாழிகளும், கல்வட்டக் கல்லறைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அப்புதை குழிகளில் கண்டெடுத்த முதுமக்கள் தாழிகள், இரும்பு ஆயுதங்கள், கருப்பும், சிவப்பும கலந்த மட்பாண்டங்கள், பழைய கற்கால ஆயுதங்கள், புதிய கற்கால ஆயுதங்கள், கல்வட்டக் கல்லறையின் மாதிரி அமைப்பு ஆகியன இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

கல்வெட்டியல் பகுதியில் ராஜா விஜயரெகுநாதத் தொண்டைமான் அரசர் (1789-1807) அளித்த இனாம் நிலங்கள், நன்கொடைக் கட்டளை ஆகியவற்றைக் கொண்ட 13 செப்புத் தகடுகளும், கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தமிழ்க் கல்வெட்டுகளும், புதுக்கோட்டைத் தனியரசின் முழு வரலாற்றையும் குறித்து வைத்த 1813 ஓலைச் சுவடிகளையும் காணலாம்.

பண்டைய தமிழனின் சிற்பக் கலைக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குவது புதுக்கோட்டைப் பகுதி. சிற்பக்கலை ஒரு நாட்டின் கலைச் சிறப்பையும், நாகரிக வளர்ச்சியையும் காட்டுவதாகும். சிரித்துக் கொண்டே நம்மை வரவேற்றுக் கதைகள் பல சொல்லும் கற்சிலைகளையும் பண்டைய தமிழனின் சிறப்பைப் பல நூற்றாண்டுகளுக்குப் பின்னும் உலகிற்கு எடுத்தியம்பிக் கொண்டிருக்கும் ஐம்பொன் சிலைகளையும் இங்கு காணலாம்.

கற்சிலைகள் பகுதியில், காட்சியளிக்கும் சிற்பங்களில் நார்த்தாமலையிலிருந்து கொண்டு வரப்பட்ட ஏழுகன்னிமார் சிலைகளும், வீணாதர தட்சிணாமூர்த்தி சிலையும் வேளிர் குலத் தலைநகரான கொடும்பாளூரிலிருந்து கொண்டுவரப்பட்ட அர்த்தநாரீஸ்வரர், ரிஷி, யாளி திரிபுர அரசன் ஆகியன குறிப்பிடத்தக்கன. இவற்றில் கொடும்பாளூர் சிற்பங்கள், பார்ப்போர் மனதைக் கவர்ந்திழுப்பன, இவை கி. பி. 10-ஆம் நூற்றாண்டுச் சோழ அரசர்களின் கலைச் சின்னங்களாகும். சிற்பக்கலையில் சிறந்தவை காந்தாரச் சிற்பங்கள் என்பர். காந்தாரக் கலைச் சிற்பங்களை அமைத்த சிற்பி




களைவிடத் தமிழகத்துச்சிற்பிகள் எவ்வகையிலும் சளைத்தவர்கள் அல்லர் என்பதை உலகிற்கு எடுத்துக் கூறிக் கொண்டிருப்பன கொடும்பாளூர்ச் சிற்பங்கள்.

சமண மதம் புதுக்கோட்டையில் கி. மு. இரண்டாம் நூற்றாண்டிற்கு முன்பே பரவியிருந்தது, என்பதைச் சித்தன்ன வாசலிலுள்ள பிராமி கல்வெட்டு எழுத்து விளக்குகின்றது. சமண தீர்த்தங்கரர்களின் சிலைகளும் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

உலோகச் சிலைகளின் கலையழகிற்கு உயர்வூட்டும், புதுக்கோட்டை அருங்காட்சியகத்தில் என்றும் எழில் மாறாத இன்முகங்களுடன் பண்டைய தமிழனின் பண்பாட்டைக் கொண்டிருக்கும் பல ஐம்பொன் சிலைகளைக் காணலாம். இவற்றுள் ஆலிங்கன சந்திரசேகரர் சிலையும், 4 அடி உயரமுள்ள நடராசர் சிலையும், விஷ்ணு, இலக்குமி, பூதேவி மற்றும் கிராம தேவதைகளின் சிலைகளும் பார்ப்பவர்களுக்குப் பரவசமூட்டுவன.

அமராவதியிலிருந்து கொண்டு வரப்பட்ட புத்தமதச் சிற்பங்களும், புதுக்கோட்டையைச் சுற்றியுள்ள பல கோவில்களின் பாரிசுச் சுண்ணாம்பு மாதிரிகளும் காட்சியளிக்கின்றன.

ஆராய்ச்சியாளர்களுக்கும், மாணவர்களுக்கும் பயன்தரும் வண்ணம் கலை, தொல்லியல், மானிடவியல், வரலாறு, உயிரியல் ஆகியனவற்றில் 1300 கிடைத்தற்கரிய புத்தகங்களைக் கொண்ட அருங்காட்சியக நூலகம் ஒன்றும் உள்ளது.

தற்போது அருங்காட்சியகம் அமைந்துள்ள கட்டடம் மேலும் புதிய பொருள்களைக் காட்சிக்கு வைக்க ஏற்றதாக இல்லாததால் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் 5 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்து புதிய கட்டடம் கட்டுவதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

இந்த அருங்காட்சியகம் வருங்காலத்தில் புதிய வரலாறு படைப்பது உறுதி.

## நேருவின் காருக்குத் தடை

பண்டித நேரு அவர்கள் 1926ல் தமிழ் நாட்டில் சுற்றுப் பயணம் வந்தபோது, அவர் புதுக்கோட்டை வழியாகச் செல்ல வேண்டியிருந்தது.

நேரு, புதுக்கோட்டைக்குள் நுழைய சமஸ்தான அரசு தடையுத்தரவு போட்டது. இவ்வாறு தடையுத்தரவு போடப்பட்டுள்ள செய்தி, 16.10.1926 'இந்து'வில் வெளியாயிற்று. எனினும் நேரு தாம் திட்டமிட்டிருந்தபடி, பயணத்தை மேற்கொண்டார்.

நேரு, புதுக்கோட்டை எல்லைக்கு வந்ததும், சமஸ்தான அரசின் சார்பில் பிறப்பிக்கப்பட்டிருந்த தடையுத்தரவு அவரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. அவ்வுத்தரவில், 'புதுக்கோட்டை சமஸ்தானத்திற்குள் நேருவின் கார் நுழையக் கூடாது' என்று குறிப்பிடப்பட்டிருந்தது. தடையுத்தரவைப் பெற்ற நேரு, 'எனது கார் சமஸ்தானத்திற்குள் நுழையக் கூடாது அவ்வளவுதானே? நான் நடந்து செல்கிறேன்'' என்று கூறி ஊர்தியை நிறுத்திவிட்டுக் கீழே இறங்கி, நடந்தே புதுக்கோட்டையைக் கடந்தார். தடையுத்தரவு போட்ட அரசு, என்ன செய்வதென்று தெரியாமல் திணறியது.





## முதல் தபால் நிலையம்

புதுக்கோட்டையில் முதல் தபால் நிலையம் 1838 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இந்தத் தபால் நிலையம் புதுக்கோட்டை சமஸ்தான அரசால் தொடங்கப்பட்டது. இது, வெளியூர்களிலிருந்து வருகிற தபால்களையும் பார்சல்களையும் மட்டுமே பட்டுவாடா செய்து வந்தது.



## பொருட்காட்சிகளில் முதற் பரிசு

சென்னையில் 1855, 1857 ஆண்டுகளில் நடைபெற்ற பொருட்காட்சிகளில் புதுக்கோட்டையும் கலந்து கொண்டு முதல் பரிசாகப் பதக்கங்கள் பெற்றது.

## புதுக்கோட்டை மாவட்டம் சில தகவல்கள்

| | |
|---|---|
| மாவட்டத் தலைநகர் : | புதுக்கோட்டை |
| மொத்தப் பரப்பு : | 4649.89 சதுர கி.மீ. |
| விவசாயப் பரப்பு : | 1896.21 ,, |
| மக்கள் தொகை (1981) | 1155684 |
| கோட்டங்கள் : | 1. புதுக்கோட்டை<br>2. அறந்தாங்கி |
| நகராட்சிகள் : | 1. புதுக்கோட்டை,<br>2. அறந்தாங்கி. |
| கல்வி நிறுவனங்கள்: | பாலிடெக்னிக் 1<br>ஐ.டி.ஐ 1<br>கல்லூரிகள் 2<br>கல்வி இயல் கல்லூரி 1 |
| ஆறுகள் : | வெள்ளாறு,<br>அக்கினியாறு,<br>குண்டாறு,<br>பாம்பாறு. |
| முக்கிய விளைபொருள்கள் : | நெல், சோளம்,<br>கேழ்வரகு, துவரை,<br>பருத்தி, முந்திரி. |

## இலக்கியக் காலம்

ராஜா விஜயரகுநாதத் தொண்டைமானுக்கு போஜராஜா என்ற சிறப்புப் பெயரும் உண்டு. புதுக்கோட்டை மன்னர்களுள் இவர் பெரிதும் சிறந்து விளங்கினார். இவர் காலத்தில் இலக்கியப் பணிகளும் வளர்ச்சி பெற்றுள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்க படைப்புகள்

1. வெங்கண்ணாவின் மகன் சாம்பையா தெலுங்கில் எழுதிய 'தொண்டைமான் விஜயம்'
2. அம்புநாட்டு வளர்ந்தான்
3. வெங்கண்ணன் சேர்வை வளர்ந்தான்
4. ஆண்டப்ப மன்ன வேளார்பெயரில் குறவஞ்சி.
5. உடையப்ப மன்ன வேளார் பெயரில் குறவஞ்சி
6. திருமலைராயத் துரைபேரில் கலித்துறை
7. நல்ல பெரியான் கலியுகன் பேரில் கும்மி.
8. நாவலங்க நல்லக்குட்டிமேல் குளுவ நாடகம்
9. திருக்குளம்பூர் வைரவன்சேர்வை பேரில் கும்மி.

இவை தவிர, ராஜா ரகுநாதத் தொண்டைமானின் மாப்பிள்ளைகளில் ஒருவரான இரங்க பல்லவராயர் மீதும் கல்லாக்கோட்டை ஜமீன்தார் ஒருவர் மீதும் சேர்ந்த மங்கலம் கேசவ பாரதி என்பவர் கவிகள் பாடியுள்ளார். இவரே திருக்கோகர்ணம் கோயிலைக் குறித்து கபிலை நாடகம் என்னும் ஓர் இலக்கியப் படைப்பையும் தந்துள்ளார். மிகு புகழ்பெற்ற குமரேச சதகமும் இக்காலத்தில்தான் இயற்றப்பட்டது.

திருக்கோகர்ணம் கணபதி கவிராயர், மிதிலைப்பட்டிக் கவிராயர் காரைச்சூரன் பட்டி கவிராயர் ஆகியோர் இக்காலத்தில் புகழ்பெற்று விளங்கியவர்கள் ஆவர்.

## புதுக்கோட்டை மாவட்டப் பேரூராட்சிகள்

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள பேரூராட்சிகளில் இரண்டு தேர்வுநிலைப் பேரூராட்சியாகவும், இரண்டு இரண்டாம் நிலைப் பேரூராட்சியாகவும், ஐந்து முதல் நிலைப் பேரூராட்சியாகவும் ஆக ஒன்பது பேரூராட்சிகள் உள்ளன. பேரூராட்சி ஒன்றுக்கு ரூ. 3.42 இலட்சம் வீதம் ரூ. 13.68 இலட்சம், அரசு மானியமாக வழங்கி வேலை நடைபெற்று வருகிறது. அவை 1) அன்னவாசல் 2) இலுப்பூர் 3) கீரனூர் 4) அரிமங்களம்.

மேற்படி நான்கு பேரூராட்சிகளில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் மொத்தம் 93 இணைப்புச் சாலைகளும் 46 சிறுபாலங்களும், 30 வடிகால் கட்டும் வேலைகளும், குடிநீர் வசதிக்காகப் புதிய மின்சாரக் கருவிகளும் வாங்கப்பட்டுள்ளன.





# காகிதம் செய்வோம்








புகையிலைச் சக்கரவர்த்தி என்று புகழ் பெற்றுள்ள புதுக்கோட்டை நிஜாம் புகையிலை நிறுவனத்தினர், புதுக்கோட்டை மாவட்டம் 'புள்ளான் விடுதி'யில் 55 ஏக்கர் பரப்பளவில், மாபெரும் காகித ஆலை ஒன்றினை உருவாக்கியுள்ளனர். 1982ல் உற்பத்தி தொடங்கிய இந்த நிஜாம் காகித ஆலையில், அச்சடிப்பதற்கும் எழுதுவதற்கும் பயன்படும் தரமான பல காகிதங்களையும் தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் நீலநிறக் காகிதத்தையும் கவர்கள் (Envelopes) செய்வதற்கு வேண்டிய காகிதங்களையும் கிராப்ட் காகிதங்களையும் போக்குவரத்து நிறுவனங்களில் பயணச்சீட்டுகள் அச்சிடுவதற்குத் தேவையான கிரீம்வோவ் காகிதங்களையும் தயாரிக்கின்றனர். கழிவுக் காகிதங்களையே கச்சாப் பொருளாகப் பயன்படுத்தினாலும், காகிதத்தின் தரத்தை உயர்த்துவதற்காக காகிதக்கூழை அட்டை (Sheet) வடிவத்தில் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்கின்றனர். எதிர்காலத்தில் வைக்கோலிலிருந்தே காகிதக் கூழ் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளனர்.

இப்போது மாதத்திற்குச் சராசரி 200 மெட்ரிக் டன்தான் தயாரிக்கப்படுகிறது. என்றாலும் ஆலையின் ஆண்டு உற்பத்தித் திறனான 5000 மெட்ரிக் டன்னை விரைவில் எட்டிப்பிடித்துவிட முடியும் என்கின்றனர்.

இப்போது இந்த ஆலையில் 200 பேர் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

## புதுக்கோட்டைத் தொண்டைமான்களின் ஆட்சிக் காலம்

1. இரகுநாதராயத் தொண்டைமான்—
1686-1730
2. விஜயரகுநாதராயத் தொண்டைமான்-1
1730-1769
3. இராய இரகுநாதத் தொண்டைமான்—
1769-1789
4. விஜய இரகுநாதத் தொண்டைமான்—
1789-1807
5. விஜய இரகுநாதராயத் தொண்டைமான்
—1807-1825
6. இரகுநாதத் தொண்டைமான்—
1825-1839
7. இராமச்சந்திரத் தொண்டைமான்—
1839-1886
8. மார்த்தாண்ட பைரவத் தொண்டைமான்
—1886-1928
9. இராஜகோபாலத் தொண்டைமான்—
1928-1948







## அரசுச் சின்னம்

இதுதான் புதுக்கோட்டைத் தனியரசின் அரசுச் சின்னம். இடது பக்கத்துச் சிங்கம் வைத்துள்ள கொடியில் அனுமார் ஒரு கையில் மலையைத் தூக்கிக்கொண்டு நிற்பார். வலப் புறத்திலுள்ள சிங்கம் பிடித்திருக்கும் கொடியில் ஒரு சிங்கம் கொடியைப் பிடித்திருக்கும். கீழே உள்ள,

H.H.S.B.D.R.R.G.T.B.R.P என்பது

His Highness Sri Brahadamba Das Raja Raja Gopala Thondaiman Bahadur Pudukkottai என்பதன் சுருக்கம்.

## இசைத் தமிழ்வாணர்கள்

இசைக் கலையில் சிறந்து விளங்கிய திருவாளர்கள் மிருதங்கம் தெட்சிணாமூர்த்தி பிள்ளை, கஞ்சிரா என்னும் புதிய கருவியைக் கண்டுபிடித்த திரு. மாமுண்டியாபிள்ளை, 108 தாளங்களுக்கும் விளக்கங் கண்ட திரு சிவராம நட்டுவனார், தில்லானாக்களை உருவாக்கிய திரு சுப்பையா பாகவதர், கதாகாலாட்சேபம் திருமதி கனகாம்புஜம், வாய்ப்பாட்டு திருக் கோகர்ணம் டி. என். மாணிக்கம் ஆகியோரும்,

திரையுலகிலும், நாடக மேடைகளிலும் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்த திரு பி. யூ. சின்னப்பாவும் புதுக்கோட்டை சமஸ்தானத்தைச் சேர்ந்த புகழாளர்களேயாவர்.





# உலகம் போற்றும் கொடுங்கை



கலைக்கோயில் என்று கருதத்தக்க ஆவுடையார் கோயிலில், கதை சொல்லும் கவின்மிகு சிற்பங்கள் பல உள்ளன. இந்தக் கோயிலில் உள்ள கொடுங்கை உலகப் புகழ் பெற்றது.

## கொடுங்கை :

ஒவ்வொரு மண்டபத்தின் விளிம்பிலும் அற்புதமாக அமைக்கப்பட்டுள்ள வெய்யில் தாங்கி போல் அமைந்தவை. மரசாத்துக்கைகளை முறுக்குக் கம்பி, பட்டைக் கம்பி, திரனைக் கம்பி இவைகளால் குறுக்காக இணைத்து அதன்மேல் உலோகத் தகடு வைத்ததுபோல் கருங்கல்லிலேயே வடித்திருக்கும் சிற்பச் சிலம்பம் என்று கொள்ளத்தக்க சிற்பியின் கைவண்ணத்தை இக் கொடுங்கைகளில் கண்டு களிக்கலாம். ஒப்புவமையில்லாத இக்கொடுங் கைகளே இத்திருக்கோயிலுக்கு அணிகல னாகத் திகழ்ந்து புகழைத் தந்து வருவ தாகும். பிற்காலத்தில் பல சிற்பிகள் இதேபோல் கொடுங்கை வேலைப்பாட்டினைச் செய்ய முயன்று தோல்வியுற்றுள்ளனர். கற் சிலைகளின் முகங்கள் காட்டும் உணர்ச்சிபூர்வ மான பாவங்கள் புடைத்தெழுந்து நெளிந் தோடும் நரம்புகள் முதலியவை அற்புதம் என்று சொல்லத்தக்கன. ஒரே கல்லில் ஒன்பது அங்குல விட்டத்தில் வளையம் ஒன்றில், ஒன்றாகப் பிணைத்து, கூரைக் கல்லிலிருந்து சங்கிலித் தொடராகத் தொங்கும் அற்புத அழகு அக்காலச் சிற்பிகளின் சாமர்த்தியத்தையும் கற்பனா சக்தியையும் கைவண்ணத்தையும் விளக்குவதாக இருக்கின்றன.

இக்காலத்திலும், கோயில் திருப்பணி ஒப்பந்தங்களில், "ஆவுடையார் கோயில் கொடுங்கை நீங்கலாக" என்றுதான் சிற்பிகள் குறிப்பிடுகிறார்கள் என்றால், கொடுங்கையின் அரிய வேலைப்பாட்டை என்னென்று புகழ்வது!







# சமூக நலக் காடுகள்

நம் நாட்டின் மொத்த நிலப் பரப்பில், மூன்றில் ஒரு பாகம் (33⅓%) காடுகளாக அமைந்திருக்கிறது. இதனையே தேசிய வனக் கொள்கை என்கிறோம். தமிழ் நாட்டைப் பொறுத்தவரை 16 சதவிகிதம் மட்டுமே காடுகளின் பரப்பாக இருக்கிறது.

தமிழ்நாட்டின் விறகுத்தேவை ஆண்டொன்றுக்கு 10 மில்லியன் டன்கள் ஆகும். இதில் 10 சதவிகிதம் மட்டுமே காடுகளிலிருந்து கிடைக்கப் பெறுகிறது. சமூக நலக் காடுகள் என்ற திட்டத்தின் கீழ், ஸ்வீடன் நாட்டு உதவியுடன் பத்து ஆண்டுக் காலத்துக்கு ஒரு பெரும் திட்டத்தை 1981ஆம் ஆண்டிலிருந்து துவக்கப்பட்டுள்ளது. இதன் மொத்த மூலதனம் 108 கோடி ரூபாய். 6071 கி. மீட்டர் வரையிலான நிலப்பரப்பைப் பயன்படுத்திக் காடுகள் வளர்த்திடவும், தரிசாக உள்ள தனியார் நிலங்களில் பெருமளவு மர உற்பத்தியைச் செய்திட 500 இலட்சம் நாற்றுக்களைப் பொது மக்களுக்கு வழங்கிடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டம் ஆரம்பிக்கு முன்பு இம்மாவட்டத்தில் புறம்போக்கு நிலங்களில் வனப் பண்ணைத்திட்டம், கிராமக் காடுகள் திட்டத்தின் கீழ் 1960ஆம் ஆண்டிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட தோட்டங்கள் 9700 எக்டேர் பரப்பாகும். சாலை ஓரம் எழுப்பிய தோட்டங்கள் 76 கி.மீ. தூரம் ஆகும். சமூகக் காடுகள் திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தைப் பொறுத்தவரை 1981 மற்றும் 1982ல் மட்டும் 3332 எக்டேர் பரப்பிலும், 166 கி.மீ. தூரத்திற்கும் தோட்டங்கள் எழுப்பப்பட்டுள்ளன.

1983-84ஆம் ஆண்டில் 2000 எக்டேர் பரப்பில் தோட்டங்களும், 90 கி.மீ. தூரத் தோட்டங்களும் சுமார் 40 இலட்சம் செலவில் எழுப்பப்படும்.

இம் மாவட்டத்தில் கிராமங்களில் உள்ள ஏரிகள், கண்மாய்கள், புறம்போக்கு நிலங்கள், ஆற்றுப்படுகைகள், தரிசு நிலங்கள், சாலைகள் மற்றும் இருப்புப் பாதை இருமருங்கிலும் மரங்களை வளர்க்கவும், இம்மாவட்டத்தின் இயற்கை அமைப்பைப் பயன்படுத்தி சமூகக் காடுகள் வளர்க்கவும், ஒரு மாவட்ட வன அலுவலகம், புதுக்கோட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு ஏழு சரகங்களுடன் செயல்பட்டு வருகின்றது.

# செல்வம் டஸ்டர்

சோளக் கதிரில் பால்பிடிக்கும் பருவத்தில் கதிரைத் தாக்கி அழிக்கும் நாவாய்ப் பூச்சியைக் கட்டுப்படுத்த பிஎச்சி 10 சதம் தூளைச் சோளக் கதிர் மீது தூவுவார்கள். இதற்கு இதுவரை மருந்துத் தூளை ஒரு துணியில் பொட்டலமாகக் கட்டித் தெளிக்கும் முறையே கையாண்டு வரப்படுகிறது. இம் முறையில், ஓங்கி வளர்ந்துள்ள கதிர்கள் மீது மருந்து தூவும்போது, கதிரில் படிந்துள்ள பனித்துளிகள் துணியில் பட்டு, மருந்துத்தூள் கட்டியாகித் தூவ முடியாமல் போகும். அது மட்டுமல்ல, உயரத்தில் தூவும் போது, ஏறத்தாழ 5ல் 1 பங்குத்தூள் வீணாகவும் போகும். இதைத் தடுத்து, மருந்து தூவுவதை எளிதாக்கும் வகையில், உதவி வேளாண்மை அலுவலராகப் பணிபுரியும் திரு.ப. செல்வராஜ் என்பவர் ஒரு புதிய கருவியைக் கண்டுபிடித்திருக்கிறார்.

திரு. செல்வராஜ் கண்டுபிடித்த புதிய தெளிப்பானின் பெயர் 'செல்வம் டஸ்டர்' என்பது.

திரு. செல்வராஜ், ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். இவரது சொந்த ஊர் திண்டுக்கல் வட்டத்தைச் சேர்ந்த சாமியார்பட்டி, இவர், 1971-'73ஆம் ஆண்டுகளில் காந்தி கிராமிய பல்கலைக் கழகத்தில் விவசாயத் துறையில் விவசாய விஞ்ஞானப் பட்டம் பெற்றார். படித்து, 10 ஆண்டுகள் வேலை இல்லாமல் மிகவும் சிரமப்பட்டார். பின்னர், 1982 அக்டோபரில், பயிற்சி வழித் தொடர்புத் திட்டத்தில் வேலை கிடைத்தது. அதன்பின், பயிற்சிக்காகக் குடுமியான்மலை அண்ணா பண்ணையிலுள்ள மாநிலப் பயிற்சி நிலையத்தில் சேர்ந்தார். "அந்தப் பயிற்சியின் போதுதான், அங்குள்ள வேளாண்மை உதவி அதிகாரி திரு கிருஷ்ணமூர்த்தி கொடுத்த உற்சாகமான ஆதரவின்பேரில் இந்த நவீனக் கருவியை நான் உருவாக்கினேன் என்று திரு. செல்வராஜ் கூறுகிறார்.

அண்மையில், மாநிலப்பயிற்சி நிலையத்தில் திரு. செல்வராஜ், இந்தப் புதிய டஸ்டரை இயக்கிக் காட்டினார். இதனை உருவாக்க எவ்வளவு செலவாகும் என்று கேட்டபோது, 'எல்லாமாகச் சேர்த்து 25 ரூபாய்க்கு மேல் போகாது' என்று கூறினார்.

மருந்துத்தூள் வீணாவதைத் தடுக்கவும், ஓங்கி வளர்ந்த கதிர்களிலும் எளிதாக மருந்து தூவ வசதியாகவும் இருக்கும் இந்த 'செல்வம் டஸ்டரை'க் கண்டுபிடித்த இளைய விவசாய விஞ்ஞானி திரு செல்வராஜ் பாராட்டுக்குரியவர்.





# சிறு தொழில்களுக்கு "சிட்கோ"வின் சிறப்பான சேவைகள்







புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள தொழிற்பேட்டைகள் (1) புதுக்கோட்டை (2) மாத்தூர்.

இம்மாவட்டத்தில் வாடகை அடிப்படை யில் அமைக்கப்பட்ட தொழிற்கூடங்கள் 18, தவணைமுறைத் திட்டத்தின் கீழ் அமைக்கப் பட்ட தொழிற்கூடங்கள் 27, சின்னஞ்சிறிய தொழிற்கூடங்கள் ( Tiny Sheds ) 30, மேம் படுத்தப்பட்ட மனைகள் 22.

1981-82ல் மானியம் வழங்கப்பட்ட தொகை ரூ. 25 இலட்சம்; 1982-83ல் ரூ. 32 இலட்சம்.

குறைந்த அழுத்த மின் கட்டண உதவி பெற்ற சிறுதொழில்களுக்கு 1.1.30லிருந்து 3 ஆண்டுகளுக்கு மின்சார மானியம் அளிக்கப் படுகிறது. முதலாண்டு 30 சதவிகிதம்; இரண் டாம் ஆண்டு 20 சதவிகிதம்; மூன்றாம் ஆண்டு 10 சதவிகிதம். இதுவரையில் மானிய மாக வழங்கப்பட்ட தொகை ரூ. 2.02இலட் சம்.

வட்டியில்லா விற்பனை வரிக்கடன் வசதி யாக இதுவரையிலும் எட்டுத்தொழிற்கூடங் களுக்கு ரூ. 5.03 இலட்சம் கடனுதவி அளிக் கப்பட்டுள்ளது.

விற்பனை உதவித் திட்டத்தின் கீழ் இது வரையிலும் புதுக்கோட்டை மாவட்டத்தில் தொழிற்கூடங்கள் பயனடைந்துள்ளன.





# சிந்தை கவரும் சித்தன்னவாசல்

நுண்கலைகளுள் ஒன்றானதும் உயர்ந்ததுமான ஓவியக் கலை, மிகப் பழங்காலத்திலிருந்தே தமிழகத்தில் சிறந்து விளங்கியது என்பதை உணர்த்தும் செய்திகள் பல உள்ளன.

நமது சங்க இலக்கியங்களிலே ஓவியம் பற்றிய குறிப்புகள் ஆங்காங்கு காணப்படுகின்றன. சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் தமது சிலப்பதிகார உரையில் 'ஓவிய நூல்' என்னும் ஒரு நூலைக் குறிப்பிடுகிறார். அந்நூல் இப்போது கிடைக்கவில்லை. அது தவிர, மகேந்திரவர்ம பல்லவன், 'தட்சிண சித்திரம்' என்னும் ஓவிய நூலுக்கு உரை எழுதியதாக அறிகிறோம். அந்நூலும் தற்போது கிடைக்கவில்லை. எது எவ்வாறாயினும், பழங்காலத்தில் தமிழகத்தில் ஓவியக்கலை ஓங்கி வளர்ந்து உயர்ந்து விளங்கியது என்பதை மட்டும் யாரும் மறுப்பதற்கில்லை.

இக்காலத்தில் ஓவியங்களை எழுதி வைக்க இருக்கின்ற தாள்கள் - பலகைகள் -திரைச் சிலைகள் போன்ற பல்வேறு சாதனங்கள்போல, அக்காலத்தில் இல்லையானாலும், பெரும்பாலும் சுவர்களிலேயே ஓவியங்கள். எழுதப்பட்டன. அவை 'சுவர் ஓவியங்கள்' ஆகும்.

தமிழகத்தில் பல்லவர் ஆட்சிக் காலத்திலே - மகேந்திரவர்மன் காலத்திலே 'ஓவியக் கலை'க்குப் 'புதிய சகாப்தம்' - புதிய எழுச்சி தோன்றியது. அவன், புதிதாகக் குகைக் கோயில்கள் பலவற்றை அமைத்தான். அந்தக் குகைக் கோயில்களின் கோலச் சுவர்களிலே - கூரைகளிலே ஓவியங்களை வரைவித்தான். பொதுவாக, ஓவியங்கள் தக்கபடி பாதுகாக்கப் படாவிட்டால் அவை காலப்போக்கில் சிதைந்து அழிந்து படுவது இயல்பே. இவ்வியற்கை விதிமுறைக்கேற்ப அக்காலத்து ஓவியங்கள் பல உருத் தெரியாமல்-ஏன் சுவடே கூட இல்லாமல் மறைந்து போயின. எனினும், காலப் பழமையினால் -வண்ணங்கள் சற்று மங்கிப் போய் அரைகுறையாக அழிந்துபட்ட நிலையிலும் பழங்கால ஓவியக் கலையையும், மகேந்திரவர்ம பல்லவனின் பெயரையும்இன்றும் நமக்கு நினைவு கூறும் வகையில் நின்று விளங்குவன சித்தன்னவாசல் குகைக் கோயிலில் காணப்படும் சிறப்பான ஓவியங்களேயாகும்.

சித்தன்னவாசல், புதுக்கோட்டை மாவட்டத்தில் புதுக்கோட்டைக்கு மேற்கே 16 கி.மீ. தொலைவில் உள்ள ஒரு சிற்றூர்; இது, 'அண்ணல் வாயில்' எனத் திருநாவுக்கரசரின் திருத்தாண்டகத்தில் குறிப்பிடப்படுகிறது. இன்று 'அன்ன வாசல்' எனப்







படும் அண்ணல் வாயிலும், சித்தன்ன வாசல் என்னும் சிற்றண்ணல் வாயிலும் சேர்ந்த பழம்பதி, இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று வரலாற்று வல்லுநர்கள் கருதுகின்றனர்.

சித்தன்னவாசலின் மலையடிவாரத்தைச் சூழ்ந்த வரை நிலம், கற்கிடைகள், குரங்குப் படைவீடுகள், பல முது மக்கள்தாழிகள், நடு கற்கள், கற்குவி முட்கற்படைகள் சூழ்ந்த விரிந்து பரந்த இடுகாடாகும். இதனைக் கடந்து குகையின் வாயிலில் உள்ள ஏழு படிக்கட்டுகளை (ஏழடிப்பட்டம்) கடந்த மலை முகட்டுக்குச் சென்றால், அதன் கிழக்குப் பக்கத்தில் மிகப்பெரிய அமண பாழியைக் காணலாம். அங்கு உள்ள சமணர் கோயிலில், கற்பாறையிலேயே மழமழப்பாகத் தேய்த்தமைக்கப்பட்ட பலகற்படுக்கையையும், அவற்றை ஒட்டிப் பல கல்வெட்டுகளையும் நாம் காண்கிறோம். இவற்றில் மிகப் பழமையானது, பெரிய படுக்கையின் புறத்தே பிரமியெழுத்தில் எழுதப்பட்ட தமிழ் மொழிக் கல்வெட்டு. கி.மு. 2-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 3-ஆம் நூற்றாண்டு வரை தென்னகத்தில் பெரிதும் புழக்கத்தில் இருந்த பிரமி எழுத்துடன் தமிழ் மொழிச் சிறப்புகள் இணைந்து காணப்பெறும் இக்கல்வெட்டிலிருந்து இவ்வூரின் பெயர் சி(த்)து(ப்) போசில் எனவும், இவ்வதிட்டானம் இபோமி (ஒய்மா) நாட்டுக்கு மட்டூர்ப் பிறந்தான் காவிதி ஈதனுக்குச்சித்துப்போசில் கிளையர் குடி மக்களால் செய்தமைக்கப்பட்டது என்னும் செய்தியையும் அறிகிறோம்.

இப்பாழியின் ஏனைய கல்வெட்டுகளும், இம்மலையின் மற்றையப் பாழிகளினருகில் காணப்படும் கல்வெட்டுகளும் கி. பி. 8-9-ஆம் நூற்றாண்டுகளுக்குரிய தமிழ் எழுத்துக்களில் பொறிக்கப்பட்ட தமிழ்ப் பெயர்களாகும்.

9-ஆம் நூற்றாண்டின் முற்



## குடவரைக் கோயில்கள்

தமிழ்நாட்டில், முதன் முதலில் பல்லவ மன்னனான மகேந்திரவர்மன் காலத்தில்தான் குடவரைக் கோயில்கள் உருவாக்கப்பட்டன. பின்னர், ஆங்காங்கே பல குடைவரைக் கோயில்கள் எழுப்பப்பட்டன. புதுக்கோட்டை மாவட்டத்தில் குடவரைக் கோயில்கள் உள்ள இடங்களாவன:

1. நார்த்தமலை
2. குன்னாண்டார் கோயில்
3. மலையாடிப்பட்டி
4. சித்தன்னவாசல்
5. பூவாளைக்குடி
6. திருமயம்
7. தேனி மலை
8. மலையக்கோயில்
9. மாங்குடி
10. குடுமியான்மலை

பகுதியில் ஆண்டஅவநீபசேகரன் ஸ்ரீ வல்லப பாண்டியன் காலத்தில், மதுரை ஆசிரியர் என்ற இளங்கௌதமனால் குகைத் தளியிலுள்ள அர்த்த மண்டபம் புதுப்பிக்கப் பெற்று, சிற்பங்கள், அமைக்கப் பெற்று, முன்னணியில் முக மண்டபம் ஒன்றும் கட்டப்பட்டு, அகமண்டபமும் அழகு செய்யப்பட்டது என்ற செய்தியினை இங்குக் காணப் பெறும் செய்யுட் கல்வெட்டு ஒன்றால் அறிகிறோம். இதற்கேற்பப் பல்லவர் பாணிக்கு மாறுபட்டதும் பாண்டியர் குடை-தளிகளில் காணப்பெறும் பாணியையொத்தும் உள்ள சில பாணிச் சிறப்புகளைக் கொண்டும் வேறு சில ஆதாரங்களைக் கொண்டும் இவ்வோவியங்கள் பாண்டியர் காலத்தில் 9-ஆம் நூற்றாண்டில் வரையப் பெற்றவை என்ற ஒரு கருத்தும் கூறப்படுகிறது.

அர்த்த மண்டபத்தின் இரு பக்கங்களிலும் உள்ள திருவாசிரியன் பாரிசுவநாதர் சிலை மாடங்களின் மேலும், உண்ணாழிகையின் பின் சுவரில் வரிசையாகக் காணப்பெறும் பேரரசர் இரு தீர்த்தங்கரர் மூர்த்தங்களின் மேலும் அர்த்த மண்டபத்திற்கு முன் நீண்ட கொடுங்கையின் அடிப்புறத்திலுமான மேல்நிலைகளில் அழகுற விரித்துக் காட்டியது போல் வரையப் பெற்ற பல வகையான ஓவிய விதானங்களை நாம் காணலாம்.

சித்தன்ன வாசல் குகைக் கோயிலில், பல நூற்றாண்டுகளுக்குப் பிறகும், பழைய காலத்து ஓவியச் சிறப்பை இன்றைக்கும் எடுத்துக் காட்டும் வகையில் அமைந்துள்ள எழிலோவியங்களில் குறிப்பிடத்தக்கவை 'அரசன், அரசி' 'நாட்டியக் கணிகையர் இருவர்' 'தாமரை பூத்த தடாகம்', 'ஓர் அரசன்' ஆகியவையாகும். அரசன் அரசி ஆகிய இருவரின் ஓவியங்கள் மார்பளவு வரை காணப்படுகின்றன. இவ்விருவரும், மகேந்திர வர்மனும் அவனுடைய பட்டத்தரசியும் ஆக இருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

அடுத்து, இரண்டு தூண்களில் தனித் தனியே வரையப்பட்டுள்ள இரண்டு நாடகக் கணிகையரின் நடனக் காட்சி. இவர்கள், அரங்கத்தில் நின்று நடனம் புரிவதை விளக்குவது இந்த எழிலோவியம்.

நாடகக் கலையில் நன்கு தேர்ந்த நங்கையர் இருவர், நமது கண்முன்னே நின்று நடனமாடுவது போன்றமைந்த இந்த உயிரோவியம் நமது உள்ளங்களைத் தொட்டு நிற்கின்றன. ஓவியப் புலவரின் இந்த உயிரோவியம், 'ஆடற் கலைக்கழகு தேடப் பிறந்தவள் - ஆடாத பொற் பாவை ஆடவந்தாள்' என்று தொடங்கும் பாவேந்தர் பாரதிதாசனின் அழகிய இன்னிசைப் பாடலை நமக்கு நினைவூட்டுகின்றது.

இதனையடுத்து, இயற்கை எழில் மிக்கதொரு தாமரைத் தடாகம். இத்தாமரைக் குளத்தின் ஓவியம், குகைக் கோயில் மண்டபத்தின் விதானத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இக்குளத்தில், செந்தாமரை, வெண்டாமரை, ஆம்பல், அல்லி முதலான பல நீர்ப் பூக்கள் பூத்துக் குலுங்குகின்றன. இந்தப் பொய்கையில் யானைகளும், மாடுகளும் பேடைக் குஞ்சுகளுடன் கூடிய சகோரப் பறவைகளும், ஊடுருவிப் பாயும் மீன்களும் காணப்படுகின்றன. ஆழமற்ற இந்தக் குளத்தில் முழங்கால் அளவுள்ள நீரில் மூன்று பேர் இறங்கித் தாமரைப் பூக்களைத் தண்டோடு கொய்து கற்றையாகக் கட்டித் தோளின் மீது வைத்துக்கொண்டு வருகிறார்கள். தாமரை பூத்த இந்தத் தடாகத்தின் ஓவியம் நமது உள்ளத்தில் நிலை பெறும் உயிர் ஓவியமாகும். இவையாவும் அஜந்தாவையும் மிஞ்சும் தகையன. தெற்குத் தூணில் ஓர் அரசனின் திருவுருவம் வரையப்பட்டுள்ளது. இவ்வுருவம், ஸ்ரீவல்லப பாண்டியனின் திருவுருவமாக இருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

பொதுவாகக் குகைக்கோயில்களின் பாறைச் சுவர்கள் கரடுமுரடாகவே இருக்கும்; அச்சுவர்கள் வண்ண ஓவியங்கள் வரைவதற்கு ஏற்றவை அல்ல என்பதை எல்லாரும் அறிவோம். அந்தச் சுவர்களில் ஓவியங்கள் எழுத வேண்டுமானால், பாறைச் சுவர்களின் மேல் மெல்லிய சுதை பூசி அதன் பிறகே எழுத முடியும் இவ்வாறுதான் சித்தன்னவாசல் பாறைச் சுவர்களிலும் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. அஜந்தா, சிகிரியா முதலியகுகைகளில் வரையப்பட்டுள்ள ஓவியங்களும் இவ்வாறு சுதை பூசப்பட்டே எழுதப்பட்டுள்ளன.

சித்தன்ன வாசல், குகைக் கோயிலிலுள்ள உண்ணாழிகையின் மேல் நிலையில் மட்டும் தாமரைக் குளமும் விதான ஓவியமும் வரையப்பட்ட சுதைப் பூச்சுப் பெயர்ந்து விழுந்து, சில இடங்களில் முன்னிருந்ததும் அழிக்கப்பெறாது மேலே மறைத்துப் பூசப்பட்டதுமான சாதாரணப் பூக்கோலங்கொண்ட பழைய சித்திரப் பகுதிகள் காணப்படுகின்றன.

கல்வெட்டில் குறிப்பிடப்பெறும் அதிட்டானம் தூர்ந்து கிடந்து, அண்மைக் காலத்தில் தோண்டி வெளிப்படுத்தப் பட்டுள்ளது. உள்ளிருக்கும் ஓவியங்களைமழை வெயிலினின்றும் பாதுகாக்கும் பொருட்டுப் பழைய அதிட்டானத்தின் மேல் பழைய மாதிரித் தூண்கள் நிறுத்தப்பட்டு மேலே கற் பலகைத் தாரிசு போட்டு மண்டபம் போல அமைக்கப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் சித்தன்னவாசல் வரலாற்றுப் புகழ் பெற்ற ஒரு சிறப்பான இடமாகும். இங்கு காணப்படும் ஓவியங்கள் தமிழகத்தில் காலத்தால் மூத்தனவாகவும், ஓவியங்களில் மிகப் பழமை வாய்ந்தனவாகவும் திகழ்கின்றன. இங்குள்ள ஓவியங்கள், அஜந்தா பாணிக்கும், தஞ்சைப் பெருவுடையார், சோழர் பாணிக்கும் இணைப்புப் பாலமாக விளங்குகிறதென்று வரலாற்றுப் பேரறிஞர் திரு நீலகண்ட சாஸ்திரியார் குறிப்பது நினைவு கொள்ளத்தக்கது. இதனைத் தென்னகத்துஅஜந்தா என்றே குறிப்பிடலாம். சித்தன்னவாசல், குடவரைக் கோயிலாலும் புகழ்மிக்க ஓவியங்களாலும் உலகப் புகழ் பெற்றுவிளங்குகிறது.

—சாமிபழனியப்பன்



**சித்தன்னவாசல் ஓவியங்களில் உபயோகிக்கப்பட்டிருக்கும் வண்ணங்கள்:—**

கருப்பு-அடுப்புக்கரி, சிகப்பு-சிகப்புக் காவி, மஞ்சள்-மஞ்சள் காவி, வெள்ளை-சுண்ணாம்பு, நீலம்-நீலக்கல் (Ultramarine), பச்சை-பச்சைக் கல் (Terre-verte) வண்ணம் சுவரில் ஒட்டிக் கொள்ள கோந்து உபயோகிக்கப்பட்டுள்ளது.

## புதுக்கோட்டை நகரமைப்பு

**1812**-ஆம் ஆண்டு புதுக்கோட்டை நகரம் தீயால் அழிந்துவிட்டது. அப்போது வில்லியம் ஜான் பிளாக்பர்ன் ஆங்கிலேயப் பிரதிநிதியாக, தொண்டைமான் மன்னரின்கீழ், ஆட்சியாளராக (Resident) இருந்தார். தீயால் அழிக்கப்பட்ட நகரைப் புதிதாக நிர்மாணிக்கும்பொழுது, தெருக்களை நேர்-நேராக அமைத்து இன்று நாம் காணும் நகர் அமைக்க அடிகோலினார். அதன்பின் 1878-ல் சர். சேஷையா சாஸ்திரி திவானாகப் பொறுப்பேற்றுக் கொண்டதும், ப்ளாக்பர்ன் ஆரம்பித்த பணியைத் தொடர்ந்து அழகான, நேரான தெருக்களையும், கழிவுநீர் வாய்க்கால்களையும் அமைத்து நகரை அழகுறச் செய்தார். புதுக்கோட்டையில் எல்லாத் தெருக்களும் ஒன்றுக்கொன்று இணைக்கோட்டு அமைப்பிலேயே இருப்பதைக் காணலாம்.

## பார்ஸ்டல் பள்ளி !

தமிழ்நாட்டில் உள்ள ஒரே பார்ஸ்டல் பள்ளி புதுக்கோட்டையில் உள்ளதாகும். புதுக்கோட்டையில் இது 1.4.1968 முதல் இயங்கி வருகிறது. இப்பள்ளி இருக்கும் கட்டடம், புதுக்கோட்டை மன்னர்களால் 1889-இல் கட்டப்பட்டதாகும்.

இளைஞர்கள் (18 வயதுமுதல் 21 வயது வரை) குற்றம் செய்தால், குற்றத்தின் தரத்தையும் அவரது குடும்ப நிலையையும், சூழ்நிலையையும் கருதி, அவரை சிறை அல்லாத ஒரு நிறுவனத்திற்கு அனுப்பிச் சீர்திருத்த இயலுமென நீதிபதி கருதினால் அவரை இப்பள்ளிக்கு அனுப்பலாம்.

இந்த முறை, முதன் முதலில், இங்கிலாந்திலுள்ள 'பார்ஸ்டல்' என்னும் இடத்தில் நடைமுறை முறைக்கு வந்ததால், இம்மாதிரி நிறுவனங்களுக்கு 'பார்ஸ்டல் பள்ளி' என்ற பெயர் வந்தது.

## புதுகையிலே ரோமாபுரி

**ப**ண்டைக்காலத்தில் புதுக்கோட்டைப் பகுதி வணிகர்கள் ரோம் நாட்டுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். இதற்கு ஆதாரமாக புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடிக் கருகிலுள்ள கருக்காக்குறிச்சி என்னும் ஊரில் கி.பி. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த ரோம் நாட்டுப் பொன் நாணயங்கள் கிடைத்துள்ளன.

## காலத்தால் மூத்த தமிழ்

கி. மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த "பிராமிக்கல்வெட்டு" சித்தன்னவாசலில் காணப்படுகிறது. காலத்தால் முற்பட்ட தமிழ் எழுத்துக்கள் இவை.

## புதுக்கோட்டையின் பெயர்க் காரணம்

**பு**துக்கோட்டையின் பழைய பெயர் கலசமங்கலம் - சிங்கமங்கலம் என்பதாகும். புதுக்கோட்டை சமஸ்தானத்தை ஆண்ட ரகுநாதராயத் தொண்டைமான் (1686-1730) இந் நகரில் புதிதாக அரண்மனையையும் கோட்டைக் கொத்தளங்களையும் கட்டி, இந்நகருக்கு "புதுக் கோட்டை" எனப் பெயரிட்டார்.

## அத்தியாவசியப் பொருள் கிடைத்திட

**பு**துக்கோட்டை மாவட்டத்தில் 1.5.'81 முதல் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல அலுவலகம் இயங்கி வருகிறது. இந்த மாவட்டத்திலுள்ள எல்லா வட்டங்களிலும் பொதுமக்களுக்குப் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அத்தியாவசிய உணவு பொருள்கள் விநியோகம் செய்ய சேமிப்புக் கிட்டங்கிகள் செயல்பட்டு வருகின்றன.

புதுக்கோட்டை மாவட்டத்தில் அத்தியாவசியப் பொருட்களின் பொது விநியோகம் அரசினரால் கூட்டுறவுத்துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. புதுக்கோட்டை கூட்டுறவுத் துறையினரால் 716 கிராம நியாய விலைக் கடைகளும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தினரால் 16 நியாய விலைக் கடைகளும் செயல்பட்டு வருகின்றன.

இந்த மாவட்டத்தில் சுமார் 2,59,033 குடும்ப அட்டைகளுக்கு அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

அறந்தாங்கி வட்டத்தில் கண்டிச்சங்காடு, சுப்பிரமணியபுரம் ஆகிய இடங்களில் நேரடிக் கொள்முதல் நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுச் செயல்படுத்தப்படுகின்றன.

புதுக்கோட்டை மண்டலத்தில் முதலமைச்சர் குழந்தைகள் நல சத்துணவு மையங்கள் மொத்தம் 2283 உள்ளன. அதில் சமூக நல மையங்கள் 1079, கல்வித்துறை மையங்கள் 1136, ஆதி திராவிட நல மையங்கள் 10, நகராட்சி மையங்கள் 38 உள்ளன. மேற்படி மையங்களுக்கு மாதந்தோறும் ஒவ்வொரு வட்டத்திலுள்ள சேமிப்புக் கிடங்கிலிருந்து அத்தியாவசியப் பொருள்களான அரிசி, பருப்பு, எண்ணெய், பல்பொடி ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன. இம்மண்டலத்தில் ஏழு கிட்டங்கிகள் உள்ளன. இத்திட்டத்தின் மூலம் இம்மண்டலத்தில் பயன்பெறுகிற பிள்ளைகளின் எண்ணிக்கை 2,03,469. குழந்தைகள் நலம் நல்ல முறையில் பேணிப் பாதுகாக்கப் பெற சம்பந்தப்பட்ட அலுவலர்கள் அனைவரும் தீவிர முயற்சியுடன் செயல்பட்டு வருகின்றனர்.



# தவிட்டிலிருந்து எண்ணெய்!

**த**மிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் இணையகம் தன்னுடைய முன்னேற்றத்தின் ஏணிப்படியாக பிண்ணாக்கிலிருந்தும், தவிட்டிலிருந்தும் எண்ணெய் பிழிந்து எடுக்கும் (Solvent extraction Plant) ஆலை ஒன்றை துவக்கியுள்ளது.



தமிழக அரசு ஆணைப்படி இவ்வாலைக்கான ரூ. 15,93,350 மதிப்புள்ள கருவிகளை 1977ஆம் ஆண்டு ஜூன் மாதம் தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டையிலிருந்த தமிழ்நாடு மாநில எண்ணெய் மற்றும் எண்ணெய் சம்பந்தப்பட்ட உற்பத்திப் பொருள்கள் இணையகத்திற்கு வாங்கப் பெற்றன. பின்னர் அவை ''தாய்'' நிறுவனத்திற்கு மாற்றப் பட்டன. 'தாய்' நிறுவனம் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள பொனக்குளம் என்ற கிராமத்தில் 24.14 ஏக்கர் நிலப்பரப்பில் இவ்வாலையை ஆரம்பித்துள்ளது. இந்த ஆலை தொடங்குவதற்கான ஆக்கப்பணிகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன.

எண்ணெய் பிழிந்தெடுக்கும் இந்த ஆலை ஒரு நாளைக்கு 60 மெட்ரிக் டன் பிண்ணாக்கு அல்லது 30 மெட்ரிக் டன் அரிசித் தவிட்டிலிருந்து பிழிந்து எண்ணெய் எடுக்கும் திறன் கொண்டது. தேவையைப் பொறுத்து இதன் உற்பத்தித் திறனை - ஒரு நாளைக்கு 100 டன் பிண்ணாக்கையும் 60 டன் அரிசித் தவிட்டையும் பிழிந்தெடுக்கும் திறனை விரிவுபடுத்தத் தக்கவாய்ப்பு உள்ளது. ஆலை தொடங்குவதற்கான திட்ட முதலீடு ரூ.80 இலட்சமாகும்.

இந்த ஆலைக்கான இயந்திரச் சாதனங்கள், கொதிகலன் ஆகியவை அமைக்கும் பணி முனைப்பாக-இரவு பகலாக நடைபெற்றுக் கொண்டு வருகிறது. இக்கொதிகலன் அமைக்கப்பட்டவுடன் ஆலை தனது உற்பத்தியை விரைவில் தொடங்கும்.

இதன் மூலம் நேரடியாக-கிட்டத்தட்ட 150 பேர்களுக்கு நிரந்தரமாக வேலை கிடைக்கவும் மற்றும் மறைமுகமாக 150 பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிட்டவும் வாய்ப்பு உள்ளது.



# பால் வளம்

புதுக்கோட்டை கூட்டுறவு பால் வினியோகக் கழகம், புதுக்கோட்டை மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் என மாற்றியமைக்கப்பட்டு 20-1-'83 முதல் செயலாற்றி வருகிறது

தனி அலுவலரின் நிர்வாகத்திலிருந்து இக்கழகம், 20.1.'83 முதல் ஒன்றியமாக இயங்கி வருகிறது.

இம்மாவட்டத்தில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் 59, பால் விநியோகச் சங்கங்கள் 45 உள்ளன. இச்சங்கங்களின் மூலம் அங்கத்தினர்களுக்குக் கறவை மாடுகள் வாங்க வங்கிகள் மூலம் அதிகபட்சம் ரூ.2500 கடனாக வழங்கப்பட்டது. இத்தொகையில் ஆதிதிராவிடர்களுக்கு 50 சதவிகித மானியமும் ஆதிதிராவிடர் அல்லாதவர்களுக்கு 33 சதவிகித மானியமும் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த ஒன்றியத்தின் பால் உற்பத்தி: 1976-77ல் ஆண்டுச் சராசரி உற்பத்தி 849 லிட்டர். 1982-83ல் (பிப்ரவரி.83) 1560 லிட்டர் ஆகும்.





புதுக்கோட்டை மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் ,பொது மக்களுக்குத் தரமான பால் வழங்கத் திட்டமிட்டுச் செயல்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு 280 லிட்டர் அளவு விற்பனையான பால் இந்த ஆண்டு மார்ச் திங்களில் 654 லிட்டர் அளவுக்கு உயர்ந்துள்ளது.

வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாடும் மக்களுக்கும் ஆதிதிராவிட மக்களுக்கும் பால் உற்பத்தியாளர் சங்கங்கள் அமைத்து, அவர்களது வருமானத்தை உயர்த்தி வாழ்வு வளம் அடைய மாவட்ட ரீதியில் பால் கொள்முதல் குழு ஒன்று இயங்கி, கிராமங்களில் சங்கங்கள் அமைக்கவும், இச்சங்க அங்கத்தினர்களுக்குக் கறவை மாட்டுக் கடனை வங்கிகள் மூலம் வழங்கவும் பணியாற்றி வருகிறது. மேலும் நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவு ஒன்று இயங்கி வருகிறது. கால்நடை மருத்துவர் ஒருவரால் கறவை மாடுகளுக்குச் சிகிச்சை மற்றும் கருவூட்டல் ஆகியவை செய்யப்படுகின்றன.

வளர்ந்து வரும் ஒன்றியத்தின் சேவைக்கு ஊக்கமளிக்க புதுக்கோட்டை மாவட்ட மக்களுக்குத் திறனாகப் பணியாற்றப் புதுக்கோட்டையில் ரூ. 18 இலட்சம் செலவில் பால் குளிரூட்டும் நிலையம் விரைவில் அமைக்கப்பட உள்ளது.

பின்தங்கிய இம்மாவட்டம், பால்வளத்தில் ஒளிமிக்க எதிர்காலத்தைக் காணவும், மாவட்ட மக்கள் வளம் பெறவும் புதுக்கோட்டை மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம், மாவட்ட ஆட்சியாளரைப் பெருந்தலைவராகக் கொண்டும் ,உயர்மட்ட அதிகாரிகளை இயக்குநர்களாகப் பெற்றும் சிறப்புற நடைபெற்று வருகிறது.





சென்னை நகரில் கீழ்ப்பாக்கம் குடிநீர்த் திட்டம், நுங்கம்பாக்கம், வில்லிவாக்கம் ஆகிய பகுதிகளில் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு எடுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளை மேதகு ஆளுநர் திரு. எஸ். எல். குரானா அவர்களும், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. எஸ். இராகவானந்தம் அவர்களும் 2-4-1983-ல் பார்வையிட்டனர்

# படமும் செய்தியும்



சென்னையில் உள்ள சிந்தி இனத்தைச் சேர்ந்த பெருமக்கள், முதல்வர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்காக 95,591-26 ரூபாய்க்குரிய காசோலையை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் (29.3.83ல்) அளித்தனர். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு, எச்.வி.ஹண்டே உடன் இருந்தார்.



டெல்லியில் 5.4.83 அன்று நடைபெற்ற காவிரி, நதிநீர் சம்பந்தப்பட்ட பேச்சில் பாண்டிச்சேரி, கருநாடகம், கேரளம் ஆகிய மாநிலங்களின் முதலமைச்சர்களுடன் தமிழக முதலமைச்சர் சார்பில் மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள் கலந்து கொண்டார்.

மைய அரசின் மாண்புமிகு தொழில் அமைச்சர் திரு, என்.டி.திவாரி அவர்கள் 1-4-83ல் சென்னையில் தோல் தொழில் வளர்ச்சிக் கழகத்தைத் துவக்கி வைத்தார். மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. கே.ஏ.கிருஷ்ணசாமி, மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.எஸ்.திருநாவுக்கரசு ஆகியோர் உடன் உள்ளனர்.




29-வது அகில இந்திய கைத்தறிக் கண்காட்சியை மாண்புமிகு கல்வி மற்றும் கைத்தறி அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்கள் 9.4.83 அன்று சென்னை எழும்பூரில் திறந்து வைத்துப் பார்வையிட்டார்.



டெல்லியிலுள்ள தமிழ்நாடு அரசின் மாண்புமிகு சிறப்புப் பிரதிநிதி திரு ஜி. ஆர். எட்மண்ட் அவர்கள் மத்திய உள்துறை அமைச்சர் திரு. பி. சி. சேத்தி அவர்களை 22.3.83 அன்று டெல்லியில் சந்தித்தார்.



புரசைவாக்கத்தில் உள்ள அரசினர் முதுநிலை, இளநிலைப் பெண்கள் சீர் திருத்தப்பள்ளியின் 51வது ஆண்டு விழா வில் கலந்து கொண்டு புதிய உணவுக் கூடத்தைத் திறந்து வைத்த மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன், அங்கு நடைபெற்ற கண்காட்சியினைப் பார்வையிட்டார்.



இந்தியாவில் உள்ள கனடா நாட்டுத் தூதுவர் திரு ஜான்ஹாடுவென் அவர்கள் தலைமைச் செயலாளர் (பொறுப்பு) திரு. கே. சொக்கலிங்கம் அவர்களை 9.4.83–ல் சென்னையில் சந்தித்தார்.





**மாணவர் பக்கம்**

# விளையும் பயிர்

**"நான் படித்துக் கொண்டே இருப்பேன். அதுதான் என்னுடைய ஆசை. அதே சமயத்தில் என்னால் முடிந்த வகையில் தமிழுக்கும் தொண்டாற்றுவேன்'' என்று மகிழ்ச்சியுடன் கூறுகிறார், சென்னை பச்சையப்பன் கல்லூரியில் இளங்கலை வகுப்பில் (தமிழ் இலக்கியம்) இரண்டாம் ஆண்டு பயிலும் மாணவர் திரு ஆர். ஜெயச்சந்திரன்.**

19 வயது இளைஞரான இவர், இருபார்வையும் இல்லாதவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழார்வம் மிக்க இவர் பல பரிசுகளைப் பெற்றுள்ளார். கதை, கட்டுரை, கவிதை, நாடகம் முதலானவற்றை எழுதும் திறம் பெற்ற இவர், தமிழ் இலக்கணத் துறை ல் ஆராய்ச்சி செய்யவும் விருப்பம் கொண்டுள்ளார்.

அனைத்துக் கல்லூரி அளவில் நடந்த கவிதை, பேச்சு, பாடல் போட்டிகளில் இவர் முதல், இரண்டாவது பரிசுகள் பெற்றுள்ளார். பச்சையப்பன் கல்லூரியில் நடந்த பாரதியார் நூற்றாண்டு விழாப் போட்டியில், இவருக்கு 2 வது பரிசு கிடைத்தது. மாண்புமிகு மேலவைத் தலைவர் டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்கள் பரிசுகள் வழங்கினார்.

உடலில் ஊனமிருந்தாலும், உள்ளத்தில் ஊனமில்லை இவருக்கு. ஊக்கத்துடன் மேலே மேலே முன்னேறுகிறார். அவரை நாமும் வாழ்த்துவோம்!

# முட்டை

பொதுவாக, முட்டையின்நிறம் வெண்மை. இருப்பினும், நிறம் பல்வேறு பறவைகளிலும் வேறுபட்டிருப்பதைக் காணலாம். ஜப்பானில் காணப்படும் சில்விட் என்ற வார்ப்லர் பறவையின் முட்டை சிகப்பு நிறம். கூட் பறவையின் முட்டை பச்சை நிறம். த்ரஷ் பறவை நீல நிற முட்டையை இடுகிறது. தென்அமெரிக்காவில் வாழ்ந்துவரும் டினாமஸ் பல நிறமுடைய முட்டையை இடுகின்றது. முட்டைகளிலேயே தீக்கோழியின் முட்டைதான்மிகப் பெரியது. இதன் எடை 1.4 கிலோகிராம் என்றால் அதன் அளவை எண்ணிப் பாருங்கள். மார்க்கோபோலோ என்னும் அறிஞர் தனது பிரயாணக் குறிப்பில் மடகாஸ்க கடற்கரைப் பிரதேசத்தில் 8 மீட்டர் உயரமுடைய மிகப்பெரிய ரூக் (rukh) பறவையைப் பார்த்ததாகவும், அதன் முட்டை 16 லிட்டர் தண்ணீர் நிரப்பக்கூடிய அளவில் மிகப் பிரமாண்டமானதாக இருந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

# அறிவுச்சுடர்

உலகத்திலேயே மிகவும் அதிகமாக மழை பெய்யும் நாடு கொலம்பியா, இங்கு ஆண்டுக்கு 4099 மி.மீ. மழை பெய்கிறது!

卐

உலகத்திலேயே மிகவும் கனமான சக்தி வாய்ந்த, பெரிய விமானம் 'ஜம்போ ஜெட்' என்ற அமெரிக்க போயிங் 747 விமானமாகும். இதனுடைய எடை 381 டன்! தற்போது உலகில் 313 ஜம்போ ஜெட் விமானங்கள் இயங்கி வருகின்றன.

卐

உலகத்திலேயே மிகவும் மக்கள் நெருக்கம் வாய்ந்த நாடு, மொனக்கோ, இங்கு 1 சதுர கிலோ மீட்டருக்கு 16,938 மக்கள் வசிக்கின்றனர்.

卐

பிரான்ஸ் நாட்டில் நூற்றுக்குத் தொண்ணூற்றி ஒன்பது பேர் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள்!

உலகத்திலேயே மிக அதிக அளவு பெட்ரோலியம் தயாரிக்கும் நாடு சோவியத் நாடு. இங்கு ஆண்டொன்றுக்கு 52 கோடி டன் பெட்ரோலியம் தயாரிக்கப்படுகிறது. இங்கு ஒரு நாளில் தயாரிக்கப்படும் பெட்ரோலின் உதவியால் ஒரு கார் 126 தடவைகள் சூரியனுக்குச் சென்று வந்துவிட முடியும் !

卐

அமெரிக்காவில் மட்டும் வினாடிக்கு 23,000 முட்டைகள் இடப்படுகின்றன.!

卐

உலகத்திலேயே மிகவும் வேகமாகப் பேசிய மேடைப் பேச்சாளர் மறைந்த அமெரிக்க ஜனாதிபதி ஜான் கென்னடி. இவர் நிமிடத்திற்கு 327 வார்த்தைகள் பேசக்கூடியவர்.

卐

உலகத்திலேயே மிகவும் எடை அதிகமான மனிதன் இராபர்ட் எர்ல் கியூஜிஸ். 1958-இல் இவரது எடை 1069 பவுண்டு!




## இளம் விஞ்ஞானிகள்

'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பார்கள். இந்தக் கருத்தின் அடிப்படையில் பெரிய விஞ்ஞானிகளாக விளங்கப் போகிறவர்களை உயர் நிலைப் பள்ளியில் அவர்கள் படிக்கும் போது தேர்வு செய்து பணமும் பரிசும் கொடுத்து ஊக்குவித்து வருகிறது, அமெரிக்காவில் ஒரு அற நிலையம். இது கடந்த 42 ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிறது.

1942 முதல் மொத்தம் இவ்வாறு 1,640 இளம் விஞ்ஞானிகள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஐவர் பின்னாளில் நோபல் பரிசு பெற்றார்கள். இருவர் கணிதத்தில் சிறந்த தங்கப்பதக்கங்கள் பெற்றுள்ளனர்.

அத்தனைப் பேரும் கல்லூரிப் படிப்புக்குச் சென்றனர். நூற்றுக்கு 99 பேர் விஞ்ஞானம் அல்லது கணிதத்தில் பட்டம் பெற்றனர். நூற்றுக்கு 75 பேர் 'டாக்டர்' பட்டம் பெற்றார்கள் அல்லது மருத்துவ டாக்டர்களாயினர்.

ஒரு தேனீயின் மூளையில் 8,50,000 நரம்பு செல்கள் உள்ளன. நாட்டு மருந்துகளில் மிகச் சக்தி வாய்ந்த பொருட்களில் தேனீயின் நஞ்சும் ஒன்றாகும். 'எபிடாக் இன்' என்ற அந்த நஞ்சு வாதநோய், நியூரைட்டிஸ், நியூரால் நியா போன்ற பல நோய்களைக் குணப்படுத்தும்.



## அனைத்துமே முடியும் கற்றால்!

பள்ளிநாம் செல்ல வேண்டும்;
படித்திட வேண்டும்; கீர்த்தி
கொள்ளவும் வேண்டும்; ஆசான்
குறிப்பிடும் அளவு நாமும்
உள்ளியே இருக்க வேண்டும்;
உயர்ந்தநல் சீடன் என்று,
பள்ளியே பேச, நம்மைப்
பெற்றவர் மகிழ வேண்டும்!

நித்தமும் சோறில் லாமல்
நலிந்துநாம் சாகுங் கால்நம்
புத்தியெவ் வாறி யங்கும்
பாலர்கள் படிப்ப தற்கு
வித்திடும் எண்ணத் தோடு
வேறெதும் எண்ணம் இன்றிச்
சத்துண(வு) அளிக்கின் றார்கள்
செந்தமிழ் ஆட்சியாளர்!

தோழனே! நாமும் கல்வி
தான்பெற வழிசெய் கின்றார்!
வாழவும் முடியும்; பின்னால்
வளத்துடன் இருப்ப தற்கும்,
சோழன்போல் சேர பாண்டிச்
செந்தமிழ் மன்ன வர்போல்
ஆளவும் முடியும் நம்மால்,
அனைத்துமே முடியும் கற்றால்!

—வீர. இராசேந்திரன்
மேனிலை 2ஆம் ஆண்டு 'ஆ' பிரிவு
தூய மரியன்னை மேனிலைப்பள்ளி,
திண்டுக்கல்-624 001.



# சொல் விளையாட்டு

**நா**ம் பலவிதமான விளையாட்டுகளை விளையாடறோம். கிரிக்கெட், கால்பந்து, வாலிபால், டென்னிஸ் இப்படிப் பல விளையாட்டுக்களை விளையாடறோம். இதனாலே உடல் வலிமைபெறுது.

இதேபோல, பல சொற்களை வைச்சிக்கிட்டும், நாம விளையாடலாம். ஒரு சொல்லை எடுத்துக்கிட்டு, அதற்கு என்ன பொருள் என்றும், அதில் சில எழுத்துக்களை எடுப்பதன் மூலம் என்ன அர்த்தம் வரும் என்றும் நாம தெரிஞ்சிக்கலாம். இதைத்தான் 'சொல் விளையாட்டு'ன்னு சொல்றோம்.

சரி. இப்ப அந்த சொல் விளையாட்டுக்கு எல்லோரும் தயாரா?

'கோபால்' என்ற பெயரை எடுத்துக்குவோம். இந்தப் பெயரிலே பல அர்த்தம் இருப்பதை நாம பார்க்கலாம்.

கோபால் என்பதைப் பிரிச்சா, கோ-பால். கோ-என்றால் பசு, பால்-இதுதான் நமக்குத் தெரியுமே. பசுப்பால் என்று வருகிறதல்லவா?

இன்னும் பார்க்கலாம். கோ-என்றால் அரசன், பால்-என்றால், ஆண்பால் பெண்பால் என்ற பிரிவுகளைக் குறிக்கிறது.

இந்தப் பெயரிலேயே கோலும் இருக்கிறது. பாட்டும் இருக்கிறது. அதாவது, கோபாலில் பா-வை எடுத்துவிட்டால் கோல். பா-வை மட்டும் எடுத்துக் கொண்டால் பாட்டு. அதாவது பா-என்றால் பாட்டு.

இதே போல கோபால் என்ற சொல்லின் ஒரு எழுத்தை மாற்றி மாற்றி எடுப்பதன் மூலம் கால், பல், கல் என்ற சொற்களும் நமக்குக் கிடைக்கும். இப்படிச் சொல்றதாலே, கோபால்னு யாராவது பேர் வைச்சிக்கிட்டிருந்தா அவங்க கோவிச்சிக்காதீங்க!

மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழாவை நாம கொண்டாடினோம் இல்லையா?

சரி. 'பாரதியார்' என்ற பெயரிலே என்னென்ன இருக்குன்னு உங்களாலே ஊகிக்க முடியுதா?

முதல்லே, 'பாரதி-யார்?' என்ற கேள்வியே அதிலே இருக்கு. ஆமா, பாரதி யார்? நாட்டு விடுதலைக்காக தேசியப் பாடல்களைப் பாடியவர்; குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் ஏராளமான பாடல்களைப் பாடிக் குவித்தவர் என்று இதற்குப் பதில் சொல்லலாம்.

நம்ம பாரதி பெயரிலே இருக்கிற முதல் எழுத்து என்ன? பா. பா-என்றால் பாட்டுன்னு பார்த்தோம். பாட்டுகள் எழுதியவர் தானே பாரதி! பா-வுக்கு அடுத்து ரதி என்று உள்ளது. ரதி-என்றால் அழகி என்கிறோம். ரதி போல அழகாய் இருக்கிறாள் என்கிறோம். பாரதியாருடைய பாட்டும் ரதி போல அழகாக இருக்கிறது. இல்லையா?

தமிழில் ஒரே ஒரு எழுத்துக்கும் பொருள் உண்டு. உதாரணம்: மா, தா, வை. இந்த ஒவ்வொரு எழுத்துக்கும் பொருள் சொல்ல வேண்டும். பிறகு அந்த ஒவ்வொரு எழுத்தையும் சேர்த்துப் படித்தாலும் ஒரு சொல் வரவேண்டும். பொருள் வர வேண்டும். மா-என்றால் மிகப் பெரிய என்றும், மாம்பழம் என்றும் பொருள்படும். தா - என்றால் கொடு அல்லது தருக. வை-என்றால் வைக்கவும் அல்லது எடுத்து வை. சரி-இப்ப இந்த மூன்று எழுத்தையும் ஒன்றைச் சேர்த்துப் பார்ப்போம். மா-தா-வை 'மாதாவை' என்று வருகிறதல்லவா? மாதா என்றால் அம்மா. மாதாவை-அம்மாவை.

இப்ப எல்லோரும் 'காஞ்சிபுரம்' போகலாம். அப்படியே காசியையும் பார்க்கலாம். ஆமா. 'காஞ்சிபுரத்திலே' காசியும் இருக்கே. 'காஞ்சிபுரம்' என்ற சொல்லில் ஆறு எழுத்துக்கள் உள்ளன. இந்த ஆறு எழுத்துக்களை வைச்சிக்கிட்டே ஆறு சொற்களையும் உண்டாக்கலாம். அவை என்னென்ன தெரியுமா? கஞ்சி, காசி, காரம், கரம், சிரம், பிறகு எழுத்தை மாற்றுவதன் மூலம் சிகரம் மற்றும் காசிம் என்ற பெயரும் கிடைக்கும்.

ஒரே கல்லில் இரண்டு மாங்காய் என்பதுபோல, ஒரே சொல்லில் இரணடு பொருள்களும் உள்ளன.

உதாரணமாக, பலகை-இது பலகையையும், பல கைகளையும் குறிக்கும். வைகை - இது வைகை நதியையும், கையை வை என்றும் பொருள் தரும். இதையே திரும்பிப் படித்தாலும் இந்தப்பொருள் வரும். பட்டம்-இது காற்றாடியையும் குறிக்கும், படிப்பை முடித்துப் பெறுகின்ற பட்டத்தையும் குறிக்கும். இதேபோலத்தான் சட்டமும். ஆடு என்கிறோம். இது ஆட்டையும் குறிக்கும். ஆட்டத்தையும் குறிக்கும். இப்படித் தமிழில் சொல்லிக் கொண்டே போகலாம். அதற்கு நேரம் கிடைக்கவேண்டுமே!

நன்றி: சென்னைத் தொலைக்காட்சி (கண்மணிப் பூங்கா)

—பி. வி. கிரி

## இந்திய எழுத்தாளருக்கு உலகப் பரிசு!

**பி**ரபல இந்திய எழுத்தாளரான திருமதி அனிதா தேசாய்க்கு குழந்தைகள் நாவலுக்கான 'கார்டியன் விருது' கிடைத்துள்ளது. "கடலின் அருகே உள்ள கிராமம்" என்ற அவரது புத்தகத்திற்கு இவ்விருது வழங்கப்பட்டிருக்கிறது.

மிகவும் சிறப்பு வாய்ந்ததாக இவ்விருது கருதப்படுகிறது. 1967ல் இது அமைக்கப்பட்டது. இந்த விருது. காமன்வெல்த் நாட்டைச் சேர்ந்த ஒரு எழுத்தாளருக்கு இவ் விருது வழங்கப்படுவது இதுவே முதன்முறையாகும் என்பது நாமெல்லாம் பெருமைப் படத்தக்க ஒரு விஷயமாகும்.

# ஏற்றமிக்கதோர் எதிர்காலத்தின் அஸ்திவாரமாக 80-கோடித் திட்டமொன்று...



## நாட்டின் மேக்னசைட் தேவையில் மூன்றில் ஒருபங்கு தயாரிக்கும் நிறுவனத்தின்சீரிய சேவை.

1979ம் ஆண்டில், தமிழக அரசின் நிறுவனமாகத் துவங்கிய, தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட், இன்று நமது நாட்டின் மேக்னசைட் உற்பத்தியில் முதலிடம் வகிக்கிறது.

தரச்சிறப்பான மேக்னசைட் தயாரிப்பாளரின் மற்ருேர் அரிய முயற்சியே இந்த 80 கோடித் திட்டமாகும். இதன் மூலம் உலகத் தரக்கட்டுப்பாடுகளுக்கிணையான மேக்னசைட்டை அளித்து, இறக்குமதியைக் குறைத்து, அந்நியச் செலவாணியை மிச்சப்படுத்த உதவுகிறது தமிழ்நாடு மேக்னசைட்.

அதோடு கிராமப்புற வேலை வாய்ப்புகள் பெருகவும் வழிகோலுகிறது.

எஃகு தொழிற்சாலைகளுக்கான ரிஃப்ராக்டரி செங்கல்களுக்கு முக்கிய்மாக உபயோகமாகும் இந்த மேக்னசைட், கால்நடைத் தீவனம், இரசாயன உரம், இரயில்வே, மற்றும் மொசைக் தரைத்தளங்களுக்கும் அத்தியவாசியமானதாகும்.

தற்போது, மாதாமாதம் 10,000 மெட்ரிக் டன்கள் மேக்னசைட்டை உற்பத்திசெய்யும் தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட், எதிர்காலத்தில் ஏற்றமிக்க பல உற்பத்தி இலட்சியங்களில் வெற்றிவாகை சூடத் தயாராகிவிட்டது.

TANMAG

**தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட்.**

(தமிழக அரசு நிறுவனம்)

119, கிரீன்வேஸ் சாலை, ஃபேர்லேண்ட்ஸ்,

சேலம்-636 004.

DIPR/MAC

புதுக்கோட்டை மாவட்டத்தில் விளையாட்டுத் துறை, மாணவ மாணவிகள் மற்றும் பொதுமக்களிடையே குறிப்பாக, கிராமப்புறங்களில் விளையாட்டு ஆர்வத்தைப் பெருக்கிடவும், விளையாட்டுத் திறனை வளர்க்கவும், விளையாட்டுக்களை ஊக்குவிக்கவும் தமிழ்நாடு அரசு விளையாட்டுத்துறையை ஊக்குவித்து வருகிறது.

மாவட்ட விளையாட்டு மன்றத்தில் தட களம் ( Athletics ) கால்பந்து, கூடைப்பந்து, கையுந்துபந்து ( Volley Ball ) மற்றும் வளைகோல் பந்து (Hockey) ஆகிய விளையாட்டுப் பயிற்றுநர்கள் உள்ளனர். அவர்கள் ஆண்டுமுழுவதும் மாவட்டத்திலுள்ள அனைத்து ஆர்வமிகு விளையாட்டு வீரர்களுக்கும், அவர்கள் இருப்பிடத்துக்கு விளையாட்டுக் கருவிகளுடன் சென்று அறிவியல் பூர்வமாகச் சம்பந்தப்பட்ட விளையாட்டுகளில் பயிற்சி அளித்து விளையாட்டுத் திறனை வளர்க்கின்றனர்.



மேலைநாடுகளில் உள்ளதுபோல் ஐந்து வயதுக்குக் குறைவான சிறார்களின் விளையாட்டு ஈடுபாட்டினைக் கண்டு கொள்வதற்காகச் சென்ற ஆண்டிலிருந்து நடத்தப்பட்டு வருகின்றன.

மாநில, அகில இந்திய பன்னாட்டுப் போட்டிகள் மற்றும் ஆசிய ஒலிம்பிக் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குத்தமிழ்நாடு அரசு அறிவித்துள்ள உதவி மானியங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

# மாவட்ட விளையாட்டு மன்றம்

ஒவ்வொரு ஆண்டும் கோடைக் கால விடுமுறையில் எல்லா விளையாட்டுகளிலும் ஆர்வமிகு பள்ளி மாணவ, மாணவிகளுக்கும் இருப்பிடம், உண்டி மற்றும் பனியன் ஆகிய வசதிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இது அவர்களின் விளையாட்டுத்திறனை வளர்க்கப் பயன்படுகின்றது.

ஒவ்வொரு ஆண்டும் மாவட்ட அளவிலான பொங்கல் விளையாட்டுப் போட்டிகள் பொதுமக்களுக்காக நடத்தப்பட்டு வருகின்றன. மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட விளையாட்டு வீரர்கள் மாநில அளவிலான பொங்கல் விளையாட்டுப் போட்டிகளுக்கு அரசுச் செலவில் அழைத்துச்செல்லப்படுகின்றனர்.

ஒவ்வோர் ஆண்டும் 16 வயதுக்குக் குறைவான மாணவ, மாணவிகளுக்கான 'இளமையில் தெரிந்தெடுத்தல்' விளையாட்டுப் போட்டிகள் அனைத்து விளையாட்டுகளிலும் நடைபெறுகின்றன. அவற்றில் தெரிந்தெடுக்கப்பட்ட வீரர்கள் மாநில அளவுப் போட்டிகளுக்கு அரசுச் செலவில் அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

மிக இளமையில் தெரிந்தெடுத்தல் போட்டிகள் மாண்புமிகு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களின் நேரிடை ஆணையின்கீழ்,

இவ்வாண்டு இத்திட்டத்தின் கீழ் புதுக்கோட்டை மாவட்டத்தில் பத்து நர்சரிப் பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவை ஒவ்வொன்றுக்கும் ரூ. 500 விளையாட்டுக் கருவிகள் வாங்குவதற்கும், ரூ. 100 போட்டிகள் நடத்தவும் மானியங்களாக வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் மூலம் சிறார்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு வெளிக் காட்டும் அட்டை (Documentation Card) வழங்கப்படுகின்றன. அதில் அந்தச் சிறார்களின் ஈடுபாடு எந்த விளையாட்டில் உள்ளது என்று குறிக்கப்படுகிறது. இந்த அட்டையின் மூலம் சம்பந்தப்பட்ட சிறார்களை -சம்பந்தப்பட்ட விளையாட்டில் தொடர்ந்து மிக இளமையிலிருந்தே பயிற்சி அளிப்பதற்கும், பிற்காலத்தில் சம்பந்தப்பட்ட விளையாட்டில் சிறந்து விளங்கி ஒலிம்பிக் போட்டிகள் வரையில் செல்வதற்கும் கால்கோளாக அமைகிறது இத்திட்டம்.

இவ்வாண்டு முதல் தனிப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கும் மானியங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அவ்வகையில் இவ்வாண்டில் இம்மாவட்டத்தில் 15 தனிப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு மானியங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கிராமப்புற பொதுமக்களின் விளையாட்டு ஆர்வத்தையும், திறனையும் வளர்ப்பதற்குப் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள 11 கிராமங்களில் இதுவரையில் ஊரக விளையாட்டு மையங்கள் துவங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஊரக விளையாட்டு மையத்திற்கும் ஒவ்வொரு ஆண்டுக்கும் ரூ. 600 வீதம் விளையாட்டுக் கருவிகள் வாங்கிட மானியங்கள் வழங்கப்பட்டு வருகின்றது.

ஒவ்வொரு ஊரக விளையாட்டு மையத்திலும் ஒரு சிக்கன விளையாட்டு அரங்கம் அமைக்க மானியங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வகையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் மணமேல்குடி ஊராட்சி ஒன்றியத்தில் கோட்டைப் பட்டினம் ஊரக விளையாட்டு மையத்தில் சிக்கன அரங்கம் கட்டும் பணி, விரைவில் தொடங்கப்பட இருக்கிறது.

இதுநாள் வரையில் புதுக்கோட்டையில் ஒரு விளையாட்டரங்கம் இல்லாத குறையை நீக்கும் பொருட்டு **நகரின் நடுவே பேருந்து நிலையத்திற்கு அருகே 25 ஏக்கர் நிலத்தில் ரூ. 12 இலட்சம் மதிப்பீட்டில் அனைத்து வசதிகளும் கொண்ட ஒரு முழுமையான விளையாட்டரங்கம் விரைவில் அமைக்கப்பட இருக்கின்றது.**

# நூல் நயம்

### பாரதி காணிக்கை

ஆசிரியர் : கவிஞர் தமிழ் முடி

வெளியீடு :
தமிழ் முடி நிலையம்,
1332, செக்டர் 7-வது தெரு,
33, கே. கே. நகர்,
சென்னை-600 078.

விலை ரூ. 3.50 பக்கம் 64

மரபுக் கவிதையும் புதுக்கவிதையும் கலந்த கலவையாகத் திகழும் இந்நூல் எளிய, இனிய, சொல்மாலையாக விளங்குகிறது. சொற்கள் தட்டுத் தடங்கலின்றி வந்து விழுந்திருக்கின்றன. அனைத்தும் மகாகவி பாரதிக்குச் சூட்டப் பெறும் மலர் மாலைகளாகி மணம் பரப்புகின்றன.

ஏனோ தானோ பாட்டெழுதி
இழிவைத் தமிழுக் காக்காமல்
தேனாய் பாலாய் பாட்டெழுதி
தெய்வ மறையாய் உயர்த்தியவன்

-என்னும் வரிகள், 'பாரதியால் தமிழ் தகுதி பெற்றதையும் தமிழால் பாரதி தகுதி பெற்றதையும்' தக்க வகையில் எடுத்துக் காட்டுகின்றன.

பாரதியை, கவிப்பயிர் வளரச் செய்த உழவுக் கவிஞன் என ஆசிரியர் குறிப்பிட்டிருப்பது நயமாக உள்ளது.

— தமிழ்ப்பித்தன்.

### குறளும் குலிஸ்தானும்

ஆசிரியர் : லா. மு. குலாம் தஸ்தகீர்,

வெளியீடு : அசோகன் பதிப்பகம்,
121, திருமலை நகர்,
பெருங்குடி,
சென்னை-600 096.

பக்கங்கள்: 96 விலை ரூ. 5-50

மொழி, இனம், நாடு என்ற எல்லைகளைக் கடந்த நிலையில் எல்லாராலும் கொண்டாடப் படும் உலகப் பொது மறை திருக்குறள்.

பதினான்காம் நூற்றாண்டில் பாரசீக நாட்டில் ஷேக்சாதி என்னும் பெரியவர் 'பூஞ்சோலை' என்ற நூலை எழுதியுள்ளார். செய்யுளும், உரைநடையும் கலந்து காணப்படும் இந்நூலில் சின்னஞ்சிறிய கதைகளும் உண்டு திருக்குறளில் காணப்படும் பல கருத்துகளுக்கு ஏற்ப ஷேக்சாதி எழுதியிருப்பதை திறம்பட ஒப்பிட்டுக்காட்டுகிறார் நூலாசிரியர்.

—மாமூலன்

### விந்தை ஓவியர் வால்ட் டிஸ்னி

ஆசிரியர்: ஓவியர் ஆழி,
வெளியிட்டோர்: சித்ரகலா பதிப்பகம், அகரக் கடம்பனூர், ஆழியூர் அஞ்சல்,

பக்கங்கள்: 60 விலை ரூ. 4.80.

உலகப் புகழ் பெற்ற ஓவியர் வரிசையில் குறிப்பிடத்தக்க புகழ் பெற்றவர் அமெரிக்க நாட்டினரான வால்ட் டிஸ்னி என்பாராவர்.

திரைப்பட வரலாற்றில் - நாய் எலி, முயல், பூனை, பன்றிகள், பறவைகள் எல்லாவற்றையும் பேசும் ஓவியங்களாக்கி நடிக்க வைத்துப் பெரும் புகழ் பெற்ற பெருமையாளர் வால்ட் டிஸ்னி எனப் பலரும் அறிவர். ஆனால் அத்தகைய விந்தைகள் பலபுரிந்த விதம் விதமாகப் பரிசும் பாராட்டும் பெற்றுச் சிறந்த அவரது வாழ்க்கைப் பாதை எப்படியிருந்தது என்பதைப் பெரும்பாலோர் அறியார். அதை விளக்கும் நூலே இது.

நூலாசிரியரும் ஓவியர் என்பதால் - ஒன்பது வித 'கார்ட்டூன்' ஓவியத் தலைப்புகளின் கீழே கட்டுரைகளைத் தொகுத்துத் தந்திருக்கிறார்.

சாதாரண பள்ளிப்படிப்பைக் கூட முடிக்காமல், 5 டாக்டர் பட்டங்களைப் பெற்ற வால்ட் டிஸ்னியின் வாழ்க்கை இன்றைய இளந் தலைமுறையினருக்கு வழி காட்டுவதாகும். எல்லாரும் படித்து இன்புறத்தக்க நூலாகும் இது.

—'இந்திரன்'

### கவனிக்கப்படாத கருணை மனுக்கள்

ஆசிரியர்: மானாமதுரை மாசி

வெளியீடு: அன்பு பப்ளிகேஷன்ஸ்
35, கவரைத் தெரு,
மேற்கு மாம்பலம்,
சென்னை-33

விலை: ரூ. 7.50 பக்கங்கள்: 112

இன்று புதுக் கவிதைகள் புதுமைக் கோலத்துடன் பவனி வருவதைப் பார்க்கிறோம். அந்த வகையில் இந்தநூலும் புத்தொளி வீசக் காண்கிறோம்.

கவர்ச்சியான தலைப்புள்ள இந்தக் கவிதைத் தொகுப்பில், கவிஞரின் ஆழ்ந்த சிந்தனைகள்-முற்போக்கு எண்ணங்கள் எல்லாம் பளிச்சிடுகின்றன.

இலங்கையை, ''இந்திய வரைபடம் சிந்திய கண்ணீர்த்துளி'' என்று கூறுவது நல்ல கற்பனை. பல கவிதைகள் நம் இதயத்தில் இடம் பிடிக்கின்றன. அவற்றுள் சில: கவனிக்கப்படாத கருணை மனுக்கள், விடியல் கிராமம், நிழல் தேடும் மரங்கள், பூவிழியின் ஓரங்கள்.

### அன்னை மொழியும் ஆட்சித் துறையும்

ஆசிரியர்: கோ. முத்துப்பிள்ளை

வெளியீடு: முத்தமிழ் நிலையம்,
24, ஆறாவது குறுக்குச் சாலை
மகாகவி பாரதி நகர்,
சென்னை-39

விலை: ரூ. 5 பக்கங்கள்: 96

மொழிபெயர்ப்பு என்பது ஒரு கலையாகும். அது கைவந்தகலையாக இருக்கிறது இந்நூலாசிரியருக்கு. ஆங்கிலத்தைப்போல, தமிழிலும் இனிமையாகச்சொல்ல முடியும்; ஆங்கிலத்துக்குப் பொருத்தமான சொற்கள்தமிழ்ச் சுரங்கத்தில் ஏராளமாக இருக்கின்றன என்பதைச் சொல்லாமல் சொல்கிறார் இந்நூலாசிரியர்

Ventilator, Canvas, Present Sir, Snake Bar, Slide, Visa, Bio-data இப்படி ஆங்கிலச் சொற்களுக்கு ஏற்ற-பொருத்தமான மொழி பெயர்ப்புகளை எவ்வளவு அழகாகக் கூறுகிறார் ஆசிரியர்? 'தமிழில் முடியாது' என்று கூறுபவர்களின் முகத்திரையைக் கிழிக்கும் வகையில் முத்து முத்தான 12 கட்டுரைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. எல்லாம் இனிக்கின்றன. 'தமிழில் முடியும்!' என்று தலை நிமிரவைக்கின்றன.

— பி. வி. ஜி.

அண்ணல் பிறந்த மண்ணில் ஆறு நாட்கள்:

# கண்டோம் காந்தியடிகளை!

பி. வி. கிரி



**போ**ர்பந்தர்!

போர் எதுவும் இன்றி, நம்மையெல்லாம் ஒரே பந்தமாக்கி, அகிலமே அதிசயிக்கும் வண்ணம் ஆனந்த சுதந்தரம் வாங்கித் தந்த அண்ணல் காந்தியடிகள் பிறந்த புண்ணியத்தலம்!

குஜராத் சுற்றுப் பயணத்தின் போது, அந்தப் புண்ணியத்தலத்தில் ஒரு நாள் இரவு தங்கியிருந்து மறுநாள் பயணம் தொடரும் பேறு பெற்றோம்.

குஜராத்தின் சௌராஷ்டிரப் பகுதியில், மேற்கு எல்லையில், அரபிக் கடற்கரையில் அமைந்துள்ள அழகிய நகரம்தான் போர்பந்தர்.

பம்பாயிலிருந்து இரண்டு மணி நேரம் பயணம் செய்து அந்த இடத்தை அடைந்துவிடலாம். அகமதாபாத்திலிருந்து இங்கு வர ரயில் வசதி உண்டு. இது ஒரு தொழில் நகரமாதலால் அரேபிய, ஆப்பிரிக்க, பாரசீக நாடுகளுடன் வணிகத் தொடர்பு எப்போதும் நடக்கின்றது.

போர்பந்தருக்கு இன்னொரு பெயரும் உண்டு. அதுதான் சுதாமபுரி. சுதாமர் இங்கு பிறந்ததால் இவ்வூருக்கு இப்பெயர் வந்தது. அதை நினைவூட்டும் வகையில் சுதாமர் கோயில் ஒன்றும் இங்குள்ளது.

சுதாமர் என்பவர் யார்? அவர்தான் குசேலர். இளம் வயதில் கண்ணனோடு கல்வி பயின்றவர். கோயிலில், குசேலரைக் கண்ணன் அன்புடன் வரவேற்று உபசரிக்கின்ற வண்ணப்படம் ஒன்று நம்மைக் கவர்கின்றது.

ஆயிரக்கணக்கான புறாக்கள் கோயிலின் திறந்தவெளியில் காணப்படுகின்றன. அந்தப் புறாக்களைப் போல, கோயிலுக்கு வரும் பக்தர்களும், சுற்றுலாப் பயணிகளும் ஏராளம்.

### காந்தி பிறந்த இல்லம்

குசேலர் கோயிலிலிருந்து நேரே நாம் செல்வது, காந்தியடிகள் பிறந்த அந்தப் புனித இல்லத்துக்கு.

அழகாகவும் அதே சமயத்தில் எளிமையாகவும் விளங்குகிறது அந்த இல்லம்.

இல்லத்தினுள்ளே பயபக்தியுடன் செல்கிறோம். அதோ! தரையில் 'ஸ்வஸ்திக்' குறியிட்டு, அந்த இடத்தில் மலர் தூவப்பட்டிருக்கிறதே... ஆம். அதுதான் அண்ணல் பிறந்த இடம். நம்மையறியாமலேயே 'ரகுபதி ராகவ





இதுதான் 'இருதய குஞ்ச்'



ராஜாராம்' என்ற அந்தப் பாடலை நம் வாய் மெல்ல முணு முணுக்கிறது. நம் கரங்கள் அந்தப் புனித இடத்தைத் தொட்டுக் கும்பிடுகின்றன. நம் கண்கள் அந்த இடத்திலேயே குத்திட்டு நிற்கின்றன; நம் நினைவுகளோ பின்னோக்கிச் செல்கின்றன.

ஓரிடத்தில் காந்தியடிகளின் பெற்றோர்களுடைய படம் வைக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம்!

அதோ! நெட்டையான மரப் படிகள் தென்படுகின்றனவே! அந்தப் படியின் மேலே ஏறி, மேல் மாடிக்குப் போக, படியையொட்டி ஒரு கயிறும் தொங்கிக் கொண்டிருக்கிறது. அந்தக் கயிற்றைப் பிடித்துக் கொண்டு, படியிலேறி மேலே போகிறோம். அங்குதான் காந்தியடிகள் படித்த சிறிய அறை இருக்கிறது.

"The Reading Room of Mahatma Gandhiji in this small but well Ventilated room Gandhiji used to read his lession in his early childhood''

—என்ற வாசகம் அந்த அறைக்கு முன்னே காணப்படுகிறது.

இந்த வீடு பழமை மாறாமல், முன்பு எப்படி இருந்ததோ அதே நிலையில் இன்றளவும் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

இந்த வீட்டை ஒட்டிப் புதிதாகக் கட்டப்பட்ட இடமே 'கீர்த்தி மந்திர்' ஆகும். உலகமெல்லாம் கீர்த்தி பெற்ற உத்தமருக்கு எழுப்பப்பெற்ற ஒப்பற்ற நினைவுச் சின்னமே இது.

காந்தியடிகள் 79 ஆண்டுகள் வாழ்ந்ததைக் குறிக்கும் வகையில் 79 அடி உயரத்தில், கோயில் வடிவில் உருவாக்கப்பட்டுள்ளது இந்த நினைவாலயம். இந்த இடத்தில் நூலகம், நூற்பு மண்டபம், பிரார்த்தனை மண்டபம் ஆகியவை உள்ளன. அண்ணலின் அமுத மொழிகள் ஆங்காங்கே பொறிக்கப்பட்டிருக்கின்றன.

காந்தி - கஸ்தூரிபா ஆகியோரின் திருவுருவப்படங்களும், வாழ்க்கை வரலாற்றுப் படங்களும் உள்ளன. காந்தியடிகள் சிறுவனாக இருந்தபோது உபயோகித்த பொருள்கள் மட்டுமல்ல, அவர் படித்த புத்தகங்கள் கூட இங்குப் பத்திரப்படுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன.

## சாபர்மதி ஆசிரமம்

அகமதாபாத் நகருக்கு ஏழு கிலோ மீட்டர் வடக்கில் 'சாபர்மதி' நதிக்கரையில் உள்ள ஒரு அமைதியான அழகான இடந்தான், சாபர்மதி ஆசிரமம். பூ மரங்கள் பூச்சொரிய, பன்னிறப் பறவைகள் இசைபாட, நம் இதயம் தொடும் குடில்தான் 'இருதய குஞ்ச்' (Hridaya Kunj). 1915ல் காந்தியடிகள் அமைத்துக் கொண்ட எளிய ஆசிரமம் தான் இது. 'Babu Sitting room' என்ற இடத்தில் காந்தியடிகள் அமர்ந்த இடம். அவர் பயன்படுத்திய ராட்டை, கைத்தடி, எழுதும் மேசை எல்லாம் இருக்கின்றன.

உலகையே வியக்கவைத்த சத்தியாக்கிரகப் போராட்டத் திட்டம் உருவான இடம், இந்த ஆசிரமம்தான். பிரிட்டிஷாரைத் திகைக்கவைத்த இந்த அகிம்சைப் போரை அகிலமே அறியுமே!

இந்த ஆசிரமத்திலிருந்துதான். பிரிட்டிஷ் ஆட்சியாளரின் உப்பு வரியை எதிர்த்து, அதை மீறி உப்பு காய்ச்சக் கடலுக்குத் தண்டி யாத்திரையை 1930ஆம் ஆண்டில் காந்தியடிகள் நடத்தினார்.

இதே ஆசிரமத்தில் வினோபா பாவே வாழ்ந்த சிறு குடிலும் (Vinoba Kutir), மீரா பென் வாழ்ந்த சிறிய குடிலும் (Mira Kutir) உள்ளன.

பல புரட்சிகளுக்கு வித்திட்ட இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க ஆசிரமத்தில் கஸ்தூரிபாய் அறை ஒன்று காணப்படுகிறது. அங்கு அவரது கைப்பை, ராட்டை, நூல் எல்லாம் வைக்கப்பட்டிருக்கின்றன.

காந்தியடிகள் பயன்படுத்திய துணிமணிகள், போர்வை,

போர்பந்தரிலுள்ள கீர்த்தி மந்திர்





**தமிழ்நாட்டுக்கு வரும் முக்கியப் பிரமுகர்களுக்கு, கைத்திறன்மிக்க தஞ்சாவூர்த்தட்டு நினைவுப் பரிசாக வழங்கப்படுகிறது. இதேபோல குஜராத்தில், இந்தப் பலகணியின் மாதிரி வடிவம் அன்பளிப்பாக வழங்கப்படுகிறது. அகமதாபாத் சித்தி செய்யது மசூதியில் உள்ள, கல்லில் அமைந்த கலைத் திறன் மிக்க இந்தப் பலகணி, இந்து-இஸ்லாமியக் கட்டடக் கலையின் சின்னமாகத் திகழ்கிறது.**

ராட்டை, பாத்திரங்கள், மூன்று குரங்குகள் பொம்மை, கரண்டிகள், பேனாஸ்டாண்டு, மூங்கிலால் ஆன பேனா, மண்பாத்திரம், தட்டு, தேங்காய் வெட்டும் கத்தி, தயிர் கடையும் மத்து, காலணிகள் - இவையெல்லாம் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆசிரமத்தை நம் நாட்டவர் மட்டுமல்ல, மேலை நாட்டினரும் வந்து பார்வையிடுகிறார்கள்; பரவசமடைகிறார்கள். இந்த ஆசிரமத்துக்கு அருகில் கண்காட்சி ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இதில் காந்தியடிகளின் வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக்கும் புகைப்படங்கள் உள்ளன.

சாபர்மதி ஆசிரமம் ஒரு அறக் கட்டளையின் கீழ் நிர்வகிக்கப் படுகிறது. அதன் தலைவர் தமிழ் நாட்டின் ஆளுநராக இருந்த திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள்.

## காபா காந்தி இல்லம்

ராஜ்கோட்டில் இருப்பதுதான் காபா காந்தி இல்லம் (Gandhi Smiriti). இதை 'காபா காந்தி டேலா' என்றும் அழைக்கிறார்கள் 'டேலா' என்றால் இல்லம்.

குஜராத்தின் மிக முக்கியமான பெரிய நகரம் ராஜ்கோட். காந்தியடிகளின் தந்தை காபா காந்தி ராஜ்கோட் சமஸ்தானத்தில் முக்கிய பதவியில் இருந்தார். அப்போதுதான், காந்தியடிகள் தம் பிள்ளைப் பருவத்தைப் பதினொரு ஆண்டுக் காலம் இந்த இல்லத்தில் கழித்தார்.

காந்தியடிகளின் பள்ளி வாழ்க்கையைச் சித்திரிக்கும் படங்கள் இங்கே அழகாகத் தொகுத்து வைக்கப் பெற்றிருக்கின்றன.

காந்தியடிகள், மேல் படிப்புக்காக இலண்டன் மாநகரம் புறப்படுவதற்கு முன்பாக, ஜைன முனிவர் ஒருவரிடம் ஒரு சபதம் ஏற்றார். மது, மாது, மாமிசம் தொடுவதில்லை என்பதே அது. இந்த அரிய நிகழ்ச்சி,இந்த இல்லத்தில்தான் நடந்தது!

மேலும் பார்த்துக்கொண்டே செல்கிறோம். காந்தியடிகளின் பத்துக் கட்டளைகள் ஓரிடத்தில் அழகாக எழுதி வைக்கப் பெற்றிருக்கின்றன. காந்தியடிகள் பயன்படுத்திய பெரிய ஜாடி, லாந்தர் விளக்கு, கண்ணாடி பதித்த அஞ்சறைப் பெட்டி, புத்தகங்கள், கிருஷ்ணன் படங்கள், உருத்திராட்ச மாலை, சொம்புகள் எல்லாம் அழகுறப் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. ஆங்காங்கே பொன்மொழிகளும் உண்டு. ராஜாஜி, டாக்டர் ராதாகிருஷ்ணன் ஆகியோரின் படங்களும் உள்ளன.

காந்தியடிகள் பிறந்த இல்லம்- அவர் பள்ளிப் பருவத்தைத் தொடங்கிய இடம் - அவர் அடிமைத்தளை அகற்ற அமைத்துக் கொண்ட ஆசிரமம் - இவையெல்லாம் பார்த்துப் பார்த்து அப்படியே மனத்தில் பதிந்து விட்டன. அவையெல்லாம் உயிர் பெற்று எழுந்து எங்கள் கண் முன்னே புன்னகை செய்தன... ஆம். மானசீகமாக காந்தியடிகளையே கண்டோம்... கரம் குவித்தோம்!

**பல்கலைக் கழகத்தின் முகப்போ, அரசு அலுவலகக் கட்டடமோ அல்ல; அகமதாபாத்திலுள்ள அத்தீசிங் கோயிலின் எழில்மிகு தோற்றமே இது.**





# நாட்டு நலப்பணித் திட்டத்தில் நங்கையர் பொதுப்பணி

நாட்டு நலப்பணித் திட்டமானது (National Social Service) இந்திய நாட்டில் 1969ல் 20 ஆயிரம் மாணவர்களோடு முதன் முதல் தொடங்கப் பெற்றது. அப்போது 2 ஆயிரம் மார்ணவர்களோடு சென்னைப் பல்கலைக் கழகத்தில் துவக்கப்பட்ட இத் திட்டத்தில் ஆண்டுக்காண்டு மாணவர்கள் அதிக அளவில் சேர்ந்திடலாயினர்.

அதாவது, 1982-83 ஆம் ஆண்டில் மட்டும் தமிழகக் கல்லூரிகளில் உள்ள நாட்டு நலப் பணித் திட்டத் தொண்டர்கள் எண்ணிக்கை 50 ஆயிரம் என்ற அளவிலே விரிவடைந்துள்ளது. சென்னை, செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, தருமபுரி, சேலம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களும் இதில் அடங்கும்.

முறைப் பணிகள் (Regular Activities), முகாம் பணிகள் (Camping Programme) என்ற இரு வகைப்பணிகளில் இதயபூர்வமாக இத்திட்டத்தில் மாணவர்கள் மட்டுமல்ல, பல்வேறு கல்லூரி மாணவிகளும் ஈடுபடுகின்றனர்.

## சிறப்புக்கு உரியது

'பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்' என்று பாரதியார் பாடியதற்கு ஏற்றபடி இருப்பது மட்டுமல்ல; பிறர் நலம் பேணும் பெற்றியும் புதுமைப் பெண்ணுக்கு உரிய உயரிய அணிகலனே என்ற வகையில் இக்கால மாணவிகள் செயல்பட முன்வருவதானது சிறப்புக்குரிய ஒன்ருகும்.

சென்னை - குரோம்பேட்டையில் உள்ள திருமதி தேவகுன்வார் நானாலால் பட் வைஷ்ணவா மகளிர் கல்லூரி மாணவிகள் இந்த வகைப்பணியிலே இணையற்றவர்களாகத் திகழ்கின்றனர்.

இந்தக் கல்லூரியில் 1977-ல் தான் நாட்டு நலப்பணித்திட்டம் (NSS) துவக்கப்பட்டது. 1982 வரை இரண்டு பிரிவுகளைக் ( Unit ) கொண்டு 200 மாணவிகளோடு இயங்கி வந்த இந்த இயக்கத்தில் இப்போது 300 மாணவிகள் பங்கேற்றுள்ளனர். மூன்று பிரிவுகளாகச் செயல்படும் இவ்வியக்க மாணவிகள் ஆண்டுதோறும் நடத்திடும் சிறப்பு முகாம்கள் புகழத்தக்கவைகளாகும்.

சென்ற ஆண்டு ஜனவரி 3ஆம் தேதி முதல் 12 ஆம் தேதிவரை குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள படப்பை கிராமத்தில் இக் கல்லூரியின் நாட்டு நலப் பணித்திட்ட இயக்க மாணவிகள் நூறுபேர் முகாமிட்டபின், அந்தக் கிராமமே புதுப் பொலிவு பெற்றுவிட்டிருக்கிறது. உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை. மகாத்மா காந்தியடிகள் பிறந்த நாளான அக்டோபர் 2ஆம் நாளன்று செங்கை மாவட்டம் புதுவை நகரில் ஒரு நாள் முகாமிட்ட இந்தமாணவிகளால்ஓலைக்

—பி. எல். ராஜேந்திரன்

குடில்களும் சிங்காரம் பெற்றன. ஆம்; அக்கிராமக் குடிசைகளைச் சீர் செய்தல், வெள்ளையடித்தல், ஏழை எளியோர்க்கு உடை வழங்கல் போன்ற பணிகளைப் பெரும் உற்சாகத்தோடு செய்தார்கள் இவர்கள்.

கடந்த டிசம்பரில், அடையாறில் உள்ள 'அன்பகம்' என்னும் முதியோர் இல்லத்தில் அபிராமபுரம்-பல்லவபுரம் மகளிர் அரிமா

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் துவக்கிவைத்த ஊரப்பாக்கம் முகாம்.





ஊரப்பாக்கம் மருத்துவமுகாம்

சங்கத்தாருடன் ஒருநாள் முகாமிட்ட இவர்கள், சைதை மருத்துவ அதிகாரி டாக்டர் சேதுமாதவன் குழுவினரோடு அந்த இல்லத்தார் மருத்துவப் பரிசோதனை பெற்றிட உதவிய பாங்கு பாராட்டத்தக்கதாக இருந்தது. மாணவிகளின் கலை நிகழ்ச்சியும் அங்கே களைகட்டியது. சுவை கூட்டியது.

### திட்ட அலுவலர்

வைஷ்ணவா மகளிர் கல்லூரி நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் மூவருள் ஒருவரான செல்வி ஏ.சுதா அவர்களிடம் அத்திட்ட ஏற்பாடுகள் குறித்து நாம் விடுத்த வினாக்களும், அதற்கு அவரளித்த விடைகளும் வருமாறு:

''இத்திட்டத்தில் ஈடுபடுவதால் மாணவிகள் தங்கள் படிப்புக்குச் சிரமம் ஏற்படுவதாகக் கருதுகிறார்களா?''

"அப்படியொன்றுமில்லை. பெரும்பாலும் இவ்வாறான முகாம்கள் விடுமுறை நாட்களிலேதான் நடத்தப்படுகின்றன. வெளியிடங்களுக்குச் செல்லும்போது அவர்களுக்குச் செலவுத் தொகையும் தரப்படுகிறது. மாணவிகள் தாங்களாகவே முன்வந்து இவ்வியக்கத்தில் சேர்ந்து தொண்டாற்றுவதால் படிப்புக்கு இடையூறு நேரச் சாத்தியமில்லை. இத்தகைய பணிகளில் எங்கள் கல்லூரி முதல்வர் எங்களை மிகவும் உற்சாகப்படுத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது''.

''திட்ட அலுவலர்களுக்குப் பயிற்சி ஊதியம் என்று ஏதாவது உண்டா?''

''எழுபத்தைந்து ரூபாய் தரப்படுகிறது-அதாவது எங்கள் மூன்று பேருக்கும்'' என்று கூறி, சிரித்துக் கொண்ட செல்வி ஏ.சுதா, ''தன்னலம் கருதாத பொதுத் தொண்டுக்கு நாங்கள் எங்களை மனப்

ஏழை எளிய மக்களுக்குத் துணிகள் வழங்கல்





கூடுவாஞ்சேரி புகைவண்டி நிலையச்சாலை அமைப்புப் பணி

பூர்வமாக அர்ப்பணித்துக் கொள்ளுகிறோமே தவிர, ஊதியம் கருதி நாங்கள் யாரும் இந்தப் பணியில் ஈடுபடுவதில்லை'' என்றார்.

''உங்களுக்கு ஏதேனும் சீருடை உண்டா?''

''இதுவரை இல்லை!''

**இரண்டு முகாம்கள்**

நாட்டு நலப்பணித்திட்ட இயக்கத்தின் மூலம் இந்த ஆண்டில், குரோம்பேட்டை வைஷ்ணவா மகளிர் கல்லூரி மாணவிகள் நடத்திய இரண்டு நிகழ்ச்சிகள் குறிப்பிடத்தக்கவைகளாகும்.

சென்ற 3ஆம் தேதி முதல் 12 ஆம் தேதிவரை, கூடுவாஞ்சேரிக்கு அருகில் உள்ள ஊரப்பாக்கம் கிராமத்தில் இவர்களது சிறப்புமுகாம் ஒன்றினை மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. க.இராசாராம் அவர்கள் துவக்கி வைத்தார்.

இம்முகாமில் கலந்து கொண்ட மாணவிகள் - ஊரப்பாக்கம் புகைவண்டி நிலையத்திற்குச் செல்லும் சாலை அமைத்தல், சிறு சேமிப்புக் குறித்து ஏழை எளிய மக்களிடம் விளக்கல், குடும்பக் கட்டுப்பாட்டு மேன்மை பற்றி உணரும் விதத்தில் அப்பகுதி மக்களுக்கு எடுத்துரைத்தல், மருத்துவச் சோதனை, மரம் நடுதல் போன்ற பணிகளில் துவளாமல் ஈடுபட்டுத் தொண்டாற்றினார்கள்.

4.2.83ல் இக்கல்லூரிக்குள்ளேயே டாக்டர் ஆர். நஞ்சுண்டராவ் அவர்கள் இரத்ததான முகாம் ஒன்றைத் தொடங்கி வைத்தார். எழும்பூர் குழந்தைகள் நலக் காப்பகத்தின் உதவியோடு நடைபெற்ற இம் முகாமில் வைஷ்ணவா மகளிர் கல்லூரி மகளிரும் ஆசிரியைகளுமாக 95 பேர் ஆர்வத்தோடு முன் வந்து இரத்ததானம் அளித்தார்கள். பொதுத் தொண்டில் ஈடுபட்டுக் களித்தார்கள்.

**பொறுப்பு வகிப்போர்**

இக்கல்லூரி நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர்களாக செல்வி ஏ.சுதா, திருமதி மீரா முரளிரங்கன், திருமதி சசிதேவி மூவரும் உள்ளனரென்றால் அவர்களின் உதவி அலுவலர்களாகத் திருமதி எல்.விஜயலட்சுமி, திருமதி ஆர். கனகவல்லி, செல்வி என்.சந்திரவதி ஆகியோர் பொறுப்பேற்றுள்ளனர்.

செல்வி காயத்ரி, செல்வி ஸ்ரீ லட்சுமி, செல்வி ஆஷாசிங் ஆகிய மாணவிகள் திட்ட அலுவலர்களுக்கும் மாணவிகளுக்குமிடையே உதவியாயிருந்து உறுதுணைபுரிகின்றனர்.

இது போன்ற பொதுப்பணிகளில் மாணவிகளை ஈடுபடச் செய்வதானது - பட்டம் பெற்றபின் அவர்கள் கிராமப்புறங்களுக்குப் பணிபுரியச் செல்லத் தயங்கும் நிலையிருப்பதைப் போக்கிட ஓரளவுக்கேனும் உதவுவதாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## பயண வழியை மாற்றிக் கொண்ட காந்தியடிகள்



**த**மிழ்நாட்டில் 1921ஆம் ஆண்டு காந்தியடிகள் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தார். அப்போது, திருச்சியிலிருந்து புதுக்கோட்டை வழியாகச் செட்டிநாடு செல்வதாகத் திட்டம் உருவாக்கப்பட்டிருந்தது. காந்தியடிகள் புதுக்கோட்டை வழியாகச் செல்வதை அப்போதைய புதுக்கோட்டை சமஸ்தான அரசு விரும்பவில்லை. எனவே, திருச்சிராப்பள்ளியில் திரு தி.சே.சௌ.ராஜன் வீட்டில் தங்கியிருந்த காந்தியடிகளுக்கு, புதுக்கோட்டை சமஸ்தான அரசு, சமஸ்தானத்தின் காவல்துறை அலுவலர் ஒருவர் மூலம் ஒரு கடிதம் கொடுத்தனுப்பியது. கடிதத்தை பிரித்துப் படித்த காந்தியடிகள், தனது பதிலை எழுதித் தருவதாகச் சொல்லி, காவல்துறை அலுவலரைத் தங்க வைத்திருந்தார்.

இதற்கிடையில், ராஜன் வீட்டில், எல்லோருக்கும் உணவு பரிமாறப்பட்டது. சமஸ்தான காவல்துறை அலுவலரும் அந்தப் பந்தியில் அமர்ந்திருந்ததைக் கண்ட திரு ராஜன் காந்தியடிகளை வரவேண்டாம் என்று கூறிய சமஸ்தானக் காவல்துறை அலுவலருக்கு இங்கென்ன சாப்பாடு என்று ஆத்திரத்தோடு கடிந்து கொண்டார். உடனே, காவல்துறை அலுவலர் விரைந்தெழுந்து வெளியேறினார். இதனைக் கண்ட காந்தியடிகள், தனக்கும் உணவு வேண்டாம் என்று கூறி வெளியேறினார். இடர்ப்பாடான நிலையில், செய்வதறியாது திகைத்த திரு ராஜன், காந்தியடிகளை அணுகினார். திரு ராஜன் காவல்துறை அலுவலரிடம் மன்னிப்புக் கேட்க வேண்டுமென்றும், அவரை அழைத்துப் பந்தியில் உட்கார வைக்க வேண்டுமென்றும் கூறினார் காந்தியடிகள். அதன்படியே நடந்தது.

பிறகு காந்தியடிகள் வேறு வழியில் தமது பயணத்தை மாற்றியமைத்துச் சமஸ்தான அரசுக்கு ஒரு கடிதத்தை அந்தக் காவல்துறை அலுவலர் மூலம் அனுப்பி வைத்தார். காந்தியடிகளின் வரலாற்றுச் சிறப்புடைய அந்தக் கடிதம், புதுக்கோட்டை அரும்பொருட்காட்சியகத்தில் பத்திரமாகப் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கிறது.

# 'சிப்காட்'டின் தொழில் வளர்ச்சி

தமிழகத்தின் தொழில் வளர்ச்சியினைத் தலையாய கடமையாகக்கொண்டுள்ள தமிழ் நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (State Industries Promotion of Tamilnadu Ltd.,) 1971-ஆம் ஆண்டு முதல் இம்மாநிலத்தின் தொழில் வளத்தினையும், நலத்தினையும் காத்து மேலும் விரிவு செய்யப் பல புரட்சிகரத் திட்டங்களை மேற்கொண்டுள்ளது. இக்குறிக்கோளின் அடிப்படையில் தொழில்வளர்ச்சியில் பின்தங்கிய இடங்களைத் தேர்வு செய்து அங்கு தொழில் வளம் மேலோங்கத் தோள் கொடுத்துத் தொழில் முனைவோருக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்திட முன்வந்துள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டம் என மத்திய அரசாலும் மாநில அரசாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு, இங்கு சிப்காட் நிறுவனத்தின் மூலம் தொழில் வளர்ச்சியினை ஊக்குவிக்கவும், துரிதப்படுத்தவும், தனியாகத் தொழில் இணையம் அமைந்துள்ளது.

புதுக்கோட்டைக்கு அருகில் 922 ஏக்கர் நிலப்பரப்பில் 'சிப்காட்' தொழில் இணையம் அமைக்க ஏற்ற இடம் தொழில் நுட்ப வல்லுநர்களால் தேர்வு செய்யப்பட்டது. புதுக்கோட்டையில் இருந்து 6 கிலோ மீட்டரில் திருச்சி செல்லும் பெருவழிச் சாலை இருமருங்கும் சுமார் 3 கி.மீ. நீளமும், 1 கி.மீ. அகலமும் கொண்ட நல்ல மேட்டுப்பாங்கான இடம் தேர்வு செய்யப் பட்டுள்ளது.

நிலையான முதலீட்டு இருப்புகளின் 15 சதவிகித மானியம், தொழில் துவங்க ஆய்வுத் திட்டச் செலவில் 50 சதவிகிதம் முன் முதலீடு ஆய்வுத் திட்டச் செலவில் 50 சதவிகித மானியம் ஆகியவற்றுடன் வட்டியில்லா விற்பனை வரிக்கடன், உயர் மின் அழுத்த மின்சக்தி கட்டணச் சலுகை, மிக எளிய - குறைந்த வட்டியுடன் கூடிய நிதியுதவி முதலிய வசதிகளையும் கொண்டுள்ளது. மேற்சொன்னகாரணங்களால் புதுக்கோட்டையில் அமைக்கப்பட உள்ள தொழில் இணையம் வெகு விரைவில் வளர்ச்சி பெற அதிக வாய்ப்பு உள்ளது.

தொழில் இணையத்தின்முதற் பகுதி புதுக்கோட்டை, திருச்சி, பெருவழிச்சாலையின் மேற்குப் பகுதியில் 6கி.மீ-ல் ஆரம்பித்து 9 கி.மீ. வரை தொடர்ந்துள்ளது. இதற்குத் தேவையான 450 ஏக்கர் பரப்புள்ள நிலங்கள் கையகம் செய்யப்பட்டு 'சிப்காட்' நிறுவனத்தின் பொறுப்பில் உள்ளது.

வளர்ச்சிப் பணிகளுக்கான தீவிர ஆய்வுதனை புனாவில் உள்ள கிரிலோஸ்கர் கன்சல்டிங் பொறியியல் துறை மேற்கொண்டு, தொழில் இணையத்திற்கான பிரதான அமைப்பு முறை ( Master Plan ) வரைபடம் அளித்துள்ளனர். இத்திட்டத்தில் தொழில் முனைவோருக்குத் தேவைப்படும் முக்கிய வசதிகளான இடவசதி, உள் இணைப்புச் சாலைகள், தண்ணீர் வசதி, மின் இணைப்பு, சாலைத் தொடர்புகளுடன் துணைத் தேவைகளான பரிசோதனைக் கூடங்கள், செய்தித் தொடர்பு வசதிகள், வங்கி வசதிகள், மனமகிழ் மன்றம், காவல் நிலையம், தீ அணைப்பு நிலையம், விளையாட்டுத் திடல், சிப்காட் நிர்வாகக் கட்டடங்கள், மேல்நிலைத் தொட்டிகள், வடிகால் குடிநீர் வசதிகள், விருந்தினர் மாளிகை போன்றவை இடம் பெற்று சுமார் ரூபாய் 155 இலட்சத்திற்குத் தொழில் இணையத்தின் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் இத்தொழில் இணையத்தின் சிறப்புத்தன்மை கருதியும், கிடைக்கப் பெறும் சலுகைகளின் காரணமாகத் திட்டம் இறுதி வடிவம் பெறும்



## ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்பு

ஆவுடையார்கோவில வட்டாரத்திலுள்ள பேரானூர் என்னும் கிராமத்தில் ரூ. 40 இலட்சம் செலவில் ஒரு மின் விசைத்துறை அமைப்பு, கூட்டுறவுத் துறையால் அமைக்கப்பட்டு வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள 100 ஆதி திராவிடர்களுக்கும், 100 இதரர்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.



முன்பே ஆட்டோமொடிவ் கேஸ்டிங் லிமிடெட் நிறுவனம் 80 ஏக்கரும் எப். சி. அலாய் ஸ்டீல்ஸ் (பி) லிமிடெட் நிறுவனம் 5.63 ஏக்கரும், டெக்னோ அலாய்ஸ் (பி) லிமிடெட் நிறுவனம் 5 ஏக்கரும், ஜெம் ஸ்டீல்ஸ் (பி) லிமிடெட் நிறுவனம் 5 ஏக்கரும் தொழில் தொடங்க இடம் கேட்டுள்ளனர். அதில் ஆட்டோமோடிவ் கேஸ்டிங் நிறுவனமும் எப். சி. அலாய் ஸ்டீல்ஸ் நிறுவனமும் இடம் பெற்றுக் கொண்டு, தொழிற்சாலைக்கான கட்டுமானப் பணியும் தொடங்கப்பட்டுள்ளது. மின்வசதிக்காக மின்சார வாரியத்திற்கு 10 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு 110/11 கே. வி. துணை மின் நிலையம் அமைப்பதற்கான ஆரம்ப வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக வெகு விரைவில் அதிகமான தொழில் முனைவோர் முன்வர சாத்தியக் கூறுகள் அதிகப்பட்டுள்ளன. எனினும், தொழில் முனைவோரை ஊக்குவிக்க ஏப்ரல் மாதத்தில் தொழில் முனைவோர் ஊக்குவிக்கும் முகாமும் (Enterpreneurial development programme) மே மாதத்தில் தொழில் முனைவோர் ஒன்று கூடிக் கலந்துரையாடும் கருத்தரங்கும் (Get to gether function) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

கட்டுமானப் பணிகளையும் தொழில் இணையத்திற்கான வளர்ச்சிப் பணிகளையும் இவ்வாண்டு ஜூன் தொடங்கி வெகு விரைவில் முடிக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. தொழில் இணையம் அமைப்பினை இறுதி வடிவமைப்பு செய்து, இவ்வாண்டு இறுதிக்குள் இத்தொழில் இணையத்தின் முதற் பகுதியினை இயக்க வடிவம் பெற எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## செயற்கை இழைப் பின்னல் துணித் தொழிற்சாலை








நைலான் வலைகள் டயர்கள், பாரசூட்டுகள் போன்றவற்றிற்குப் பயன் படுத்தக் கூடிய நைலான் இழைப் பின்னல் துணிகளை உற்பத்தி செய்யக் கூடிய மாபெரும் தொழிற்சாலை ஒன்றினை, சென்னை மணலியில் உள்ள ஸ்ரீ ராம் ஃபைபர்ஸ் லிமிடெட் நிறுவனத்தினர், புதுக்கோட்டைக்கு அருகில் உள்ள விராலிமலையில் நிறுவியுள்ளனர்.

இந்தத் தொழிற்சாலைக்காக அந்நிறுவனத்தினர் 20 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தத் திட்டமிட்டு முதற்கட்டமாக 6 ஏக்கர் நிலத்தைக் கையகப் படுத்தி, வேலை தொடங்கியுள்ளனர். இந்த ஆலைக்கான முதலீடு ரூபாய் 5 கோடி.

இந்தத் தொழிற்சாலை பெரும்பாலும் இயந்திரமயமானதாக இருந்தாலும் 300 பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். இதுதவிர, இதன் உப தொழில்கள் மூலம் 700 பேருக்கு மேல் வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

பின்தங்கிய பகுதிகளை முன்னேற்ற வேண்டும் என்ற அரசின் கொள்கைக்கேற்ப, சமுதாயப் பொறுப்புக்களையுணர்ந்து, மிகப் பின்தங்கிய பகுதியான விராலிமலையில் இத்தொழிற்சாலை நிறுவப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



# நான் கண்ட திரு.வி.க.

கவியோகி சுத்தானந்த பாரதியார்

திரு.வி.க.வை நினைத்தால் எத்தனையோ எண்ணங்கள், எத்தனையோ வண்ணங்கள் எழுந்து மிளிர்கின்றன. பாரதியார் பாட்டுத் திறத்தாலே நாட்டை எழுப்பினார். திரு.வி.க. மல்லிகைத் தென்றல் போன்ற இனிய உரைநடைத் தமிழைப் பரப்பி, நாட்டினர் உள்ளத்தைக் கவர்ந்தார். திரு.வி.க. சைவ சித்தாந்தத்திலும் சேக்கிழாரின் அருள் மணங்கமழும் தமிழிலும் ஆழ்ந்த பயிற்சியுடையவர். கதிரைவேல் பிள்ளை, தணிகாசலமுதலியார், யாழ்ப்பாணம் சுவாமிநாத பண்டிதர், திருக்குறள் சிதம்பர முதலியார், மறைமலையடிகள், பாம்பன் சுவாமிகள் ஆகிய புலவருடன் பழகிப் பழந்தமிழ் சுவைத்த புது நடைத் தமிழர்.

நான் 'சுயராஜ்யா' நாளிதழ் ஆசிரியராயிருந்தபோது அடிக்கடி, திரு.வி.க.வுடன் மறைமலைஅடிகளைப் பார்த்துத் திருமந்திர ஆராய்ச்சி செய்வதுண்டு. அந்த ஆராய்ச்சியின் பயனாகவே எனது திருமந்திர விளக்கம் எழுந்தது. அதை'நவசக்தி'யில் வாரா வாரம் வெளியிட்டுவந்தார் திரு.வி.க. ஒருநாள் மறைமலையடிகள் முன்னிலையில் இத் திருமந்திர விளக்கம் நடந்தது.

இத்தவம் அத்தவம் என்று பேரிடும்
பித்தரைக் காணின் நகும்எங்கள் பேர் நந்தி
எத்தவம் ஆகிலென்? எங்கு பிறக்கிலென்?
ஒத்துணர் வார்க்கு ஒல்லைஊர் புகலாமே

என்ற திருமந்திர நுட்பத்தை நான்கு மணி நேரம் ஆராய்ந்த பிறகு - இராயப்பேட்டை முனிவர், ''திருவள்ளுவரே விளக்குகிறார் கேண்மோ'' எனக் குரலெடுத்தார்.

ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான்; மற்றையான்.
செத்தாருள் வைக்கப்படும்.

காலத்திற்கும், மக்கள் முன்னேற்றத்திற்கும் ஒத்த, ஒற்றுமை வழியை அறிபவனே உயர்நலம் பெறுவான்.

எவ்வ துறைவ துலகம் உலகத்தோ(டு)
அவ்வ துறைவ தறிவு

இந்தக் காலம் சாதிசமய வேறுபாடுகளை-பழைய மாமூல்களை மீறி எல்லாரும் ஓர் குலம் என்ற உணர்வுடன் முன்னேறுகிறது. அந்த முன்னேற்றத்தை நாம் போற்றுவோம் என்றார்.

### பெரியார் இடி முழக்கம்

இந்த நிலையில் இராமசாமிப் பெரியார் அங்கே தோன்றினார். அவரை மறைமலையடிகள் புன்னகையுடன் வரவேற்றார்.

''பேசுங்க பேசுங்க -- உலகப் போக்கை அறிந்து எல்லாரும் ஒத்து வாழ வேண்டும். இதுதானே திருக்குறள், திருமந்திரம் எல்லாம் சொல்லுவது! ஒரு சாதி, ஓர் இனம் முன்னேறி அதிகாரத்தைப் பிடித்துக்கொண்டு, மற்றவரைக் கிழே தள்ளினால்,பார்த்துக் கொண்டிருப்பதா! எல்லோரும் ஒத்துக்கூடி அவரவருக்குரிய உரிமையும் பெருமையும் தரவேண்டும் அல்லவா? அதைத்தான் **சுயமரியாதை** என்று நான் சொல்லுகிறேன்'' - என்று அடித்துப் பேசினார்.

### பிறப்பு சிறப்பு

திரு.வி.க. : ''அதுதகவே- பிறப்பு ஒக்கும் எல்லா உயிருக்கும்; ஆனால் **சிறப்பு** ஒவ்வாது. அவரவர் கல்வி கேள்வி, தொழில் எழிலுக்கேற்ற உயர்வு வேண்டியதுதானே''என்றார்.

பெரியார் குரலை உயர்த்தினார்: ''நீங்க என்ன மந்திரம் தந்திரம் பேசினாலும் சரி-சுதந்தரம் வேண்டும். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்றாரல்லவா வள்ளுவர்.''

திரு.வி.க: ஆம், உண்மை.

பெரியார்: அப்படி வாருங்க - ஒருத்தன்

நான் மட்டும் உயர்சாதி - இன்னொருவன் கீழ் சாதி என்னலாமா?

திரு.வி.க: கூடாது - சாதிமத வேறுபாடுகளை மீறிக் காலவெள்ளம் ஒருமை அலை வீசிப் பாயுதே...

பெரியார்: அப்படிவாருங்க - 'ஒருமை'-அருமையான சொல் - ஒருமையே பெருமை..பின்னே நான் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் பேசும்போது காஞ்சி மாநாட்டிலே ஏன் முகம் சுழித்தீர்? தலைமை வகித்தவர் நீர்.

திரு.வி.க: யான் யாது செய்வேன்?

பெரியார்: யாது! யாது!- மோது! வேறுபாடுகளை மோதி கீழே விழுந்தவனை மேலே ஏற்றும், முதலியாரே!

**தன்னறிவு**

மறைமலையடிகள்: அமைதி! அமைதி! திருமூலரே பேசுகிறார்;கேண்மோ தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை நான் பெற்ற செல்வம் பெறுக இவ்வையகம்-இந்த இரண்டு கருத்துகளும் பொருத்தமாகும். அரசியலாயினும், அருளியலாயினும் **தன்னறிவு, தன்னுணர்வு, தன்மானம் வேண்டும்**— இனித் தமிழன் எவனும் தாழ்வுணர்வுடன் கைகட்டி நிற்கமாட்டான். வள்ளலார், சாதியிலே மதங்களிலே அலைந்து வீணான மனிதருக்கு வீதியிலே அருட்சோதி விளையாடல் புரிதலைக் காட்டுகிறார். மூடமந்திரம் இல்லை. மற்றவனை இறக்கித் தன்னையே உயர்த்தும் சூழ்ச்சி இல்லை!

திரு.வி.க.: தகவே தகவே - தாழ்ந்தவர் உயரும் காலம் வந்தது - ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் நன்றே நினைமின் - எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்போம்.

பெரியார்: நினைத்தால் போதுமா - செயலுக்கு வாங்க"-என்று எழுந்தார்.

மறைமலையடிகள் அம்பலவாணர் வழிபாட்டில் புகுந்தார். திரு.வி.க,

''நின்னாவார் பிறரின்றி
நீயே யானாய்
நினைப்பார்கள் மனத்துக்கோர்
வித்தும் ஆனாய்''

என்ற அப்பர் திருத்தாண்டகத்தை மெல்லிய குரலிலே பாடி வணங்கினார்.

மறைமலையடிகள், ''சிந்தனை நின்றனக்காக்கி'' என்ற திருவாசகம் பாடி மலர் தூவி "நமச்சிவாயவாழ்க நாதன் தாள்வாழ்க"என்று வணங்கி வந்து திரு.வி.க.வை அருகிலே அமர்த்தி உணவு கொண்டார். முடிவிலே,

''இன்றெனக்கருளி-இருள்கடிந்து உள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிது மற்றின்மை''

என்ற திருவாசகத்தைப் பாடி திரு.வி.கவுக்கு விடை கொடுத்தார். அவருடன் நானும் ''இமைப்பொழுதும் என் நெஞ்சின் நீங்காதான் தாள்வாழ்க'' என்று விடை பெற்றேன்.

**காந்தி அன்பு**

திரு.வி.க. எல்லாரிடமும் நல்லாறு நடந்து அன்பைப் பெறுவார். யாரையும் கடிந்து கூறார். முதலில் 'திலகர் காங்கிரசில்' தீவிரப்பட்ட முதலியார், திலகர் காந்தியின் கையில் நாட்டை விடுத்து மறைந்ததும், அவர் மகாத்மா காந்தியிடம் காதல் கொண்டார். ''மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்'' என்ற நூல் அவருக்கு அழியாப் புகழை அளித்தது. ''மெய்ம்மையாம் உழவைச் செய்து, பொய்மையாம் களையை வாங்கி, தகவெனும் வேலியிட்டு, நாட்டுரிமைப் பயிரை வளர்த்தவர் காந்தியடிகள்'' என்று ஒவ்வொரு கூட்டத்திலும் அவர் பேசினார். எல்லாரிடத்திலும் அவருக்கு உருக்கமான உள்ளன்புண்டு.

**பாரதியாருடன்**

என் அரிய வீரத் தோழர் வ.வே.சு.ஐயரை அவரே வரவேற்று 'தேசபக்தன்' நாளிதழை நடத்த வேண்டினார். புதுவையிற் புகுந்த பாரதியாரைச் சென்னையில் வரவேற்றார், திரு.வி.க. ''ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே'' என்ற பாரதி பாட்டில் திரு.வி.க. உருகினார். திரு. வி. க. முதன்மையாக வாடியா, சக்கரைச் செட்டியார் - ஆகியோருடன் தொழிலாளர் இயக்கத்தில் ஈடுபட்டார். 1919ஆம் ஆண்டு டிராம்வே தொழிலாளர் சங்கத்திலே அவர் பேசும்போது, பாரதியாரை ''விடுதலை'ப் பாட்டுப் பாடச் சொன்னார். அப்போதுதான் பிரிட்டிஷ் அரசாங்கம் ரௌலட் சட்டம் போட்டு, இந்தியர் வாயை அடக்க முயன்றது. அதை எதிர்த்து மகாத்மா





20-3-1983 அன்று மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த பொன்னமராவதியில் புதிய தீயணைப்பு நிலையத்தை திறந்து வைத்தார்கள். இந்த புதிய தீயணைப்பு நிலையத்தினால் 30க்கு மேற்பட்ட கிராமங்களும், 75 தொழிற்பேட்டைகளும் சுற்றுப்புறத்தில் பயன் அடைகின்றன.

நாட்டில் எங்கும் சத்தியாக்கிரகப் பவனி நடத்தினார். சென்னையில் நானும் அதில் கலந்து கொண்டேன். திரு.வி.க. என்னையும் பாரதியாரையும் அந்த ஊர்வலத்திலே பாடவைத்தார். அந்தப் பெரும் பேரணி பக்தஜன சங்கத்தில் முடிந்தபோது பாரதியார் ''முருகா முருகா'' என்ற ஆவேசப் பாட்டைப் பாடினார்.

''அடியார் பலரிங்குளரே
அவரை விடுவித்தருள்வாய்
முடியா மறையின் முடிவே - அசுரர்
முடிவே கருதும் வடிவேலவனே.

முருகா முருகா முருகா''

என்று பாடும்போது அப்பெரிய கூட்டம் ''முருகா முருகா - நாட்டுக்கு விடுதலை தா'' என்று ஆர்த்தது இன்னும் என் காதில் ஒலிக்கிறது.

**நட்புக்கினியார்**

திரு.வி.க.நட்புக்கு இனியார். அவர் பேச்சுக்கு நமது தமிழுலகில் மட்டுமன்று தமிழறியாதார் கூட உருகினர். அன்னிபெசண்டு அம்மையாரின் ஓம்ரூல் இயக்கத்தில் திரு.வி.க.வின் குரல் ஓங்கி ஒலித்தது. அவர் பேச்சு தோற்றுவாய், குறித்த பொருளமைதி, முடிப்பு, தொகுப்புரை என்ற ஒழுங்கில் நிரல்பட அமையும். பிறர்மனம் புண்படாமல் கருத்தை உணர்த்தி உணரவைப்பதில் திரு.வி.க இணையற்றவர். பெண்மையின் உயர்வை அவர் பேசும்போது, ஆண்மையும் பெண்மையை அவாவும் ஆர்வம் பிறக்கும்.

**மூன்று குறிக்கோள்**

1927 சென்னை காங்கிரசில் நானும் வரவேற்புக் குழுவில் இருந்தேன். தேசபந்து சீனிவாச ஐயங்காரே முன்னின்று அதைச் சிறப்பாக நடத்தினார். அவர் என்னைத் தூதனுப்பி திரு.வி.க.வை காங்கிரஸ் மேடைக்கு அழைத்தார். திரு.வி.க.,

''என் உள்ளம் மூன்று குறிக்கோள் நிறைவேறவே துள்ளுகிறது.

1. சாதி சமய வேறுபாடற்ற தூய ஒருமைப்பாடு நம்மவரை ஒன்று கூட்ட வேண்டும். (2) பெண்மை தாய்நாட்டிலே பெருமை பெறவேண்டும். பொதுநல இயக்கத்தில் பெண்மை முன்னணி வகிக்க வேண்டும். (3) ரஷ்யா போலத் தொழிலாளர் எழிலோங்கி விளங்க வேண்டும்.

விஞ்ஞானக் கலைகளெல்லாம் தமிழிலே விளங்க வேண்டும். இயல் இசை நாடகத்துடன் தொழில்முறை அறிவியலில் தமிழ் முன்னேற வேண்டும்'' என்று முழங்கினார் திரு.வி.க. அவரது இனிய தமிழ், அரசியல் மேடையில் யாழும் குழலும் போலும்!

**திருக்குறள்.**

திருக்குறளை உலக நூலாகக் கருதி வாழ் வாங்கு வாழ்ந்து காட்டியவர் திரு.வி.க. பிளவும் பிணக்கும் சழக்கும் சள்ளையும் இன்றி நாடு கூடி வாழத் திருக்குறளே வழிகாட்டி என்பது திரு.வி.க. முடிபு - நாடென்பது நாடாவளத்தது -

'தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச் செல்வரும் சேர்வது நாடு' என்பது திரு.வி.க. உள்ளம். ''நவசக்தி, புதிய ஆற்றல் எழுந்துவிட்டது. அது தொழிற்சங்கமாக விளங்குகிறது. தொழிலே சக்தி. தொழிலாளரே பாரத தேவியின் ஆயுதங்கள், தொழியக்கமே நவசக்தியின் எழுச்சி. உலக முன்னேற்றமும், உலகச் சமாதானமும், ஒருமையும் பெருமையும் தொழிலாளர் முன்னேற்றத்தில் உள்ளன'' என்பது திரு.வி.க.வின் கருத்தாகும்.





# தமிழின் முத்து! கவிதைக் கொத்து!

## கவிஞர் ஆற்றலரசு

மூங்கிலில் விளைந்த முத்து
மூத்தநம் மொழியின் வித்து
ஓங்கிய மீசைக் கொத்து
உயர்ந்தது அழகின் சொத்து
ஆங்கவன் பாடற் சித்து
ஆய்ந்தது தமிழை ஒத்து
தேங்கிய திறனை மத்து
திரட்டியே தந்த சத்து!

குடும்பத்தில் விளக்கை ஏற்றி
குமுகாய நெறியை மாற்றி
படுந்துயர் வாழ்வி லாற்றி
பைந்தமிழ் உயிராய்ப் போற்றி
கொடுமைக்குப் பாடல் சாற்றி
கொள்கையில் தமிழ்த்தே னூற்றி
ஒடுக்கினான் வஞ்சர் தம்மை;
ஒதுங்கினோர் உயரச் செய்தான்!

சொல்லிலே அமுதைத் தேக்கிச்
செயலிலே பயனை ஊக்கி
நெல்லென விளைவை ஆக்கி
நெறியிலே அச்சம் நீக்கி
அல்லலில் எதிர்த்துத் தாக்கி
அதிகாரக் கொடுமை போக்கி
மெல்லவே அடிமை ஓட்டி
மேன்மையை நமக்கே தந்தான்!

போற்றியே பாடல் தந்தான்
பூந்தமிழ் வளர்வ தற்கே!
வேற்றுமை உணர்வு தன்னை
வேருடன் சாய்த்து நின்றான்!
சாற்றினான் 'தமிழே ஓங்கும்;
சாகாமல் வாழு' மென்றே!
ஆற்றுவான் ஆற்றல் காட்டி!
ஆக்குவான் அவன்போல் இல்லை!

குயிலிசைப் பாடல் நெய்து
குளுமையைச் சொல்லில் பெய்து
மயிலதன் அழகை வைத்து
மட்டிலாக் கவிதை தைத்துப்
பயிலவே நூலைச் செய்து
பழமையின் மடமை கொய்து
பயிரென விளைவைத் துய்த்துப்
பயனுடைப் பாடல் தந்தான்!



# ஏழை வாழ்வில் ஏற்றந்தரும் பனைத் தொழில்..

புதுக்கோட்டை மாவட்டத்தில் சற்றேறக்குறைய 5 இலட்சம் பனைமரங்கள் உள்ளன; பனை ஓலைகொண்டு, பற்பல வண்ணங்களிலும்வடிவங்களிலும் கூடைகள், கொட்டன்கள், பெட்டிகள், தடுக்குகள் செய்வது, செட்டிநாட்டில் பரம்பரையாக வளர்ந்தோங்கிய கலை. எனினும் புதுக்கோட்டை மாவட்டத்தில் பனைத் தொழில்கள் பல்கிக் கிளைத்து வளரவில்லை. எனவே ஏழைகளுக்கும், பனைத் தொழிலாளர்களுக்கும் வாழ்வளித்து, அவர்களின் பொருளாதார நிலையை வளரச் செய்ய வேண்டும் என்னும் கருத்தில் தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை இணையத்தின் கீழ், புதுக்கோட்டைத் திருக்கோகர்ணம் அருகில் உள்ள கோவில்பட்டியில் பனைப் பொருள் பெருவளத் திட்டம் 1.12.77ல் தொடங்கப் பட்டுச் செயல்படுகிறது.

இந்த இணையத்தின் கீழ் 16 பனைத்தொழில் கூட்டுறவுச் சங்கங்களும், ஒரு மகளிர் பனை ஓலை கூட்டுறவுச் சங்கமும் இயங்கி வருகின்றன.

இவைகளில் 2805 பேர்கள் (பரம்பரையாக பனைத் தொழில் செய்பவர்கள்) அங்கத்தினர்களாகச் சேர்ந்து வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

கோவில்பட்டி பனைப்பொருள் பெருவளத் திட்டத்தில், பிரஷ் செய்தல், ஓலைப் பொருட்கள், நார்ப்பொருட்கள் செய்தல், பாம்கோலா, பாம்டா தயாரித்தல் ஆகியவற்றில் 150 நபர்கள் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர். இக்கிளைக்கு கோவில்பட்டி பணிப் பகுதியில் கூடங்கள் அமைக்க தமிழ்நாடு அரசு 10 ஏக்கர் நிலம் இனாமாக வழங்கியுள்ளது.

பம்பாய் கதர் கிராமத்தொழில் குழுவின், நிதி உதவி பெற்று தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் 1981-82ஆம் ஆண்டுவரை 325 நபர்களுக்கு பனைஓலை, பனைநார், பனந்தும்பு, தாழை மடல், பதநீர் இறக்குதல் பனை வெல்லம் காய்ச்சுதல் ஆகியவற்றில் 3 மாத குறுகிய காலப்பயிற்சி 20 இடங்களில் நடத்தப்பட்டது. இதன்மூலம் ரூ.60,000 - பயிற்சி உதவித் தொகையாக வழங்கப் பட்டுள்ளது.





## இந்தியச் செலாவணி ஈட்டும் தும்பு

புதுக்கோட்டை பனைத் தொழில் பெருவளத் திட்டத்தின் கீழ் கோவில்பட்டி தும்பு தயாரிப்பு அலகில் தயாரிக்கப்படும் பனந் தும்பு நல்ல தரம் வாய்ந்ததாக உள்ளது. இங்கு தயாரிக்கப்பட்டு இங்கேயே 'சிப்பம்' செய்யப்பட்ட தும்பு, சென்ற ஆண்டில் முதல் தடவையாக ரூ. 1.57 இலட்சத் திற்கு லிவர்பூல் நகருக்கு ஏற்று மதி செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

மாவட்ட ஒருங்கிணைந்தஊரக வளர்ச்சித் திட்டத்தில் கடந்த 1981 -82 ஆம் ஆண்டுவரை பனை ஓலை, பனைநார், பனந் தும்பு, தாழை மடல் ஆகியவற் றில் 30 இடங்களில் 2.5 இலட்ச ரூபாய் செலவில் பயிற்சி நடத் தப்பட்டது.

1982-83ல் 13 ஊராட்சி ஒன்றி யங்களில் உள்ள 20 இடங்களில் 400 நபர்களுக்கு 3.75 இலட்சம் செலவில் பயிற்சி நடத்தப்பட்டது.

பனை ஓலைத் தொழிலுக்கு 3 மாத காலத்திற்கும், பனை நார், பனந்தும்பு, தாழைமடல் ஆகிய வற்றிற்கு 6 மாதகாலப் பயிற்சி யும் அளிக்கப்படுகிறது.

பனந்தும்பு, பனைநார், பனை ஓலை, தாழைமடல் ஆகிய தொழில்களுக்கு 20 இடங் களில் 400 பேருக்கு 3,75,000 ரூபாய் செலவில் 3 மாதம் முதல் 6 மாதம் வரை பயிற்சி வழங் கப்பட்டது.

**மினி இறுதி சுத்திகரிப்பு நிலையம் —**

கோவில்பட்டி பனைப்பொருள்



திட்டத்தில் தும்புமினி இறுதிசுத்தி கரிப்பு அலகு ஒன்று 1.10.'81ல் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. வேதாரண்யம், வெள் ளப்பள்ளம் ஆகிய இடங்களிலி ருந்து தும்பு கொள்முதல் செய் யப்பட்டு, இவ்வலகுகளில் சுத்தி கரிப்புச் செய்து ஏனைய மாவட் டங்களிலுள்ள பனைப் பொருள் இணையங்களுக்கு அனுப்பப்படு கிறது.

இதில் 26 நபர்களுக்கு 1.10.81 முதல் 31.3.82 வரை 6 மாத காலம் பயிற்சி அளிக்கப்பட்டு தலா நபருக்கு மாதம் ரூ.100 - பயிற்சி ஊதியமாக வழங்கப்பட் டது. பயிற்சி பெற்ற இந்த நபர் களுக்கு இவ்வலகிலேயே வேலை வாய்ப்பும் அளிக்கப்பட்டு நபர் ஒருவர் தினம் ரூ.5 முதல் ரூ.7 வரை கூலிபெற்று வருகிறார்கள்.

ஏழைகள், கணவனை இழந் தோர், கைவிடப்பட்டோர், திக் கற்றோர், பனைத் தொழிலாளர் கள் ஆகிய பல்வேறு வகையினர் வாழ்விலும் பனைத்தொழில் ஏற் றம் நல்கும் என்பதில் ஐய மில்லை.

## இலுப்பூரில் செயற்கை வைரக்கற்கள்

**கோ**வை மாவட்டத்தைச் சேர்ந்த மேட்டுப் பாளையம் பகுதியிலிருந்து கிடைக்கப்பெற்ற கற்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் இலுப்பூரில் பட்டை தீட்டப்பெறுகின் றன. இத்தொழிலில் ஏறத்தாழ 10 ஆயிரம் பேர் ஈடுபட்டுள்ளனர். தினக்கூலியாக ரூ. 7 முதல் ரூ. 10 வரை பெறுகின்றனர். புதுக் கோட்டை மாவட்டத்தில் பரம்பூர், அன்னவாசல், கீழ்க்குறிச்சி, ராசாலுப்பட்டி, மலைக்குடிப் பட்டி, திருவாப்பூர், விராலிமலை ஆகிய பகுதி களில் 25 ஆயிரத்திற்கு அதிகமானவர்கள் குடிசைத் தொழிலாகச் செய்து வருகின்றனர்.

பட்டை தீட்டப்படும் மூலப்பொருள் உப்பு போன்று இருக்கும். அதைப் பல்வேறு முறை களில் பக்குவப்படுத்தி, முத்து முத்தாக எடுக்க வேண்டும். அடுத்து பட்டைதீட்டி மெருகு ஏற்ற வேண்டும். அவற்றிலிருந்து முதல் தரம், இரண்டாம் தரம் ஆகியவை பிரிக்கப்பட்டு விற் பனைக்கு அனுப்பப்படுகின்றன. இந்தச் செயற்கை வைரங்கள், புதுக்கோட்டை மாவட் டத்திற்கு தனிப் பெருமையை ஏற்படுத்தி வருவது உறுதி.









# மறுமலர்ச்சி காணும் சித்த மருத்துவம்

சென்னை அறிஞர் அண்ணா இந்திய மருத்துவ மனையில் சித்த அறிவியல் மேம்பாட்டுக் குழுக்கட்டடம் ஒன்று, ரூபாய் 5 லட்சம் செலவில் உருவாக்கப்பட்டுள்ளது. அதன் திறப்பு விழா முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் தலைமையில் தமிழ்ப் புத்தாண்டு நாளில் (14.4.83) நடைபெற்றது.

விழாவுக்கு வந்திருந்த அனைவரையும், மக்கள் நல்வாழ்வுத் துறைச் செயலர் திரு லட்சுமி காந்தன் பாரதி இ.ஆ.ப. வரவேற்றார். அப்போது அவர் குறிப்பிட்டதாவது:

''சித்த மருத்துவத்துறை நீண்ட நெடுங்காலமாக மங்கியிருந்தது. இந்தத் தருணத்தில் அதற்குக் கை கொடுக்கும் வகையில்—புத்துணர்வு அளிக்கும் வகையில் பல காரியங்களைச் செய்து வருகிறது இந்த அரசு.

''சித்த மருத்துவத்தில் பரம்பரை பரம்பரையாகப் பணியாற்றுபவர்களும் உள்ளனர்: தற்கால விஞ்ஞான முறையில் பயிற்சி பெறுபவர்களும் உள்ளனர். இருவரும் இரு கண்கள். இவர்கள் இருவரும் இணைந்து செயல்பட்டால் தமிழகத்திற்கு மட்டுமல்ல, இந்தியாவுக்கே சிறப்புகள் கிடைக்கும்.''

அடுத்து, தலைமை ஏற்றிருந்த முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் குறிப்பிட்டார்:

''சித்த மருத்துவம் காலத்தால் முந்தியது; கையாளுவதில் எளியது; பயனால் மிகுந்தது; விலையால் மலிந்தது. மங்கிக் கிடந்த—அழிந்து கொண்டிருந்த சித்த வைத்தியத்துக்கு மறுமலர்ச்சி தந்து - வளர்த்து வருகிறார் நமது முதல்வர். சித்த வைத்திய மேம்பாட்டுக் குழு, இருப்பிடம் இல்லாமல், பணி செய்ய முடியாமல் இருந்தது. இப்போது அதற்குப் பல லட்சக் கணக்கில் செலவு செய்து கட்டடம் கட்டித் தந்திருப்பதற்கு பொதுவாக தமிழக அரசுக்கும்-குறிப்பாக அதன் முதல்வருக்கும் நன்றி செலுத்த வேண்டும்.

''உலகமே சித்த வைத்தியத்தைப் பாராட்டுகிறது. பயன்படுத்தத் தொடங்கியுள்ளது. வல்லாரை என்னும் நமது தமிழ் நாட்டு மூலிகையை 1 கோடி ரூபாய்க்கு வாங்குவதற்கு ஜெர்மணி ஒப்பந்தம் செய்துள்ளது.

''மேல் நாட்டில் உணவுப் பட்டியல் வேறாகவும் மருந்துப் பட்டியல் வேறாகவும் இருக்கும். தமிழ்நாட்டில் உணவே மருந்து; மருந்தே உணவு. அரிசி, கம்பு சோளம், பாசிப்பருப்பு, உளுத்தம்பருப்பு, துவரம்பருப்பு ஆகிய அனைத்தும் மருந்து. மஞ்சள் மருந்து - கடுகு மருந்து - சீரகம் மருந்து.

''தமிழகத்தில் தற்போது பாளையங்கோட்டையில் சித்த மருத்துவக் கல்லூரி நடைபெற்று வருகிறது. இன்னொன்று விரைவில் மதுரை மாவட்டத்தில் உருவாக்கப்பட உள்ளது.''

நிகழ்ச்சித் தொகுப்பு :
—தமிழ்ப்பித்தன்

இந்த விழாவுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுப்பிய வாழ்த்துச் செய்தியை கி. ஆ. பெ. அவர்கள் படித்தார்கள். அந்தச் செய்தி வருமாறு:

''மன்னர்களாலும் மக்களாலும் வளர்க்கப்பட்டு வந்த சித்த மருத்துவம் இடையில் நலிவுற்றிருந்தது. அறிஞர் அண்ணா அவர்கள் பொறுப்பேற்றபின்னர்தான் சித்த மருத்துவத்தின்பால் அரசின் முழுக் கவனம் செலுத்தப்பட்டு, படிப்படியாக வளர்ச்சியுற்று வருகிறது.

''1980க்கு முன்னர் சித்த மருத்துவத்திற்கு 82 லட்ச ரூபாய் செலவிடப்பட்டது. தற்போது 243 லட்ச ரூபாய் வரை செலவு செய்யப்பட்டு வருகிறது. முன்பு மாவட்டத் தலைநகரில் உள்ள மருத்துவ மனைகளில் மட்டும் தான் சித்த மருத்துவப் பிரிவு செயல் பட்டது. தற்போது 210 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.''

மருத்துவக் கல்வி இயக்குநர் திருமதி லலிதா காமேஸ்வரன் அவர்கள், தமது உரையில் குறிப்பிட்டதாவது.

''மனித சமுதாயம் என்று உதயம் ஆனதோ அன்றே நோயும், மருந்தும் உருவாகிவிட்டன. சித்த மருத்துவர்களும் ஆங்கில மருத்துவர்களும் கருத்துகளைப் பரிமாறிக் கொண்டு - அவை மக்களுக்குப் பயன்படும் படிச் செய்ய வேண்டும்''

மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தமது உரையில் தெரிவித்தார்:

## கடைசி அட்டையில்...

'சுயமரியாதை இயக்கத்தின் ஒப்பற்ற கவி' எனத் தந்தை பெரியார் அவர்களால் போற்றப்பட்ட-'நமக்கோர் வால்டேர் கிடைத்து விட்டார்! நமக்கொரு ஷெல்லி கிடைத்து விட்டார்...' என்றெல்லாம் பேரறிஞர் அண்ணா அவர்களால் பெருமையோடு புகழப்பட்ட புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரின் பிறந்த நாளை (29-4-1891) நாம் நினைவு கூர்கிறோம்.

''பாட்டால் பரமனைத் தொழலாம்'' என்றிருந்த நிலைமாற்றிப் பாட்டாளிகளுக்காகவும் பாடிய சிறப்பு அவருடையது. அவருடைய கவிதைகளிலே தென்றலின் தண்மையைக் காணலாம்; புயலின் சீற்றத்தை உணரலாம்; தீயின் வெம்மையை அறியலாம். சொல்லாட்சியில் வெறும் ஜோடிப்புகளை அவர் அடியோடு வெறுத்தார்; அகராதி உதவியோடு படிக்க வேண்டிய அவசியம் தன் எழுத்துக்கு இல்லாமல் தரம்மிக்க புரட்சிக் கவிதைகளைப் படைத்தார்

புதுமைக்கவி பாரதியின் வழித்தோன்றலான இந்தப் புரட்சிக் கவிக்குப் பேரறிஞர் அண்ணா அவர்கள் முன்னின்று (25,000 ரூபாய்) நிதி வழங்கி அன்னாரின் தமிழ்க் கவிதைப் பணிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தார். சென்னையில் 29-7-1946ல் நடைபெற்ற இவ்விழாவுக்கு நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைமை தாங்கினார்.

பிறர்தொட அஞ்சிய நிகழ்ச்சிகளையெல்லாம் தமிழாலே தான் தொட்டுப் புரட்சிக் கவிஞரான அவர் பெயரில், திருச்சிராப்பள்ளியில் பல்கலைக் கழகம் கண்டு பெருமை கொண்ட தமிழக அரசு, ஆண்டு தோறும் அவருக்கு விழா எடுப்பதோடு சிறந்த தமிழ்க் கவிஞர்களுக்குப் பரிசும் வழங்கிச் சிறப்பித்து வருகிறது. அவர் புகழ் ஓங்குக!




''கடல் கடந்து வாழும் தமிழர்கள் எல்லாம் சித்த மருந்துகளைப் பயன்படுத்தி நன்மைபெற எண்ணுகிறார்கள். நான்கூட சர்க்கரை வியாதிக்கு எவ்வளவோ அலோபதிமருந்து சாப்பிட்டேன்; பயன் கிடைக்கவில்லை. தற்போதுவேப்பிலை, கறிவேப்பிலை, வில்வ இலை-துளசி இலை-நாவல் மர இலை ஆகிய 5 இலைகளையும் அரைத்துத் தின்று வருகிறேன். தற்போது பயன் தெரிகிறது. மிகவும் சுறுசுறுப்பாகப் பணியாற்ற முடிகிறது. நா வறட்சி இல்லை; களைப்பு இல்லை''.

''சித்த வைத்தியர்களும் ஆங்கில முறை வைத்தியர்களும் கலந்து பேசும் மாநாட்டைக் கூட்டினால், இன்றைய தலைமுறையினருக்கு மட்டுமல்ல - எல்லாத் தலைமுறையினருக்கும் இந்த மருத்துவ முறை பயன்படும்.''

அடுத்து உரையாற்றிய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு எச்.வி.ஹண்டே அவர்கள் தமது உரையில் தெரிவித்தார்:

''சித்த மருத்துவம் தற்போது வீறு நடை போட்டுக் கொண்டு முன்னேற்றப் பாதையில் போய்க் கொண்டிருக்கிறது.

'சென்னையில் 6.5 லட்ச ரூபாய் செலவில் மருந்து (மூலிகை) ஆய்வுக் கூடம் ஒன்று உருவாக்கப் கப்பட உள்ளது. மதுரையில் 20 லட்ச ரூபாய் செலவில் மண்டல மருந்தகம் ஒன்றைத் துவக்க உள்ளோம். மருந்து தயாரிக்கும் நிலையம் ஒன்றும் ஆரம்பிக்கப் பட உள்ளது.

''இந்த அரசின் ஆட்சி பல்வேறு துறைகளுக்கும் பொற்காலமாக அமைந்துள்ளது போல், சித்த மருத்துவத்திற்கும் இது பொற்காலம் தரும் ஆட்சியாகத் திகழ்கிறது''

சித்த வைத்திய மேம்பாட்டுக் குழுவின் செயலாளர் திரு. குமாரசாமி அவர்கள், தமது நன்றி உரையில் ''50 லட்ச ரூபாய் திட்டத்தில் மூலிகை மருந்து வாரியம் துவக்கப்பட்டுள்ளது. அதன் வாயிலாக ஜெர்மனியிடம் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது'' என்று குறிப்பிட்டார்.

சித்த வைத்திய முறை மீண்டும் தமிழகத்தில் செழித்து வளருகிறது என்பதை இந்த விழா உறுதி செய்தது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


கோ-ஆப்டெக்ஸ் கைத்தறி சேலைகள்
ஆயிரம் மலர்கள் பூத்து குலுங்கு
அழகோவிய சேலைகள்...
ண்ணைக் கவரும் கைத்தறித் துணிகள்
வண்ண வண்ண பட்டுச் சேலைகள் ஆடவர்
மகளிர் அனைவரும் விரும்பும் அருமை
புதுமை இழையும் ஆடைகள் ஆயிரம்
வகைகள்... அழகார்ந்த ரகங்கள்-
அனைத்தும் உண்டு !
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி

1-5-1983

Licence No. TN/MS(C)/PP-23

பதிவு எண். M. 8676

